free issue

# தமிழ் உலகம் London

அனைத்துலகத் தமிழ் சஞ்சிகை

இல. 5 March 2004

International Tamil Magazine

' உலகத்தமிழர் பொருளாதார உயர்வை ஊக்கிநிற்போம் '



## போரா? சமாதானமா?

## காதிர்காமர் பலிக்கடா ஆக்கப்படுவாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# futture homes

Mortgage Specialist



- Residential Mortgages
- Remortgages
- Commercial Mortgages
- Secured Loans
- Life Insurance
- Building Insurance
- Public Liability Insurance
- Personal Loans

We also do finance to purchase properties in Sri Lanka, Portugal, Spain, France etc.

குறைந்த வட்டியுடன் 95 வீதத்திற்கும் மேற்பட்ட வீட்டுக் கடன்களை (Mortgage) மிக இலகுவான வழிமுறைகளில் செய்துதரப்படும்,

போதிய வருமானம் குறைவு!
நிரந்தர முகவரி இன்மை!!
நீதிமன்றப் பதிவுகள்!!!
வங்கிகள் கடன் வழங்க மறுப்பு!!!!
அனைத்தையும் இலகுவாக்க காத்திருக்கிறோம்.



வெளிநாடுகளில் இருந்து வந்து பிரித்தானியாவில் வீடுவாங்க விருப்புகிறீர்களா, அனைத்து விடையங்களையும் எங்களிடம் விட்டுவிடுங்கள் : வீடு உங்களது ஆகிவீடும்.

மேலதிக விபரங்களுக்கு:- முரளி

**Futture Homes Ltd**
**Imex House, Oxgate Lane, London, NW2 7HJ**
**Tel: 0845 126 0622 / 020 8438 0615**
**Fax: 020 8438 0651**



# TRAVEL EXPRESS

we care in the air...

**Travel Agents & Foreign Exchange Worldwide**

- Cheapest fares worldwide
- Tickets delivered to your doorstep
- Select your seats while booking
- PTA/TOD available
- Air Sea Cargo/Hotel & Car hire
- Worldwide Tour Arrangements
- Emergency Travel Arrangements
- Inbound Tickets arrangements

**0870 085 4000 / 020 8537 1555**

Emergencies:
07939921680

Agent for ATOL Holder
Major Credit Cards Accepted
subject to conditions

5 Sheaves Hill Parade
Colindale
London NW9 6RS
Fax 0870 085 3000
E-mail: bobby@travelchoose.com
vgptrade@hotmail.com

SriLankan

Book and Confirm your tickets on-line through our website
**www.travelchoose.com**

**0870 085 2000**



Ticket collection over 14 location throughout the UK & Worldwide

LONDON

BIRMINGHAM

MANCHESTER

LEADS

ABERDEEN

EDINBOROUGH

**Express ticket delivery available one hour before check in**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உலகம்
London

தமிழ் உலகம்
இலண்டன்
அனைத்துலக தமிழ் சஞ்சிகை

Published by
TAMILULAGAM
London

நிர்வாக / பொறுப்பாசிரியர்
சுப்பிரமணியம் கிருஷ்ணதாசன்

ஆசிரியர்
வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

இணை ஆசிரியர்
பிரதிபா சபாநடேசன்

இணையாசிரியர் & வடிவமைப்பு
ஷர்மிலா ரெட்ணசிங்கம்

TAMILULAGAM
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom
Tel: 0044 20 8455 9001
Fax: 0044 20 8731 7870
E.Mail: tu@globallanka.co.uk

TAMILULAGAM
Meewella Building, 7th Floor
329 Galle Road
Colombo - 04,
Sri Lanka
Tel: 0094 112 59 1000
Fax: 0094 112 59 1003
E.Mail: globallanka@sltnet.lk

Printed by
ET Printer
20 Sir Chittampalam A Gardiner Mawatha,
Clombo 2, Sri Lanka


தமிழ் உலகம் வெளியாகும் நாடுகளுக்கான வருட சந்தா முற்பதிவு கட்டணங்கள்
(12 இதழ்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட)
(Annual subscription including postage)

**FOR 12 ISSUES**

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500/= |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New Zealand | : 30 NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |






**March** 2004

# சக பக்கங்களில்


**அரசியலும் தற்கால நிகழ்வுகளும்**
தாயகம் - பேரினவாதம் போருக்கு தயாராகிறது ........ 2
தமிழ் இனம் முன்னேறுவதற்கு ........ 5
உலகநோக்கு - அணு விஞ்ஞானி காதிர்கான் ........ 6

**பொருளாதாரமும் அதன் வலிமையும்**
தாயகம் - இலங்கையின் பொதுத்தேர்தல் ........ 8
உலகம் - ஒன்றிணையும் தமிழர் பொருளாதாரம் ........ 10

**கலையும் கலாசாரமும்**
தமிழ் நூல்களுக்கு ஒரு தேசிய காப்பகம் ........ 12
நூலாய்வு ........ 13

**நேர்முகம்**
செல்வம் அடைக்கலநாதன் ........ 14

**மருத்துவம்**
இசை தரும் தாக்கம் ........ 15

**மலையகம்**
மலையக அரசியல் பலவீனத்தால் ........ 16

**சமூகமும் சூழலும்**
மகளிர் பகுதி ........ 18

**காலமும் மாற்றமும்**
பிரம்மஸ்ரீ சோ. சிவகடாட்ச சர்மா ........ 20

**காட்சியும் கானமும்** ........ 22

**வாசகர் எண்ணங்கள்** ........ 24

**எண்ணும் எழுத்தும்**
மழலைகள் மன்றம் ........ 26
கவி வலம் ........ 28
குறுக்கெழுத்துப்போட்டி ........ 29
சிறுகதை ........ 30

**பொழுதும் ஓய்வும்**
உலக விநோதங்கள் ........ 32
தொழில்நுட்பம் - கனவுக்கருவி ........ 33
விளையாட்டு ........ 34
உலகமயமாக்கல் ........ 35
**விளம்பரமும் வியாபாரமும்** ........ 36




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரினவாதம் போருக்கு தயாராகின்றது!

இரண்டு தசாப்த கால இரத்தக் களரியை இரண்டு ஆண்டுகளாக இடம் பெறாமல் தடுத்து வைத்திருக்கும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஆயுள் முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றது. ஏப்ரல் 2ஆம் திகதி இதன் சவப்பெட்டிக்கு இறுதி ஆணியை இறுக்கும் நாளாக இருக்கலாம். இலங்கையின் கடந்தகால் நூற்றாண்டின் வரலாறு போருக்கும் சமாதானத்திற்கும் இடையிலான போரின் வரலாறாகவே இருந்துள்ளது. போரா சமாதானமா? என்ற கேள்வியை முன் வைத்து நடைபெற்ற தேர்தல்களில் சமாதானத்தை மக்கள் கோருவதும், மறுபுறம் ஆட்சியைக் கையில் எடுக்கும் சக்திகள் அதனை போருக்கு இட்டுச்செல்வதுமான வரலாறே கடந்த பத்து ஆண்டுகளின் உண்மையான வரலாறாகும். வரலாற்றிலிருந்து மனிதன் எதையும் கற்கவில்லை என்பதே மனிதவரலாறு என்பதை எடுத்துக்காட்டும் வரலாறாகவும் இது உள்ளது. இவற்றின் பின்னணியில் தேர்தல் அறிவிப்பும் ஆரவாரங்களும் கிளம்பியுள்ளன.

பேரினவாதமே இலங்கையில் பயங்கரவாதத்தை உருவாக்கும் வலிமை கொண்டது. புலிகள் இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்திலிருந்து 'இப்படியும் ஒன்று நடக்கலாமா?' என்று அந்த பேரினவாதம் விசித்திரமாகப் பார்த்தது. என்றுமே நிறைவேற முடியாத ஒரு விடயத்தை ஐ.தே.மு. அரசாங்கம் கையிலெடுத்துக்கொண்டுள்ளதாக நினைத்தது. தன்னால் தாங்க முடியாத சுமையை அரசாங்கம் தலையில் தூக்கி வைத்தக்கொண்டு திக்கு முக்காடுவதைக்கண்டது. எக்காளமிட்டது. சிறுபான்மையினர் தொடர்பான எந்த இறுதி முடிவும் எடுப்பதற்கு முன் பிரச்சினை எம்மிடம் வரவேண்டுமே என்று இயல்பான அகங்காரத்துடன் சபதம் எடுத்துக்கொண்டது. நாட்களை எண்ணிக்கொண்டு அன்றிலிருந்து இரவும் பகலும் பாராமல் இன்றுவரை உழைத்துக்கொண்டும் வருகின்றது. சமாதானக்கலைப்புக்கான அதிவேகப்பாதையில் செய்யும் பயணத்தில் எதிர்ப்பட்ட பாராளுமன்றத்தையும் அது கலைத்துள்ளது.

பேச்சுக்களுக்கு தயார் என்று புலிகள் பேசுவதெல்லாம் பம்மாத்து. போருக்குத்தயாரிப்பதற்கு கால அவகாசம் பெறும் முயற்சியே அது என்று கூறிக் கொண்டு பேரினவாதம் அதன் கைங்கரி



யங்களை 2002 பெப்ரவரி 22 ஆம் திகதியிலிருந்து புது உத்வேகத்துடன் ஆரம்பித்தது. அடுத்து, புலிகள் மீதான அரசின் தடையை நீக்கி சுமுகமான சூழ்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிக்க முனைந்தபோது பேரினவாதம் குறுக்கிட்டது. புலிகள் மீதான தடைநீக்கம், புலிகளை தடை செய்த ஏனைய நாடுகளுக்கும் முன்னோடியாக அமைந்து விடும் என்று எச்சரித்தது.

எச்சரிக்கைகள் பொருட்படுத்தப் படாமல் சமாதானத்திற்கு ஆணைபெற்ற அரசாங்கத்தின் முயற்சிகள் மறுபுறம் விடாப்பிடியாக முன்னெடுக்கப்பட்டன. நோர்வேயின் அனுசரனையுடன் சர்வதேச நகரங்களில் பேச்சுக்கள் முன்னேறிய போதும் பேரினவாதம் சும்மா இருக்கவில்லை.அவதூறுப் பிரசாரங்களை நடத்தியது. சண்டைக்கு ஆகும் செலவே சமாதான பேச்சுக்களுக்கும் ஆகிறது என்றது. சமாதான முயற்சிகள் ஊதாரித்தனமானவை என்று களங்கம் கற்பித்தது.

எச்சரிப்புக்களும், நச்சரிப்புகளும் புறக்கணிக்கப்பட்டது போல் தெரியவே பேரினவாதம் படையினரையும், புலிகளையும் ஆத்திரமூட்டி போரைத் தொடக்கும் நேரடி முயற்சிகளில் ஈடுப்பட்டது. படையினர் புலிகளை வலிந்து சண்டைக்கிழுத்து தாக்கினர். காஞ்சிரங்குடாவிலும், மானிப்பாயிலும், புங்குடுதீவு கடலிலும் நடந்தவை போக,சர்வதேச கடற்பரப்பில் வைத்து புலிகளின் சரக்குக்கப்பல்கள் நேரடியாகத் தாக்கி மூழ்கடிக்கப் பட்டன. சமாதானத்தை முறியடிக்கும் கைங்கரியத்தை பேரினவாதம் இரண்டு வழிகளில் முன்னேறி தடை செய்ய முனைந்தது. ஒரு புறத்தில் நிறைவேற்று அதிகாரங்களை முடுக்கி விட்டது. சமாதான ஆணை பெற்ற அரசை சிக்கல் பொறியில் மாட்டும் முயற்சிகள் தீவிரம் பெற்றன. குரங்குபாஞ்சான் முகாம் விடயத்தை பாவித்தும், வானொலி ஒலி பரப்பு கருவி இறக்குமதி விவகாரத்தைப் பாவித்தும், கிழக்கு மாகாணத்தில் கலவரங்களை தூண்டியும் நோர்வே தூதுவரை சீண்டியும், கண்காணிப்புக் குழுவை சந்தேகித்தும் காரியங்களை இலகுவாக்குவதற்கு பேரினவாதம் ஒற்றைக்காலில் நின்று செயற்பட்டது.

கலைவாணன்

இடைக்கால நிர்வாகம் ஒன்றிற்கான யோசனையை நவம்பர் மாதம் முதலாம் திகதி புலிகள் முன் வைத்த போது, அது தனி ஈழத்திற்கான முன்னோடி அமைப்பு என்று விமர்சித்தது பேரினவாதம். அத்துடன் தலைக்கு மேல் வெள்ளம் போகுமுன் தடுக்க வேண்டும் என அது அவசரம் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டைக்கருவிகளை அடக்கி வைத்து விடுவது சமாதானத்தை தொடக்கி வைக்கும் செயல் என்று சரியாகவே எடைபோட்ட பேரினவாதம் போர் நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்த வற்றை நவம்பர் 3 ஆம் திகதியன்றே அழித்து விட்டது. தேவைப்படும்போது சண்டையை ஆரம்பிப்பதற்கு தடையே இல்லை என்னும் சமிக்ஞை இதன் மூலம் போர் விரும்பிகளுக்குக் காட்டப் பட்டது.

சமாதானம் பேசுபவர் பாதுகாப்பற்றவராக்கப்பட்டார். போரை நிறுத்துவதாக ஒப்பந்தம் செய்த பிரதமர் கையில் படைகள் இல்லை. சமாதானம் என்று புறப்பட்ட உனக்கு படைகள் எதற்கு? என்று நக்கலாக கேட்கப்பட்டது போல இருந்தது. போருக்கான படைபலமற்றவர் போரை நிறுத்திப் பிடிக்கும் பணிக்கு விடப்பட்டார். வலு மிக்க எதிரியின் முன்னே நிராயுத பாணியாக நின்று சமாதானம் செய்யும் அபூர்வ மனிதர் அவர் என்று கருதப்பட்டாரா? அல்லது சண்டைத் தலைமையிடம் படையை விட்டு விட்டு மறுபுறம் சமாதானத் தலைமையிடம் பேச்சுக்கள் நடத்துவதை விட்டு வைத்தால், ஏக காலத்தில் இரண்டையும் நிகழச் செய்யலாம் என்று பேரினவாதம் திட்டமிட்டதோ?



தமிழ், சிங்கள கலைக்கூடல் நிகழ்வில் பேரினவாதம்!

யுத்தம் மூலம் சமாதானத்தை அடைய முடியாத போது சமாதானத் தின் மூலம் யுத்தத்தை அடையலாம் என்று கணக்கிடப்பட்டுமிருக்கலாம். எது எப்படி நடந்தாலும் முடிவில் யுத்தம் நடந்தால் போதும் என்ற திருப்தியில் பேரினவாதம் சிந்தித்திருக்கலாம்.

ஆனால், பொறியில் சிக்க மறுத்த சமாதானத் தலைமை பாதுகாப்பு அதிகாரங்கள் வேண்டுமென்று அடம் பிடித்தது. இதனை ஒரு வாய்ப்பான சூழ்நிலையாக கருதிய பேரினவாதம் பாராளுமன்றத்தைக் கலைத்தது. சில மத பீடங்கள் உட்பட,கல்விமான்கள் புத்திஜீவிகள் தெரிவித்த கருத்துக்கள் முற்றிலுமாக புறந்தள்ளப்பட்டு பேரினவாத அமைப்புகளின் கருத்துக்கள் மட்டும் ஏற்றுச் செயற்படுத்தப்பட்டன. வழமையில் மக்கள் முடிவுகளை புறந்தள்ளிவிட்டு ஆட்சி நடத்த முனையும் தலைமைகள், முரணான வகையில் மக்களின் முடிவுகளை அறியும் தேர்தலையும் அழைத்துள்ளமை விசித்திரம் தான். உண்மையில் மக்களின் தீர்ப்பை அறியும் ஆவலினால் அன்றி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காலாவதியாக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதனாலேயே தேர்தல் குறிக்கப்பட்டது என்பதை இலகுவாக ஊகிக்க முடிகின்றது.

தேர்தலொன்று நடத்தப்படுவது வரைக்கும் சமாதான முயற்சிகளை கட்டங்கட்டமாக சாகடித்து வந்த பேரினவாதம் இதே முயற்சிகளில் குறைந்த பட்சம் ஐம்பது ஆண்டுகளை யாவது செலவு செய்து வந்துள்ளது வரலாறு. அன்னியோன்னியத்துடன் சகவாழ்வு வாழ்ந்து வந்த இரு இனங்களுக்கிடையே சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்று திணித்து, சுதந்திரத்தின் பின் முதன் முறையாக சமாதானத்தை கெடுத்தது 1956 ஆம் ஆண்டின் பேரினவாதம். ஐக்கிய இலங்கையையும் சமாதான சகவாழ்வையும் வலியுறுத்தியபடியே ஒற்றையாட்சிப் பாராளுமன்றத்தைச் சுற்றிச் சுற்றி நின்ற தமிழர்களை பிரிந்து நின்று சிந்திக்கும்படி தூண்டியும், ஆட்சியதிகாரத்தில் பங்கு கேட்க வேண்டாமென்று விரட்டியும் இனக் கலவரங்கள் மூலம் சாதித்தது பேரினவாதம்.ஒரேயளவான மதிப்பெண்களைப் பெற்று ஒரே பல்கலைக்கழகத்தில், ஒரே மக்களாக கற்கக்கூடாது என்றும் பிரிந்து சிந்திக்கும் படியும் தரப்படுத்தல் முறையின் கீழ் உணர்த்தியது பேரினவாதம். இத்தொடர் விரட்டலில் இறுதியாக இன்று ஒரே நாட்டின் குடிமக்களாக வன்றி, இருநாட்டவர்களாக வாழும்படி கேட்டு நச்சரித்து வருகின்றது இன்றைய பேரினவாதம். இணைந்து வாழப்போகின் றோம் இடைக்கால நிர்வாகம் தாருங்கள் என்று கேட்டதற்குப் பதிலாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காலாவதியாக்குகின்றேன் பார்! என்று சவால் விட்டு, பெரும் பான்மையுடன் ஆட்சி நடத்திய



கிறிஸ் பற்ரனின் கொடும்பாவி எரிக்கப்படுகின்றது

அரசாங்கத்தைக் கலைத்து, தேர்தலை திணித்திருக்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டவரை விலக்கி வைத்து விட்டால் அத்தனையும் வெற்றிதான் என்று இரத்தவெறி பிடித்த பேரினவாதம் அலைவது தெரிகின்றது. அமைதியும், சமாதானமும் விளங்கும் ஐக்கிய இலங்கைக்கு என்றுமே எதிரியாக செயற்பட்டு வருவது இந்த பேரினவாதமே.

இவற்றின் பின்னணியில் தயாரிக்கப்பட்டு அரங்கேறும் நிகழ்வகளையே நாம் இன்று காண்கின்றோம். அதே வேளை, நாமும் புலிகளுடன் பேசுவோம், சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்ற பகட்டாரவார பேச்சுக்களும் இடைக்கிடையே கேட்கின்றன. புலிகளுடன் பேசுவோம் என்னும் தீர்மானம் உள்மனத்திலிருந்து எழுந்து வந்த ஆவலின் ஒரு வெளிப்பாடா? சமாதானத்தை விரும்பும் மக்களினதும், வெளியுலக் நிர்ப்பந்தத்தினதும் அழுத்தம் காரணமாக உச்சரிக்கப்படும் வார்த்தைகளா என்பது நோக்கப்படல் வேண்டும். புறச்சூழலும், மன அழுத்தங்களும் வெவ்வெறு திசைகளில் வளர்க்கப்படுகின்றன. இரு இனங்களும் இரு திசைகளில் முன்னேறுகின்றன. இந்த இலட்சணம் பேச்சுக்களுக்கு உகந்தசூழலை வழங்குமா? என்பது தெளிவாக ஆராயப்பட வேண்டியதாகும்.

நாம் புலிகளுடனும், இதர தமிழ்க் கட்சிகளுடனும் பேசுவோம் என்கின்றது பேரினவாதம். தம்மை மக்களின் ஏக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதம் தமிழர்களுக்கு மாத்திரமல்ல, முஸ்லிம்களுக்கும் தான்

**2001 – ஏப்ரல் 30 மாவனல்லையில் முஸ்லிம்களுக்கெதிராக பேரினவாதம் நடத்திய அழிப்புக்கள் தொடர்பான திரு மனோ கணேசனின் கருத்து இன்றும் பொருத்தமானது.**

சிறுபான்மை மக்களுக்கு எதிராக எதையும் செய்து விட்டு தப்பிவிடலாம் என்ற சிந்தனையை ஒரு தேசிய இயக்கமாகவே பேரினவாதிகள் நடத்திவருவது மாவனல்லை சம்ப வங்களின் மூலம் மீண்டும் நிருபண மாகியுள்ளது. சிறுபான்மை மக்களின் வளாச்சியை தடுத்து நிறுத்த வன் செயல்களைத்தூண்டி விட பேரின வாத அரசியல்வாதிகள் தயங்க மாட் டார்கள் என்பது மீண்டும் தெளிவாகி யுள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டிய பாதுகாப்பு படை யினர் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான வன்செயல்களை கண்டும் காணாதது போல் இருப்பதும், பல சந்தர்ப்பங்களில் வன்செயல்களில் நேரடியாகவே பங்கு பற்றுவதும் மீண்டும் வெளிப்பட்டுள்ளது. அதே வேளையில் இன்று நாட்டிலே நிலைபெற்று வரும் கொடிய பேரினவாத சிந்தனை தமிழ்மக்களுக்கு மாத்திரம் எதிரானது என்றில்லமால் இந்நாட்டிலே எண்ணிக்கையில் சிறுபான்மையினராக வாழ்ந்து வரும் தமிழர்கள் முஸ்லிம்கள் ஆகிய அனைவருக்கும் எதிரானது என்பது தெட்டத்தெளிவாக தெரிய வந்துள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் கொள்ளை, கடையுடைப்பு, தீவைப்பு, கொலை, கற்பழிப்பு ஆகிய பேரினவாத கொடுஞ்செயல்களை அவ்வந்த காலகட் டங்களிலே அரசாங்கங்களில் அங்கம் வகித்த தமிழ் அமைச்சர்களால் தடுத்த நிறுத்த முடியவில்லை. குறைந்த பட்சமா நடைபெற்ற சம்பவங்களுக்கு சூத்திர தாரிகளான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும் முடிந்திருக்கவில்லை.

தமிழ் பேசும் மக்களை மட்டுமல் லாது நியாய சிந்தை கொண்ட சிங்கள மக்களையும் படுகுழியில் தள்ளியி ருக்கும் பேரினவாத இயக்கத் திற்கு எதிராக உறுதியான நிலைப் பாட்டை எடுக்க வெண்டிய கட்டாயத்திலே இன்று இந்நாட்டு மக்கள் இருக்கின்றார்கள் என்பது யதார்த்தமான உண்மை.

பிரதிநிதிகளாக அங்கீகரிக்காத எவருடனும் பேசமாட்டோம் என புலிகள் தெரிவித்து விட்டனர். இந்த இரு தரப்பினதும் முரண்பட்ட நிலைப்பாடுகள் பேச்சுக்களுக்கு உகந்தனவா? போரை நிறுத்து வதற்கான பேச்சுக்கள் போரிடும் இரு தரப்புகளுக்குள் நடத்தப்பட வேண்டும். போரில் சம்பந்தப்படாதவர்களை வலிந்து இழுத்துக்கொண்டு பேசுவது எதற்காக? என்ற கேள்வியும், மறுபுறம் சமாதானமும் கூட நேர்மையான போக்கில் முன்னேறினால் ஒற்றையாட்சிக்கு ஆபத்தானதாகி விடும் என்ற நினைப்பும் இங்கே முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன. சண்டை தொடர்ச்சியாக நடந்தாலும் இதே ஆபத்து உண்டு என்பதும் பேரினவாதத்துக்குத் தெரியும்.

அடுத்து தன்னாட்சி அதிகாரசபை தனி ஈழத்திற்கு முன்னோடி என் கின்றது பேரினவாதம். ஆனால், அது கூட ஒரு இடைக்கால ஏற்பாடுதான், முழுமையான அதிகாரப்பரவலாக்கம் இணைப்பாட்சியே என்கின்றனர் புலிகள். இந்த இரண்டு நிலைப்பாடு களுக்குள்ளும் பாரிய இடைவெளி உண்டு. ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்று பேரினவாதம் அடித்துக் கூறுகின்றது. ஆனால், ஒற்றையாட்சிக் குள் எந்தத்தீர்வும் சாத்தியமில்லை என்கின்றது தமிழர் தரப்பு. இவ்வாறு அடிப்படை விடயங்களிலெல்லாம் முரண்பாடுகளே உள்ளன. இந்த நிலத்தில் ஐக்கியம் விளையுமா?

தலைமைகளிடம் தேசப்பற்று இல்லை. மக்களுக்கு பரந்த விழிப புணர்வு ஊட்டப்படுவதில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்னும் பெயரில் தமிழ் மக்கள் தமது நிலத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இதற் காக வடக்கில் மக்கள் உண்ணாவிரதம் செய்கின்றார்கள். தமது நிலங்கள், வீடுகள், தோட்டங்களிலிருந்து விரட் டப்பட்ட இந்த மக்களுக்காக தென்னி லங்கையில் போராட்டங்கள் நடைபெறு கின்றனவா? ஆனால் தமது காணிகளில் பயிர்செய்வதற்கு தேவையான உரத்தின் விலை அதிகரித்து விட்டதற்காக தனி யான உண்ணாவிரதத்தை தென்னி லங்கையில் செய்தார்கள். தமிழர் களுக்கு இடைக்கால நிர்வாகம் வழங் குங்கள் என்று கேட்டு தென்னிலங்கை யில் போராட்டம் ஏதும் இல்லை. ஒற்றை யாட்சி முறையை ஒழித்து, சமஷ்டி யாட்சி முறையை ஏற்படுத்தும்படி கேட்டு போராட்டங்கள் ஏதும் தென்னிலங்கை யில் நடைபெறுகின்றனவா? பரந்த மக கள் மட்டத்தில் சமாதானத்தை நோக் கிய நகர்வுகள் முன்னெடுக்கப்பட வில்லை. இதுவே வேதனையான உண்மை. அப்போ ஒன்பது மாதங்கள் தாயின் வயிற்றில் வளராமல் பிள்ளை யொன்று ஒரே நாளில் பிறக்கப போகின்றதா? நாமும் பேசுவோம்! சமாதானம் ஏற்படுத்துவோம்!! என்று பேரினவாதம் எது பற்றி கதையளக் கின்றது?


ஐ.தே.மு. அரசாங்கம் புலிகளுடன் இசைவிணக்கத்துடன் நடந்து கொள் கின்றது. இதனால் தனிஈழம் உருவாகப் போகின்றது. புலிகளை அடக்கி, உரிய இடத்தில் வைப்பதற்கேற்ற சிங்கள, பௌத்த தலைமை வேண்டும். நாடு பிரிவதை தடுக்க வேண்டும் என்னும் சிந்தனைகளை தென்னிலங்கை மக களுக்கு ஊட்டுபவர் யார்? அவரே அருவமாக நிற்கும் திருவாளர் பேரின வாதம். சுதந்திரம் பெற்ற பின் தென்னி லங்கை கொண்டிருந்த வரலாற்றின் பின்னணியிலும், கடந்த இரு வருடங் களாக அது தோற்றுவித்து வரும் முரண்பாடுகளின் பின்னணியிலும், பேரின வாதம் அமைத்து வரும் கூட்டுக்களின் பின்னணியிலும் ஏப்ரல் 2 ஆம் திகதிய தேர்தல் தீர்வு தரப்போகின்றது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினைத் தொடர்ந்து வந்த பொதுத்தேர்தல்களி லெல்லாம் தமிழ்மக்கள் தமது நிலைப் பாட்டினை தென்னிலங்கைக்கும், அனைத் துலகத்திற்கும் தாராளமாகவே தெரி வித்து விட்டனர். எதிர்வரும் தேர்தல் களிலும் அவர்கள் அதனையே மீண்டும் மீண்டும் தெரிவிப்பார்கள். ஆனால், முக்கியமாக ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் தென்னிலங்கை தமிழர் தொடர்பான தனது கருத்தை தமிழ்உலகத்திற்கும் அதே வேளை முழு உலகத்திற்கும் சந்தேகத்துக்கிட மின்றி தெரிவிக்கப்போகின்றது. இதன் முடிவுகளே புலிகளுடன் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆயுளைத் தீர்மானிப்பதாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நெறி தவறாது வாழ்வதற்கு வழிகாட்டும் திருக்குறளை எல்லோரும் கற்கவேண்டும் என்று அறிஞர்கள் வலியுறுத்துவர். எனினும் திருக்குறளை எவ்வாறு கற்று விளங்கிக் கொள்வது என்பதில் பலர் சங்கடப் படுவதுண்டு.

இந்த நிலையை மாற்றி எல்லோரும் திருக்குறளை இலகுவாகக் கற்று விளங்கிக் கொள்ளலாம். அதற்கு தமிழ மொழி அறிவு இல்லாமை ஒரு தடையல்ல என்று திருக்குறளை இலகுவாக அனைவரும் கற்பதற்காக வழி அமைத்துக் கொடுக்கின்றார் சிங்கப்பூர் தமிழ் அறிஞர் இ.வி.சிங்கன். உலகின் பல நாடுகளுக்கும் சென்று திருக்குறள் வகுப்புக்களை நடத்தி வருபவர் இவர்.




10 வழிமுறைகளை இதற்கென வகுத்துள்ள அவர் ஒவ்வொரு வழி முறையையும் தெளிவுபடுத்த ஒவ்வொரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த வழிமுறைகளினூடாக திருக்குறளை கற்கும் செயல் இலகுவாக்கப்பட்டுள்ளதாகவும், வாரம் ஒரு குறள் வீதம் வருடத்திற்கு 52 குறள்களையும் - மொத்தமுள்ள 1330 குறள்களையும் ஒருவர் 25 வருடங்களிலாவது கற்று முடிக்கலாமென்றும் சிங்கைச்சிங்கன் வழி காட்டுகின்றார். அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 52 குறள்களை தனியான நூலொன்றாக சிங்கன் வெளியிட்டுள்ளார்.

'21 ஆம் நூற்றாண்டில் உலகம் எங்கும் இருக்கும் பெரும்பாலான தமிழர்களில் பலர் ஏழைகளாகவும், பொருளாதாரத்தில் முன்னேற்றமில்லாமல் சூழ்நிலையின் கைதிகளாகவும் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றி ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவருவதற்குத்தான் நான் திருக்குறள் வகுப்பை வாரம்தோறும் நடத்தி வருகின்றேன். அதனால் வரும் தடைகளையும் மீறிக் குடும்பத் திருக்குறள் வகுப்பாகவும் நடத்தி வருகின்றேன்' என்கின்றார் தமிழர் வாழும் சகல நாடுகளிலும் திருக்குறள் இயக்கத்தை வேகப்படுத்தி வரும் சிங்கப்பூரைச் சேர்ந்த தமிழ் அறிஞர் இ.வி.சிங்கன்.





குறள்களைப் படிப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது படிக்கும் குறள்கள் வாழ்க்கை நடத்துவதற்கு உதவி செய்வதாகவும் இருக்கவேண்டும் என்பது இவர் கொண்டிருக்கும் அவா.

திருவள்ளுவரால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட

> "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு" (குறள் 423)

திருக்குறள் அன்று முதல் இன்றுவரை தமிழர்களுக்கு வழி காட்டி வருகின்றது. "திருக்குறளைப் படிப்பதற்கு தமிழை எழுதவும் படிக்கவும் தெரிய வேண்டிய கட்டாயமில்லை" என்று கூறும் சிங்கன் திருக்குறள் முழுவதையும் பாடல்களாகப் பாடலாம். அதற்குப் பல ராகங்களில் குறுந்தட்டுக்கள் வெளிவந்திருக்கின்றன எனத் தெரிவிக்கின்றார். அப்படிப் பாடினால் தமிழை எழுதவும் படிக்கவும் ஆர்வம் உண்டாகும். ஆர்வம் உண்டானால் தமிழை எழுதவும், எழுத்துக்களைப் படிக்கவும் இயலும். அதனால் திருக்குறளைத் தானாகவே எழுத்துக்கூட்டிப்படிக்க முடியும். என்கின்றார்.

133 அதிகாரங்களின் 1330 குறள்களின் எண்களை மனப்பாடமாக வைத்திருப்பதால் வரும் பயன் பற்றியும் கருத்து தருகின்றார். அதாவது, இதொரு விளையாட்டு: ஒரு நண்பர், உங்கள் வீட்டிற்கு வருகின்றார். மகள் ஓடி வந்து, "அப்பா 9 க்கு வீட் டில் ஒன்றுமில்லை" என்பாள். (9 - விருந்தோம்பல்) அதற்கு நண்பர், "பரவா யில்லை அம்மா, நான் 95 (மருந்து) எடுத்து விட்டு வந்திருக்கின்றேன்" என்பார்.

எனவே குறள் பாடல்களை மனப் பாடம் செய்தால், இப்படிப் பல விளையாட்டுக்களை விளையாடலாம்.அவற்றை நாடகமாகக் கூட நடிக்கலாம்.

மேலும் ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு நீதிக்கதையை எழுதலாம் என்று கூறி எடுத்துக் காட்டாக....

ஒரு வீட்டில் பணக்காரப் பையன் இருந்தான். அவனுக்குப் போதிய சொத்து இருக்கின்றது என்று அவன் பெற்றோர்கள் அவனைப் பள்ளியில் சேர்க்கவில்லை.திருமண வயதில் அவனுக்கு திருமணம் ஆகி மாமியார் வீட்டிற்குச் சென்றான்.ஒரு நாள், மாமியார் அவனை அழைத்து, "இந்தக்கணக்கை ஒருக்கால் சரியாக இருக்கின்றதா பார்" என்று சொல்ல,"அவன் எனக்குக் கண்ணிருந்தும் எழுதவும் கூட்டவும் தெரியவில்லை" என்று அழுதான். அதற்கு மாமியார், " கவலைப்படாதே. நீ இங்கே வா. நான் சொல்லித்தருகின்றேன்" என்று சொல்லிக்கொடுத்தாள். இவ்வாறு "கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டும் புண்ணுடையர் கல்லாதவர்" என்னும் குறளை கதையாக்குகின்றார்.




தமிழின் பெருமையை தமிழ் உலகம் மட்டுமன்றி முழு உலகமும் அறியச் செய்தல் வேண்டும் என்று ஆவல் மேலிட திருக்குறள், பைபிளுக்கு அடுத்தபடியாக அதிகமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக் கின்றது என்று பலர் மேடைகளில் முழங்கி வருகின்றார்கள். இது தவறாகும். திருக்குறள் ஏறத்தாழ 30 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. பைபிள் 2000 மொழிகளுக்கு மேல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. அதனால் திருக்குறளை நீங்கள் சரியாகப் படித் தால், மற்ற மொழிகளில் அதை மொழி பெயர்ப்பதற்கும் தமிழின் பெருமையை உலகெங்கும் பரப்பு வதற்கும் உதவி செய்யும் என்றுகூறுகின்றார்.சமூகப்பெரியார்களின் மற்றும் தமிழர்களின் வரலாற்றைச் சித்திரக்கதைகளாக வெளியிட்டு தமிழை வளர்த்து வரும் இவர் திருக்குறளை பழிப்பவனுக்கு விலங்கு மாட்ட வேண்டும் என்ற ஆவேசம் கொண்ட அறிஞர் ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவிஞ்ஞானி பலிக்கடா ஆக்கப்படுகின்றாரா?


காதிர்கான்

மனிதன் மனிதனை அழிப்பதிலும், அவனை அழிக்கப் போவதாக அச்சுறுத்தி தனது காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதிலும் காட்டி வரும் ஆர்வம் எல்லையற்று விரிந்து சென்று கொண்டிருக்கின்றது. ஒரே தடவையில் பல இலட்சம் உயிரினங்களை அழிக்க வல்ல அணுவாயுதங்களைப்போட்டி போட்டுக் கொண்டு நாடுகள் செய்து குவிப்பதும், முதலில் அவற்றைத்தயாரித்த நாடுகள், பின்னர் அவற்றைத்தயாரிக்க முனையும் நாடுகளை அதே ஆயுதங்களை காட்டி அச்சுறுத்தி தம்மை மனித குலத்தின் காவலர்கள் என பிரகடனப்படுத்திக் கொள்வதும் ஒட்டுமொத்தமான அடிப்படை உரிமை மீறல்களே. உலக நாடுகள் இன்று செய்து குவித்திருக்கும் அணுவாயுதங்கள் இப்பூமியை பல நூறு தடவைகள் சாம்பர் மேடாக்கப்போதுமானவை என்ற அபிப்பிராயங்களின் பின்னணியில், செவ்வாய் கோளில் உயரினங்கள் இருக்கின்றனவா? என்பதையறியும் பெரும் முயற்சிகளை நோக்கும் போது அங்கு சென்றும் அழிப்பு வேலைகளை செய்ய மனிதன் நோக்கம் கொண்டுள்ளானா? என்று கேட்கத்தோன்றுகின்றது.

பாகிஸ்தானை ஒரு அணுவாயுத வல்லரசாக நிலை நிறுத்துவதற்கு வகை செய்தவர் அப்துல் காதிர்கான். அணுகுண்டு தயாரிப்பை முதன்மைப் பாகமேற்று நிறைவேற்றிய அணு விஞ்ஞானி அவர். இதற்காக அவர் பாகிஸ்தான் என்னும் நாடு இருக்கும் வரை நினைவு கூரப்படப்போகும் ஒருவர். பாடசாலை மாணவர்களின் நூல்களில் தேசபிதாவின் படத்திற்கு அருகே இவரின் படம் பிரசுரிக்கப்படும் அளவுக்கு வரலாற்றின் நினைவுகளிலிருந்து பிரிக்க முடியாதவர் இவர். அது மட்டுமன்றி இஸ்லாமிய உலகமே அவரை மறக்கமுடியாது. இவர் மிகுந்த சர்ச்சைக்குரிய மனிதராக இப்பொழுது ஆகியிருக்கின்றார். பாகிஸ்தான் முதன் முதலாக தயாரித்த இஸ்லாமியக் குண்டின் தந்தை மட்டுமன்றி, அரபு நாடுகளான ஈராக், லிபியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கும் அணுவாயுத ரகசியங்களை வழங்கி வந்துள்ளவருமாவார். இதனை அவரே ஒப்புக்கொண்டு தொலைக்காட்சியில் உரையாற்றியுமுள்ளார். இதனால் முதலில் அவர் அரபு நாடுகளுக்கே தெம்பூட்டியவராகின்றார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பை வெளிக்காட்டி வந்த இஸ்லாமிய நாடுகள் இவரைப்பயன்படுத்தி தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முனைந்துள்ளன. குறிப்பாக சிறிய நாடுகள் அணுவாயுதங்களில்லாமல் இருப்பதனால் வரக்கூடிய ஆபத்தை அமெரிக்காவினால் துவம்சம் செய்யப்பட்டு வரும் ஈராக் விவகாரம் புட்டுக்காட்டிக்கொண்டிருக்கும் சூழ்நிலையிலும், சிறிய நாடான வடகொரியா தன் அணுவாயுதங்களை தற்பாதுகாப்புக்காக உற்பத்தி செய்யாமல் இருக்கப்போவதில்லை என்று அறிவித்த பின்னர் அந்த நாட்டுடன் அமெரிக்கா பவ்வியமாக நடந்து கொள்ளும் சூழ்நிலையிலும் காதிர்கான் மூன்றாம் உலக மண்டல நாடுகளினால் மதிக்கப்படவேண்டியவருமாகின்றார்.

இந்நிலையில் அவர் தான் ஈரான், ஈராக், லிபியா ஆகிய நாடுகளுக்கு அணுவாயுத ரகசியங்களை கொடுத்ததாகக்கூறியதை கருத்தில் கொண்ட பின்னர் அவரை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி மறுப்புத்தெரிவித்துள்ளார். இது பலர் அம்பலமாவதை தடுக்கும் விதத்திலான ஒரு மறுப்பா? அல்லது தேசத் தின் மதிப்பு மிகு மனிதர் ஒருவர் அவமதிக்கப்படுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது என்று கருதப்பட்டதாலா? அல்லது இரண்டு காரணங்களுக்காகவுமா? அவ்வாறாயினும், அவர் தண்டிக்கப்படக்கூடாது என்று எடுக்கப்பட்ட முடிவு பல மில்லியன் மக்களின் மனச்சான்றுகளை மகிழ்விப்பதாகும். தாமே புனைந்த புலனாய்வுத்தகவல்களை ஆதாரமாகக்காண்பித்து சிறிய நாடுகளை பெரிய நாடுகள் கபளீகரம் செய்யும் இன்றைய போக்கில் பாகிஸ்தான் மக்களுக்கும், அவர்களின் எதிர்கால சந்ததியினருக்கும், அரபு நாடுகள் சிலவற்றிற்கும் கூட ஒரு தெம்பை வழங்கிய ஒரு பெருமகன் இம்சைப்படுத்தப்படுவது வரலாற்றின் வெறுப்பைச்சம்பாதிப்பதாக இருக்கும்.

அமெரிக்காவின் கொலின் பவல் நேரில் விஜயம் செய்து பாகிஸ்தான் ஜனாதிபதியிடம் பேசி வலியுறுத்திய நிலையிலும் ஜனாதிபதி முஷாரப் தனது நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. விசாரணைக்குத் தேவைப்படும் சகல ஒத்துழைப்பக்களையும் பொய் கண்டுணர் கருவிகளையும் கூட அமெரிக்கா தந்துதவும் என்று கொலின் பவல் தெம்பூட்டியிருந்தார் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதனால் இவ்விவகாரம் இத்துடன் முடிந்து விட்டதாக இல்லை.

இவ்விவகாரத்தின் மறுபக்கம் ஒன்று இருக்கின்றது. அதாவது இரண்டு தசாப்தத்திற்கும் அதிகமான காலமாக அணுசக்தி ஆய்வுகளுக்கு பொறுப்பாகவும், அணுசக்தி ஆலோசகராகவும் இருந்த அணுவிஞ்ஞானி காதிர்கான் பாகிஸ்தானின் அரசுக்கோ, அணுவாயுத் தயாரிப்பின் ஏக கண்காணிப்பாளராக இருக்கும் பாகிஸ்தான் இராணுவத்திற்கோ தெரியாமலே இத்தனை இஸ்லாமிய நாடுகளுக்கும் (வெளிவந்திருப்பவை சொற்பமாக இருக்கலாம் என்ற சந்தேகமும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது) அணுவாயுத தயாரிப்புகளுக்கான உதவிகளை வழங்கி வந்தார் என அவரே வெளியிட்டிருக்கும் அறிவிப்பு பற்றி சர்ச்சை


காதிர்கான், பாகிஸ்தான் ஜனாதிபதி பேர்வஸ் முஷாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பப்பட்டிருக்கின்றது. தனிப்பட்ட முறையில் அணுவாயுத ரகசியங்களை விற்று பெரும் செல்வம் தேடினார். பாகிஸ்தானின் மதிப்பு மிக்க பகுதிகளில் 7 வீடுகளை வாங்கினார். பெருமளவு செலவில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றை வாங்கினார். இராணுவ அதிகாரி ஒருவருக்கு ஒரு வீட்டை அன்பளிப்பாக வழங்கினார் என்றெல்லாம் அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

அதாவது அவர் ஒரு ஊழல் பேர்வழி சுயநலத்திற்காக ராஜதுரோகம் செய்திருக்கின்றார் என்று அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அதே வேளை, இத்தனை நீண்ட வருடங்களாக நடந்து வந்த இந்த தொடர் நிகழ்வுகள் பற்றி எவருக்கும் தெரியாது என்பது போலவும் அரசாங்கத்தரப்பிலிருந்தும் காட்டிக்கொள்ளப்படுகின்றது. இது பற்றியே சர்ச்சைகள் நடைபெறுகின்றன.

மிக நீண்ட காலமாக முடிந்த அளவு இரகசியமாக மூன்று அல்லது நான்கு நாடுகளுடன் அணுவாயுதம் தொடர்பான நடவடிக்கைகள் நடந்து வந்தன. அணுவாயுத வல்லரசுகளுக்கும் பகை கொண்ட அண்டை நாடான இந்தியாவுக்கும் சவாலாக இடம்பெற்று வந்த பாதுகாப்புத்துறை நடவடிக்கையொன்று ஒரு தனி மனிதனின் எண்ணப்படி வேறு நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்படவும், அவரின் தொடர்ச்சியான ஆலோசனைகள் கிடைக்கும் படியாக வழி செய்யப்படவும் முடிந்திருக்கின்றது. நீண்ட காலமாக நடைபெற்று வந்திருக்கின்றது. அதுவும் கூட பாகிஸ்தானின் முழு இராணுவ, இரகசியத்துறை அரசின் கண்களுக்கு தெரியாமலும் நடந்திருக்கின்றது என்பது நம்ப முடியாததே.

இதனைப்பார்க்கும்போது பல விடயங்கள் மூடி மறைக்கப்பட்டிருப்பது தெரிகின்றது. காதிர்கான் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையை தொலைக்காட்சியில் வாசித்துக்காட்டினார். தான் செய்தவற்றை ஒப்புக்கொண்டார். அவற்றிற்கு தானே முழு பொறுப்பாளி என்றார். இது பற்றி அரசாங்கத்தில் எவருக்கும் தெரியாது என்றார். தனது உதவியாளர்கள் யாரும் நன்நம்பிக்கையின் பேரில் பல உதவிகளைச்செய்திருந்தார்கள் என்று ஒப்புக்கொண்டார். தானும் கூட ஒரு நன்னம்பிக்கையின் அடிப்படையில் தான் செயற்பட்டிருந்தாரென்றும் ஒப்புவித்தார்.சுருக்கமாகக் கூறின் அவரது செயலுக்கு அவர் மட்டுமே பொறுப்பு என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து ஜனாதிபதி பேர்வஸ் முஷாரப் தொடக்கம் அத்தனை அதிகாரிகளையும் நிரபராதி என்று காட்டியிருக்கின்றார். இதற்குப் பதிலாக மன்னிப்பும் பெற்றிருக்கின்றார். இதனை ஒரு நாடகம் என்று பலர் நம்புகின்றார்கள்.முதலில் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னரே காதிர்கானுக்கு



தேச பிதா முகம்மது அலி ஜின்னாவுக்கு அடுத்ததாக அணுகுண்டின் தநதை காதிர்கானுக்கு ஆதரவு தெரிவித்து கராச்சியில் ஆர்ப்பாட்டம்.

எதிராக புலனாய்வுத்துறை ஊழல் குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருந்தது. ஆனால் முஷாராப்பின் அதிகாரிகள் அது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்காமல் பாராமுகமாக இருந்தனர். ஜனாதிபதி முஷாரப் அவர் மீது நடவடிக்கை எடுக்காது விட்டதன்

**— சர்வன் —**

மூலமும், அவரது வெளிநாட்டுப்பயணங்களைக்கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாக இயங்க அனுமதித்ததன் மூலமும் கறுப்புச்சந்தை விவகாரம் தொடர்வதற்கு அனுமதித்திருந்தார். ஆனால் 2001 இல் அவரை ஓய்வு பெறுமாறும் நிர்ப்பந்தித்திருந்தார். இந்த வகையில் காதிர்கான் தொடர்பாக ஒரு வித மென்போக்கு காட்டப்பட்டது. அதாவது அவர் மன்னிப்பளிக்கப்பட்டார்

ஆனால் அமெரிக்கா அட்டகாசம் பண்ணாமல் நடந்து கொள்வது எதற்காக என்பது ஆச்சரியம் தான். தனது இரகசிய நட்வடிக்கைகள் அரசாங்கத்திற்குத் தெரியாது என்று காதிர்கான் கூறினாலும், அது உண்மையே என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பதும் சந்தேகங்களை கிளப்பியுள்ளன. ஒருவரையொருவர் பரஸ்பரம் காப்பாற்றிக்கொள்வதற்காக இப்படியாக சோடித்திருக்கலாம் என்பதே சந்தேகம்.புலனாய்வுத் துறையினரின் நீண்ட நோக்கு தந்திரோபாயம் எப்படியிருக்குமோ? ஒரு புறம் காதிர்கானின் செயல்பாடுகளை அறிந்து வைத்துக்கொண்டு அவரை நீண்ட கயிற்றில் விட்டு வைத்திருக்கலாம். அதாவது தமக்கு நேச நாடான பாகிஸ்தானின் நட்பைப்பயன் படுத்திக்கொண்டு தீவினையின் அச்சாணிகள் என்று நாமம் சூட்டி வைத்திருந்த நாடுகளை அடித்து அடக்கியோ அல்லது அச்சுறுத்தியோ வழிக்குக்கொண்டு வருவதற்கு ஏதேனும் வல்லரசு முயற்சித்திருக்கலாம்.

ஈராக்கை அடித்தும், ஈரானையும், லிபியாவையும் அச்சுறுத்தியும் இப்பொழுது வழிக்கு கொண்டு வந்து விட்ட நிலையில் காதிர்கானை பலிக்கடாவாக்கிக் கொண்டு எல்லாவகை சந்தேகங்களிலுமிருந்து சம்பந்தப்பட்ட எல்லோருமே தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முயல்வதாக இருக்கலாம். பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாகக் காட்டிக் கொண்டு ராஜ தந்திரத்தை நகர்த்தலாம். ஆனால் தேசபிதாவுக்கு சமீபமாக வைக்கத் தகுந்த ஒருவரை பலிக்கடாவாக ஆக்கி தாம் தப்பிக்கொள்ளலாமா? என்ற கேள்வி மக்களின் மனச்சான்றுகளை உலுப்பவே செய்யும்.



முகம்மது அலி ஜின்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொதுத்தேர்தல் பதிலளிக்க வேண்டிய பொருளாதார போட்டிப்பரீட்சை

2 தசாப்த கால உள்நாட்டு யுத்தத்தினால் சின்னா பின்னப்பட்டுப் போயுள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் பணி இன்றைய நிலையில் சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தில் தங்கியிருப்பதாக சர்வதேச நிதி வழங்கும் நாடுகள் தெரிவித்து விட்டன. அதாவது, கடந்த ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற நிதி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கைக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்ட 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களில் சிதைந்த பொருளாதாரத்தை மீட்கும் பணி பொறுத்து நிற்கின்றது. இதனை இலங்கை அரசாங்கத்தின் கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சு உறுதி செய்துள்ளது.

அகில இலங்கை அடிப்படையில் மொத்தம் 64 அபிவிருத்தித்திட்டங்கள் இந்நிதியின் மூலம் நிறைவேற்றுவதற்குக்குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பத்து வரையிலான திட்டங்களே யுத்தத்தினால் நேரடியாகப்பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்குப்பகுதியில் அடங்குகின்றன. இவ்விபரத்தை வெளியிட்டுள்ள கொள்கை அபிவிருத்தி அமைச்சு, எமக்கு 4.5 பில்லியன் டொலர்கள் உதவி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பு என்றும், இது போன்ற வாய்ப்பு மீண்டும் ஒரு தடவை எமக்கு கிடைப்பதரிது என்றும் தெரிவித்துள்ளது.

இதே வேளை, வடக்கு கிழக்கின் அபிவிருத்தித்திட்டங்களை கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, வடக்கு கிழக்கின்



சண்டை காரணமாக அழிவுற்ற பகுதிகளை சீரமைப்பதை பிரதான நோக்கமாகக்கொண்டு வழங்கப்படும் நிதி முழு இலங்கைக்கும் பயன்படுத்தப்படும். வடக்கு கிழக்கின் தமிழர் வாழும் பகுதிகளின் அபிவிருத்தி ஒரு 'கலந்துரையாடல்' நிபந்தனையை பொறுத்திருக்கும் என்பதே அரசாங்க அறிவிப்பாக இருக்கின்றது.

எவ்வாறாயினும், சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை பொறுத்தே நிதி வழங்கப்படும் என்ற நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய முதுகெலும்பான தனியார்துறை உசாரடைந்துள்ளது. சமாதான நடவடிக்கைகளுக்கு அத்திபாரமாக அமைந்துள்ள ரணில் பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை அரசியலின் அண்மைக்கால போக்கினால் கேள்விக் குறி முன் நிறுத்தப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு தனியார் துறை களத்தில் குதித்துள்ளது.

Joint Business Forum என்னும் கூட்டு வர்த்தக ஒன்றியம் இரு பெரும் கட்சிகளிடமும் அவைகளின் வேலைத் திட்டங்களை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளது. முக்கியமாக 21 துறைகளில் இக்கட்சிகள் தமது வேலைத்திட்டங்களை தெளிவுபடுத்த வேண்டும். என்று அது கேள்விக் கொத்தை வெளியிட்டுள்ளது. மக்கள் தமது வாக்குகளைப்பற்றி முடிவு செய்ய முன் இவற்றிற்கான பதில் வேண்டும் என்று அது வலியுறுத்தியுமுள்ளது.

சமூக, பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை உள்ளடக்கியதான கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. முக்கியமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக தனியார்துறை கணிக்கப்படுமா? என்ற கேள்வியும், திறந்த பொருளாதார கொள்கை பின்பற்றப்படுமா? அல்லது கலப்பு பொருளாதாரமா? இறக்குமதிகளுக்கு கட்டுப்பாடுகள் இருக்குமா? இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு முழுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் போடப்படுமா? பூகோளமயமாக்கல் என்னும் எண்ணக்கருவுக்கு இடமளிக்கப்படுமா? வெளிநாட்டார் நேரடியாக முதலீடுகள் செய்வது பற்றிய உங்கள் கொள்கைகள் என்ன? ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட பொருட்களின் உற்பத்திகள் ஊக்குவிப்பு பெறுமா? என்னும் கேள்விகளும் ஜனாதிபதியை நோக்கியும் பிரதமரை நோக்கியும் கேட்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்துறை தொடர்பான கொள்கைகள் பற்றியும் விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. இலங்கையில் உற்பத்தி செய்யப்படக்கூடிய உணவுப்பொருட்கள் கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்யப்படுமா? இவை மீது இப்போதிருக்கும் இறக்குமதித் தீர்வைகள் தொடருமா? உரமானியம் தொடருமா? நெல்லுக்கான உத்தரவாத விலைமுறை தொடர்ந்து கடைபிடிக்கப்படுமா? பெருந்தோட்டங்கள் தொடர்பான கொள்கை, மீள் நடுகைக்கான மானியம் வழங்குதல் தொடருமா? என்பன போன்றவற்றினை ஆட்சித்தலைவர்களாக வரும் வாய்ப்பு கொண்ட தலைவர்கள் தெளிவு படுத்த வேண்டும்.

மேலும், மீன்பிடித்தொழில் தொடர்பான கொள்கைகள் யாவை? தகரத்திலடைக்கப்பட்ட மீன்களை இறக்குமதி செய்வது தொடர்பான கொள்கை என்ன? கடலுணவு வளங்களை அதிகரிப்பதற்கு நீங்கள் மெற்கொள்ளப் போகும் உபாயங்கள் என்ன? நன்னீர் மீன்வளர்ப்பு தொடர்பான கொள்கை என்ன? இறால் வளர்ப்புத்திட்டத்தை விருத்தி செய்வதற்கு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை?

தனியார் மயமாக்கல் தொடர்பான உங்கள் கொள்கை என்ன? இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன தனியார் மயப்படுத்தப்படுமா? ரயில்வே திணைக்களம் தனியார் மயமாக்கப்படுமா?

புதிய பல்கலைக்கழகங்களை திறப்பதற்கான உத்தேசங்களுண்டா? தனியார் பல்கலைக்கழகங்கள் திறக்கப்படுவதை அனுமதிப்பீர்களா? இலங்கையின் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் ஆங்கிலக்கல்வியை தரமுயர்த்துவதற்கு தங்களிடமுள்ள நீண்ட கால, குறுகிய கால நடுத்தர காலத் திட்டங்கள் யாவை?

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்? எத்தனை பிரதி அமைச்சர்களும் எத்தனை பணித்திட்ட அமைச்சர்களுமிருப்பார்கள்? அமைச்சர்களின் உறவினர்கள் அந்தந்த அமைச்சுக்களில் நியமனங்களை பெறுவார்களா? தேர்தலில் தோற்ற வேட்பாளர்கள் தேசியப் பட்டியல் மூலம் எம்.பி.க்களாக நியமிக்கப்பட்டு பதவிகள் வழங்கப்படுவார்களா?

பல ஆண்டுகளாக எதிர்மறையாக விருக்கும் வர்த்தக நிலுவையை முன்னேற்றுவதற்கு தங்களிடம் என்ன திட்டங்கள் உள்ளன? முக்கியமாக சமாதானச்செயற்திட்டம் பற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இப்பொழுது அமுலிலுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணும் நோக்கம் உள்ளதா? போர் நிறுத்த ஒப்பந்தத்தை புலிகளுடன் புதிதாக ஏற்படுத்தும் எண்ணம் உள்ளதா? போர் நிறுத்த ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்யும் எண்ணம் உள்ளதா? நோர்வேயை அனுசரணையாளராக தொடர்ந்தும் வைத்திருக்கும் நோக்கம் உள்ளதா? நோர்வே அனுசரணையாளர்களை கைவிடுவதாயின் அனுசரணையாளர்களாக வேறு எந்த நாட்டை அழைப்பீர்கள்?

வடக்கு, கிழக்கு பிரச்சினையை என்ன அடிப்படையில் தீர்ப்பதற்கு உடன்படுவீர்கள்? ஒற்றையாட்சி முறையினுள் சமஷ்டி முறையையும் உள்ளடக்கத்தக்கதான அதிகார பரவலாக்கத்திற்கு உடன்படுவீர்களா? மாநிலங்களின் ஒன்றியம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வீர்களா? இவை யாவற்றிற்கும் பதிலாக நிர்வாகப்பரவலாக்கத்தை மட்டும் செய்வதுடன் நின்று விடுவீர்களா? சமச்சீரற்ற அதிகாரப்பரவலாக்கம் மற்றும் உள்ளக சுய நிர்ணய உரிமை என்பவற்றைப்பற்றி ஐ.தே.மு. விளக்க மாகக்கூறுமா?

ஒருவர் தனது வாக்கை அளிப்பதற்கு முன் இத்தகைய கேள்விகளை தன் மனதில் ஆராய்தல் வேண்டும். பின்னர் அளிக்கும் வாக்குகளே சமாதானம் தொடருமா?, சண்டை தொடருமா? என்பதைத்தீர்மானிக்கப் போகின்றன? பொருளாதார வளர்ச்சியோ, உட்கட்டுமான உறுதிப்பாடோ அல்லது பொருளாதார வளர்ச்சி மறை எண்ணில் காட்டப்படும்.

> ‘அடிவாங்கி அலறிக்கொண்டிருப்பவனை டாக்டரிடம் காண்பித்து பெறும் மருந்தை அடித்தவனின் தோள் வலியை குணப்படுத்தவும் பயன்படுத்தலாமாயினும், வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமே!’

சகாப்தம் மீண்டும் தொடர்வதா? என்பதெல்லாம் இவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டியவையாயுள்ளன.

அடிவாங்கி அலறிக்கொண்டிருப்பவனை டாக்டரிடம் காண்பித்து பெறும் மருந்தை அடித்தவனின் தோள் வலியை குணப்படுத்தவும் பயன்படுத்தலாமாயினும், வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமே! பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை புத்தி ஜீவிகளின் கேள்விகள் உரமாக்க உதவும்.

பூகி

**********************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணையும் தமிழர் பொருளாதாரம்

பண்டைய காலத்தில் தமிழன் தன்னிறைவடைந்த பொருளாதாரத்தில் இருந்தான். அன்றைய தன்னிறைவுப் பொருளாதாரம் என்பது மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வனவாகவே இருந்தது. அக்கால மக்கள் வாழ்வில் ஆடம்பரங்களுக்கோ அனாவசிய செலவுக்கோ இடம் இருக்கவில்லை மாறாக அமைதியான ஆன்மீக வாழ்க்கையையே கடைப்பிடித்தவர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

நம்நாடு இயற்கைவள நாடு மனித வாழ்வும் இயற்கையுடன் இயற்கையாய் பின்னிப் பிணைந்திருந்திருந்ததால் செயற்கையாக எதையும் செய்ய வேண்டிய தேவையிருக்கவில்லை. பூமியை தாயாகவும் பிற நட்சத்திர கோள்களை மனிதனின் ஆதிக்க சக்தியாகவும் கொண்டு இறைபக்தியுடன் சுயகௌரவம் தன்மானம் எனத்தமிழர் நிம்மதியாக வாழ்ந்து வந்தார்கள்.

எம்மக்களின் பிரதான உணவு நெல் அரிசிச்சோறு என்பதனால் அன்று வேளாண்மை முதன்மைப் படுத்தப்பட்டது. வேளானண்மை நிலங்களை வளமாக்கவும் அறுவடை செய்த கதிர்களை நெல்மணியாக்கி அவற்றை இடமாற்றம் செய்வதற்கும் காளை எருதுமாடுகள் பயன்படுத்தப் பட்டன. அத்துடன் பசுக்களை பட்டி கட்டி வீட்டு மிருகங்களாக வளர்த்து பால் தயிர் நெய் போன்றவற்றைப் பெற்று இயற்கைச்செல்வங்களாக இவற்றையே பொருளாதாரமாக்கினார்கள்.

இதுதவிர நீண்டகால குறுகிய காலப் பயிர்ச்செய்கைகளாக சிறு தானியங்கள் காய்கறிகள் பழவகைகள் தென்னை வளம் பனை வளம் என தம் பொருளாதார விருத் தியை தேவைக் கேற்ப செய்துவந்தார்கள். அவற்றுக் கிடையில் பண்டமாற்றுப் பொருளாதாரமும் நடைமுறையில் இருந்தது.

இப்படி வாழ்ந்து வந்த ஈழத் தமிழர் வரலாற்றில் காலத்துக்குக் காலம் இந்திய மன்னர்களின் படை எடுப்புக்கள் மற்றும் சிங்கள மன்னர் களின் ஆதிக்கங்கள் இருந்து வந்த போதும் பொருளாதாரரீதியில் அடிப்படை மாற்றங்கள் என்று எதுவும் ஏற்படவில்லை.

1505ஆம் ஆண்டு ஐரோப்பிய அன்னியராக முதலில் போர்த்துக் கேயர் இலங்கைத்தீவுக்கு வந்தார்கள். தொடர்ந்து நெதர்லாந்து நாட்டவரான ஒல்லாந்தர் 1658 இலும் அதனைத் தொடர்ந்து 1796 தொடக்கம் ஆங்கிலேயரும் மொத்தமாக 440 வருடங்கள் நம்நாட்டை கைப்பற்றி ஆட்சி செய்தார்கள். இதில் இறுதி 130 வருடங்கள் (1815-1945) ஆங்கிலேயர் தம் முழுக்கட்டுப்பாட்டில் இலங்கைத்தீவை வைத்திருந்தார்கள். இவ் அன்னியர் ஆட்சியால் பொருளாதாரரீதியில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டது.

மட்டுமன்றி கலாசாரரீதியான தாக்கங்களுக்கும் மக்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் மக்கள் வாழ்வியல் சற்றேமாற்றப் பட்டு இருந்த போதும் அன்று மத, மொழி, பண்பாடுகளில் கடுமையான போக்கை நம்மவர் கடைப்பிடித்து வந்தார்கள். அன்னியரின் பொருளாதார நலன்களுக்கு அடிபணியாது தம்சுய கௌரவ தன்மானத்திலேயே உறுதியாக நின்றார்கள். தொடர்ச்சியான அன்னியரின் ஆட்சியினால் தவிர்க்க முடியாத கல்வித்திட்டங்களையும் பொருளாதார நடைமுறைகளையும் பெறவேண்டிய வர்களாக ஈழ மக்கள் தங்கள் நடவடிக்கைகளை தயிர்க்க இயலாது சற்று மாற்ற ஆரம்பித்தார்கள். இதன் தொடர்ச்சியாக கல்வித் திட்டங்களிலும், பொருளாதாரத் திட்டங்களிலும் குறிப்பாக தமிழ் மக்கள் மிகவும் வேகமாக வீறுநடைபோட ஆரம்பித்தார்கள் இக்காலகட்டத்தில் தான் இலங்கைக்கு பிரித்தானியர்களினால் சுயநாடாக இயங்க சுதந்திரம் 1948 இல் வழங்கப்பட்டது.

அன்று கல்வி, பொருளாதாரம் மற்றும் உயர்பதவிகளில் தமிழ் மக்கள் முன்னணியில் திகழ்ந்து வந்தார்கள். அரசியல் மட்டத்தில் இருந்த சிங்கள அரசியல் வாதிகள் தமிழனின் பெரும் முன்னேற்றங்களை பொறுக்க முடியாமல் இனத்துவேசப் பொறிகளை சிங்கள மக்களுக்கு புகட்டி தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புத் திட்டங்களை ஊக்குவித்தார்கள். விளைவு தமிழர்களின் உயிர்கள், உடமைகள் அழிக்கப்பட்டன கலாசார அத்துமீறல்கள் நடாத்தப்பட்டது பூர்வீக இடங்கள் திட்டமிட்டு சிங்கள இடமாக்கப்பட்டது. பொறுக்கமுடியாத தமிழன் அறப்போர் நடாத்தினான்! உண்ணாவிரதம் இருந்தான்!! ஊர்வலம் வந்தான்!!! நடந்தது என்ன மீண்டும், மீண்டும் இனஅழிப்பு - தீச்சுவாலைவிட்டு எரிந்தது.

மதங்கொண்ட யானையை அடக்க இனியும் பாடிப்பயன் இல்லை என உணர்ந்த தமிழன் அறப்போரில் இருந்து ஆயுதப் போர் என்ற மார்க்கத்திற்கு படிக்கல் நாட்டினான். இன்று ஈழப் போராட்டம் பல தூண்கள் கொண்ட பாரிய மண்டபமாக உயர்ந்து நிற் கின்றது. தனித்தமிழீழம் நடாத்த அனைத்து தகுதிகளும் தமிழனுக்கு உண்டு என்ற அளவுக்கு வந்துவிட்ட நிலை இன்று.

இக் காலகட்டங்களில் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி உலகெலாம் பரந்து பல்வேறுநாடுகளில் தம் காலடிகளை பதித்துள்ளார்கள்.

இன்று ஈழத்தில் நடந்த போராட்டங்களினால் விலைமதிப்பற்ற உயிர்களையும், உடமைகளையும் நாம் இழந்திருக்கிறோம் மிகவும் துயரமான விடயம் இது. அதற்காக நாம் அடிபணிந்து குடியிழந்து போனவர்களாக இருக்கக் கூடாது. வானத்தில் உயர்ந்து ஓங்கி நிற்கின்ற மரங்களை அடாபுயல் வந்து அதன் கிளைகளை அடித்து முறித்து விடுவதுண்டு. முறிந்த கிளைகள் காலப் போக்கில் அந்த மரத்திற்கே உரமாகி விடுகின்றது. இதே போலத்தான் நாமும் எமது இழப்புக்களால் ஏற்பட்ட சொல்லொணாத் துயரத்தின் எதிரொலியாக அலைமோதும் பாரிய பொருளாதாரத் திட்டங்களை கட்டி எழுப்ப வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு இன்று ஓர் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அனைத்துலக நாடுகளில் நாம் பரவி வாழ்கிறோம் இப் பரவலானது தமிழனுக்குக் கிடைத்த ஓர் வரப்பிரதாசம் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என அன்று தமிழன் தீர்க்கதரிசனம் சொன்னான் அதை இன்று நியாயமாகக்காண முடிகிறது.

எமக்கிடையில் பொருளாதாரத் திட்டங்கள் எவ்வளவு கட்டி எழுப்பப் படுகிறதோ அதற்கு மேலாக ஒருமைப்பாடு ஒற்றுமைத்தன்மையும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

புலம்பெயர் வாழ் மண்ணிலும் எமக்கிடையில் எத்தனை மோதல்கள் ஏற்படுகின்றன? இவை அனைத்தும் உடன் தடுக்கப் பட வேண்டும். இதற்கு உடன் பரிகாரமும் காண வேண்டும் கட்டாக்காலி மாடுகளாக ஒருசில தமிழ் இளைஞர் கூட்டம் வீதியோரங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரமும் அதன் வலிமையும்

விதண்டாவாதங்கள் பேசி வீண் பொழுது போக்கி விசமத்தனங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பாக இலண்டன் ஐரோப்பிய வட அமெரிக்க நாடுகளில் பார்க்க முடிகிறது. இச் செயற்பாடுகள் முற்றாகத் தடுக்கப்பட வேண்டும். எம்மவர்கள் முன்வந்து இத்தீய சக்திகளை எம்மத்தியில் இருந்து களைந்தெடுக்க வேண்டும்.

எமக்கிடையில் ஓர் புதிய சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். போட்டிகள் பொறாமைகள் வேண்டுமென்றால் வேறு நாட்டவனுடன்!! எமக்கிடையில் வேண்டாம்! நம் பாரம் பரிய கோட்பாடுகள் இரண்டு அவை வீரமும் வெற்றியும் தான் இன்று இவ்விரண்டையும் உரிமைக்காக ஈழத்தில் எம் சகோதர சகோதரிகள் தம்உயிர் பாராமல் தாய்நாடு காக்கப் போராடி வருகிறார்கள்.

நாம் அன்னிய மண்ணில் வாழ்ந்தாலும் நம்தாய் நாட்டை மறந்தவர்களாக காலத் தை கழித்துவிடக் கூடாது. இலங்கைத் தீவை 430 வருடங்களாக ஆட்சி செய்த அன்னியர்தம் நன்மைக்காகவே அங்கு வந்தார்கள்.

அவர்கள் செய்த முன்னேற்றங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் அவர்களின் சொந்த நன்மைகளுக் காகவே செய்யப்பட்டது. இச்செயற்பாடு கள் எல்லாம் வயலுக்கு பாய்ச்சிய நீர் புல்லுக்கும் உதவியது என்ற தொனியே ஒழிய நம்நாட்டிக்கு செய்த சேவை என்ற அர்த்தங்களை எம்மால் காண முடியவில்லை.

அன்னியன் தான் மொழி, மத, கலாசாரங்களை பெருமைப்படுத்தி அவற்றை குடிஏற்ற நாடுகளில் எப்படி திணிக்க முற் பட்டான் என்பதை நாம் வரலாறுகளில் படித்திருக்கிறோம். தமிழ், சிங்கள மொழிகளை ஆங்கிலேயன் நன்றாகக் கற்றதன்பின் அதன் மூலமாக தன் ஆங்கில மொழியை தமிழர்களுக்கும், சிங்களவருக்கும் இலக்கணத்துடன் கற்பித் தான்.

இது வரலாறு. இதற்கு ஆங்கிலேயன் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பான் என்பதை அறியவேண்டும். இப்படி மொழிப் பற்று, இனப்பற்று என மனிதன் தான் பிறப்பின் அடையாளத்தை முத்திரையாகப் பதிக்க பல்வேறு பாடுகள் படுகிறான் உலகில். நாமும் இதற்கு விதிவிலக்காக இருந்துவிடக்கூடாது.

தமிழ் மொழியை தரக்குறைவாய் நினைக்கும் தமிழனே நில்! எழுத எழுத்தின்றி, இலக்கண வடிவமின்றி, இலக்கிய வரலாறுகள் இன்றி எத்தனை இனம் இன்றும் இவ்வுலகில்? இருப்பினும் அவ்வினங்கள் தன்னினமே பொன் இனமென தலை நிமிர்ந்து வாழ்கின்றார்கள். தமிழ் மொழி பற்றி தமிழனுக்குச் சொல்ல வேண்டிய அவசிய மில்லை. ஆனால் தாய் மொழியை இழிவாக நினைக்கும் அளவுக்கு நாம் அறிவு குறைந்த ஜீவிகளாக இருந்து விடக்கூடாது.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றுக்கு ஓர்மூலாதாரமே.நாட்டுப்பற்று இருந்தால் தான் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனைவரும். புலம் பெயர் வாழ் மக்கள் நாட்டை கட்டி எழுப்ப வேண்டுமென்றால் பாரிய பொருளாதாரத்திட்டங்களுக்கு வழிவகுக்க வேண்டும்.

இன்று உலக நாடுகளின் அரசியல் பொருளாதார திட்டங்களை தம் கட்டுப்பாடுகளில் வைத்திருக்கும் இனம் யூத இனம். இவர்கள் தங்கள் இனத்தவரான-யேசுபிரானை காட்டிக்கொடுத்தார்கள் என்பதற்காக 2000 வருடங்களுக்கு முன் தங்கள் சொந்த நாடான இஸ்ரேலில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டார்கள்.

நாடிழந்து உலகம் முழுவதும் அகதிகளாக வாழ் விடம் தேடி ஓடினார்கள். இன்று உல கம் முழுவதும் 135 இலட்சம் யூதர்கள் வாழ் கிறார்கள் இவர்கள் சொந்த நாட்டை விட்டு விரட்டப்பட்ட 25ஆவது தலைமுறையினர். இருப்பினும் தம் நிலையில் இருந்து மாறவில்லை. சொந்த நாட்டிற்கு தம் பிள்ளைகளை ஒவ்வெரு வருடமும் அழைத்து வருகிறார்கள். இவர்களின் இனப்பற்றே இன்று இவர்கள் ஒருங்கிணைந்த பொருளாதாரத்தின் உச்சக்கட்டத்தில் விளங்குவதற்குக் காரணம்.

இன்று நாம் புலம் பெயர்ந்து ஒரு தலைமுறையுடன் நான் ஒரு பிரித்தானியன் என்றோ, நான் ஒரு கனேடியன் என்றோ சொல்லி பெருமை கொள்வது சுயநிர்ணய சிந்தனைக்கு அப்பாற்பட்டது.

புலம்பெயர் நாடுகளில் வாழும் நாம் தனிப்பட்ட முறையில் வசதியான வாழ்வையே அனுபவிக்கிறோம்.

தமிழ் இனத்தின் பொருளாதாரம் எனப்பார்க்கிற பொழுது தமிழர்களில் பலர் பணக் காரர்களாக இருந்தாலும் ஈழத்தமிழர் என்று பார்க்கின்ற போது அவர்களின் பொருளாதார மேம்பாடுகள் இன்றும் அடிப்படைத்தேவைகளுடனே தள்ளாடி நிற்கிறது. இவர்களின் முன்னேற் றத்திற்கு எம் பங்குகள் என்ன? ஈழத்தில் பாரியபொருளாதாரத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அங்குஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள பொருளாதாரத்திட்டங்களுக்கு பக்கபலம் கொடுக்க வேண்டும். நாம் தனிப்பட செய்யும் திட்டங்கள் பெருமளவுக்குப் பொதுவாரியான நலன்களை மக்களுக்கு ஏற்படுத்த மாட்டா. வளர்ச்சிஅடைந்த நாடுகளில் ஆயிரக் கணக்கான தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன.

இவை போன்ற நிறுவனங்கள் எம் மத்தியிலும் உருவாக்கப்பட வேண்டும். இன்று இலங்கையின் அரசியல் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தி நிற்பதில் பொருளாதாரச் சீர்குலைவுகளும் முக்கிய காரணியாக அமைகின்றன. நாட்டை புனரமைக்க இலங்கை அரசாங்கம் அன்னியனிடம் கைஏந்தி நிற்கிறது.

இவ்நலன்கள் கிடைக்க வேண்டுமானால் போரைக்கை விட்டு சமாதான முன்னெடுப்புக்களை பேண வேண்டிய நிலைக்கும் இலங்கை அரசு தள்ளப்படுகிறது.

பசி வந்தால் பத்தும் பறக்குதோ இல்லையோ சிங்கள அரசு இணத்து வேசத்தை துறந்தே ஆகவேண்டிய நிலை இன்று.

பொரும்பான்மை இனம் என்ற மனித பலத்தை வைத்து பேரில் வெல்லலாம் என்று எண்ணிய சிங்கள அரசு! பொருப்பான்மைக்கு வேண்டிய பெரும் பொருளாதாரத்தையும் வைத்திருக்க வேண்டும்.

அது இன்று இலங்கை அரசிடம் இல்லை. மாறாக மாற்றனிடம் கை ஏந்துவதற்காகவே சமாதானம் என்றால்? காலப்போக்கில் சிறுபான்மையின் பொருளாதாரபலம் பெரும்பான்மை யினருக்கு சாதகமாக அமைவதும் பாதகமாகுவதும் சிங்கள் அரசியல்வாதிகளின் சிந்தனை மாற்றத்தில் அமையும்.

எமக்கு இருக்கும் இன்றைய பலத்தையும் சந்தர்ப்பத்தையும் வைத்து தமிழர் கூட்டுப்பொருளாதாரம் பெருவாரியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதற்கு புலம் பெயர் தமிழர்கள் ஒன் றிணையும் தகுந்த சரியான காலம் இதுவே. இன்றைய உலக நடப்பில் பொருளாதார மேம்பாடுகளினால் அரசியல் நலன்களை நாம் பெறவும் சாத்தியமாகவே இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

சுகீதன்
இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நூல்களுக்கு ஒரு தேசியக் காப்பகம்

## தமிழர் வரலாற்றின் காப்பரண்



இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் ஈழத்தமிழ் மக்களை உலகின் பல பாகங்களிலும் தஞ்சமடைய வைத்துள்ளது. இவர்கள் காலப் போக்கில் காரணத்தினால் இன்று தமிழர்களின் எதிரிகள் புதிய வரலாறுகளாக பொய் கதைகளைக்கூறி தமிழ் இனத்தை வரலாற்றுப்பின்னணி அற்ற இனமாக உலகுக்குக் காட்டும் விஷமத்தனமான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான வேளையில் தமிழர்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். பல மேற்கத்தய நாடுகள் தமது வரலாறு தொடர்பான செய்திகளை கணினிப்பொறிகள், நுண்சுருள்கள், பதிவு இயந்திரம்' (Micro Film Reader Printer)' மூலம் வாசிக்கவும், பிரதியாக்கவும் முடியும். இந்த மூலப்பிரதியிலிருந்து எத்தனை பிரதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

'மைக்குரோ பிலிம்' ஆக்குவதன் மூலம் அழிவிலிருந்து சேகரிப்புகளை பாதுகாக்கலாம். அத்துடன் இடநெருக்கடியைத்தவிர்க்கலாம். தேவையான அளவு பிரதிகளை எடுத்து பல நாடு

அந்நாடுகளின் பிரஜைகளாகி தமது மொழி, கலாசார, தனித்துவ அடையாளங்களை இழக்கும் சூழ்நிலை தோன்றினாலும் ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புகள் அழியாது உலகின் எங்கோ ஒரு இடத்தில் பாதுகாப்பாக இருக்கும். அவை ஈழத்துப்படைப்பாளிகளின் பெருமையை என்றும் பறை சாற்றும்.

அந்த வகையில் ஒரு இனத்தின் வரலாற்றுத்தரவுகளை ஆவணப்படுத்துவது என்பது ஒரு மகத்தான பணியாகும். அந்தப்பணியை கடந்த 45 வருடங்களாக தனது மனைவியுடன் இணைந்து சளைக்காது செய்து வருபவர் யாழ்ப்பாணம் - குரும்பசிட்டி **இரா.கனகரத்தினம்.** தற்போது கண்டியில் வசித்து வரும் இவர் தான் சேகரித்து பத்திரப்படுத்திய ஆவணங்களை நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் 'மைக்ரோ பிலிம்'(Micro Film) ஆக்கி அவற்றை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பேணிப்பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

'தமிழர்கள் தமது வரலாற்றை ஒழுங்காகப்பதிவு செய்யாததால் வரலாறற்ற இனமாகி விட்டார்கள்' என்று தனது சரித்திர ஆசான் அருணாசலம் கூறியது தன் மனதில் ஆழமாகப்பதிந்தமையே இந்த ஆவணச்சேகரிப்புக்கு கால்கோளாக அமைந்தது என்கின்றார் இரா.கனகரத்தினம். இவரிடம் நூறு வருடங்கள் பழமை வாய்ந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்திக்குறிப்புகள் என பல தரப்பட்ட படைப்புக்கள் செவ்வனே தரம் பிரிக்கப்பட்டு வரலாற்றுப்பதிவு களாக்கப்பட்டுள்ளன.

'தமிழர்கள் தமது வரலாற்றை பறை சாற்றும் சான்றுகளை ஒழுங்காகத்தொகுத்து வைக்காத நாடாக்கள் போன்ற நவீன சாதனங்களைப்பயன்படுத்தி பாதுகாக்கின்றனர். ஆனால் தமிழர்கள் அது குறித்து சிந்திக்காமை ஒரு பெருங்குறையாகும். இதனால் தான் ஆசியாவின் தலைசிறந்த நூலகமாக விளங்கிய யாழ். நூலகத்தின் நூல்களை எம்மால் காப்பாற்ற முடியாமல் போனது.

மேலை நாடுகளில் பல காலங்களுக்கு முன்னரே 'மைக்குரோ பிலிம் (Micro Film)' முறை அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது. அந்த நாடுகளை அணுகி உதவி கேட்டிருந்தால் யாழ். நூலகத்தில் இருந்த விலை மதிப்பற்ற நூல்களை எம்மால் காப்பாற்றியிருக்க முடியும்.

பிரச்சினைகள் எழும்போது எனது படைப்புக்களுக்கு ஏதாவது நிகழலாம் அதற்கு முன் 'மைக்குரோ பிலிம் 'மூலம் இவற்றைப்பாதுகாக்க வேண்டும். ஓலைச்சுவடிகள், நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை அவற்றின் அளவுக்கேற்ப 16 mm, 35 mm கமெராக்கள் மூலம் படமாக்கப்படுகின்றன. சாதாரணமாக 16 mm சுருள்களில் 1200 பக்கங்களும், 35 mm படச்சுருள்களில் ஏறத்தாழ 600 பக்கங்களும் நுண்படப்பதிவுகளாக செய்யமுடியும்.

ஆற்றல் வாய்ந்த தொழில் நுட்பவியலாளர் ஒருவரால் 3600 பக்கங்களுக்கு மேல் அதாவது 3 நுண்படச்சுருள்களை தினமும் 'மைக்குரோ பிலிம்' ஆக்கமுடியும். பின்னர் இவை தொழில் நுட்ப ஆய்வு கூடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரசாயன செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

மூல நாடா எப்போதும் 'பிலிம் ( Film)' ஆகவே இருக்கும். இவ்வாறான நுண் படச்சுருள்களை 'மைக்குரோ பிலிம் வாசிப்புப்பிரதியாக்கல் களில் உள்ள நூலகங்களில் பத்திரப்படுத்தி வைக்கலாம். இவ்வாறான 'மைக்குரோ பிலிம்'களை நன்கு குளிரூட்டப்பட்ட அறைகளில் வைத்துப் பேணுவதன் மூலம் 200 ஆண்டுகளுக்கும், அதனை மீண்டும் பிரதி எடுப்பதன் மூலம் மேலும் 200 ஆண்டுகளுக்கும் பயன்படுத்தலாம்.

நுண்பட வாசிப்பு பிரதியாக்க கருவிகள், நுண்படச்சுருள் வாசிப்புக்கென மட்டும் உள்ள கருவிகள் மூலம் 'மைக்குரோ பிலிம்'களை வாசிக்கலாம். இவ்வகையான கருவிகள் இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள நூலகங்களில் உள்ளன.

இலங்கையில் வெளிவந்த 1000 சஞ்சிகைகள், ஏடுகள், புலம்பெயர் நாட்டு சஞ்சிகைகள் என ஏராளமானவற்றை இவர் சேகரித்து வைத்துள்ளார். மேலும் 7500 இற்கும் மேற்பட்ட பல்துறைக்கட்டுரைகளும் 4000 இற்கும் மேற்பட்ட கார்டூன் சேகரிப்புக்களும் இவர் வசம் உள்ளன. இவை அனைத்தும் 'மைக்குரோ பிலிம்' செய்யப்பட உள்ளன.

எனவே படைப்பாளிகள் தமது படைப்புகளில் ஒரு பிரதியை இவரது காப்பகத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் அவற்றை என்றும் அழியாது நிரந்தரமாகப்பேணலாம். அதே வேளை, சேகரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளவற்றின் பிரதிகள் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொண்டு அவற்றைப்பெற்றுக்கொள்ள முடியும். இவரது மின்னஞ்சல் முகவரி : kanagas@sltnet.lk

- தீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் வாழும் மாத்தளை செல்வராஜாவின் 'காவேரி' சிறுகதைத்தொகுப்பு






மத்திய மாகாண சபை உறுப்பினர் திரு. எஸ். சிவஞானம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார்.

இலண்டனில் வாழ்ந்தாலும், மண்ணையும் மக்களையும் மறக்காத நேயமிக்க எழுத்தாளர் மாத்தளை செல்வராஜா. இவரது சிறுகதைகள் மலையகத்திற்கு வளம் சேர்க்கின்றன.

இவ்வாறு மாத்தளை செல்வராஜாவின் 'காவேரி' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா அண்மையில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்ற பொழுது, விழாவிற்கு தலைமை வகித்த பேராசிரியர் எம். சின்னத்தம்பி தெரிவித்தார். "சட்டத்தரணியாக, சமூக சேவையாளராக, அரசியல்வாதியாக, எழுத்தாளராக நான்கு பரிமாணங்களைக்கொண்டு விளங்குகின்றார் மாத்தளை செல்வராஜா. பண்பட்ட எழுத்தாளரின் படைப்புக்கள் என்பதை 'காவேரி' சிறுகதைத்தொகுதி எடுத்துக்காட்டுகின்றது"

இவ்வாறு பேராதனை பல்கலைக்கழக முது நிலை விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் கண்டி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கண்டியில் நடைபெற்ற 'காவேரி' அறிமுக விழாவில் குறிப்பிட்டார்.

மாத்தளையிலும் கண்டியிலும் நடைபெற்ற 'காவேரி' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டுவிழாக்களில் இலண்டனில் பாரிஸ்டராக பணிபுரியும் செல்வராஜா இலக்கிய ஆர்வலர்களாலும், மலையக எழுத்தாளர்களாலும் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

மாத்தளை செல்வராஜா கொன்சவேட்டிவ் கட்சியின் சார்பில் லண்டனில் பிரண்ட் மாநகர சபையில் உறுப்பினராக இருந்துள்ளார்.கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட இவர் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவிருக்கின்றார். கண்டியில் திரித்துவக் கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் எழுத ஆரம்பித்த இவர், கடந்த கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக எழுத்துத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். இவரது பன்னிரண்டு சிறுகதைகளே 'காவேரி'என்ற தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது.

# 'நவாலியூரான்'



கலைக்காகவே தமிழை முழுமையாக அர்ப்பணித்து செயற் பட்டவர்களை நினைவு கூர்ந்து அவர்களை முழு மனதுடன் பாராட்ட வேண்டியது சமூகத்தின் கடமையாகும். அந்தக்கடமையை செவ்வனே நிறைவேற்றியிருக்கின்றது யாழில் இயங்கி வருகின்ற 'வாழும் கலைஞர்களைக் கௌரவிக்கும் அமைப்பு'.அந்த வகையில் கடந்த 52 ஆண்டுகளாக நாடகக் கலைக்கே தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரையை அவரது 75 ஆவது பிறந்த தினமான ஜனவரி 6 ஆம் திகதி வாழும் கலைஞர்களைக் கௌரவிக்கும் அமைப்பு கௌரவித்துள்ளது. அதனையொட்டி கலா பூஷணம் செல்லத்துரையின் படத்தை அட்டைப் படமாகக்கொண்டு 'நவாலியூரான்' என்ற பவள விழா மலரை வெளியிட்டுள்ளது. இந்நூலில் கலாபூஷணம் நவாலியூரானின் வாழ்க்கைக் குறிப்புகள், அவரது சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றில் சில பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## நூல் அறிமுகம்

# தமிழர் - யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல்

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'தமிழர் - யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல்' என்ற நூல் அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தோக்கியோ கக்சுயின் பல்கலைக் கழகத்தில் (Tokyo Gakushuin University) வருகை விரிவுரையாளராக இருந்து கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் மொழிக்கும், யப்பானிய மொழிக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி ஆய்வில் ஈடுபட்டுள்ளவர். கக்சுயின் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும்போது அங்கு நடைபெற்ற விருந்துக்கு வந்திருந்த பிறநாட்டவர் தமிழ்மொழிக்கும், யப்பானிய மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டா? என்று கேட்டமையும், தமிழர்களும் இது பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமுமே இந்த நூலுருவாக்கத்திற்குக் காரணம் என நூலாசிரியை தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் 1. தமிழர் யப்பானிய வாழ்வில் தைப்பொங்கல் 2. தமிழ்மொழியும் யப்பானிய மொழியும் - ஒப்பீட்டாய்வு வரலாறும், வளர்ச்சி நிலைகளும் என்ற இரு கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. முதலாவது கட்டுரையில் தைப் பொங்கல் பற்றிய செய்திகள், பழைய இலக்கியச் செய்திகளுடன் தொடர்பு படுத்தப்பட்டு தைப்பொங்கலின் தொடக்க நிலை பற்றிய சில கருத்துக்கள் முன் வைக்கப்பட் டுள்ளன.

அதாவது இக்கட்டுரை தகவல் தொகுப்பும் விளக்கமுமாய் அமைகின்றது. இரண்டாவது கட்டுரை ஆய்வு நிலைத்தரவுகளையும், வளர்ச்சிப்போக்குகளையும் ஆய்வின் விமர்சன நிலைப்பாட்டையும் விளக்குகின்றது.இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ள பல தகவல்கள் தமிழர் - யப்பானிய பண்பாட்டு ஒற்றுமை நிலையை வெளிப்படுத்தும் அம்சமாக தைப் பொங்கல் விளங்குகின்றது என்பதை தெளிவு படுத்துகின்றது. தமிழரின் தைப் பொங்கலுக்கும் யப்பானியரின்



புத்தாண்டுக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்புகள் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. தமிழ்மொழிச் சொற்களையும், யப்பானிய மொழிச் சொற்களையும் ஒப்பிட்டு செய்யப்பட்ட ஆய்வுகளை நோக்கும் போது இவை மொழியியல் அடிப்படையில் மட்டுமன்றி பண்பாட்டு அடிப்படையிலும் ஆழமான ஒற்று மைப்பண்புகளை வெளிப்படுத்தி நிற்பதைக் காண முடிகின்றது.


- தீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத நேர்முகம்

## செல்வம் அடைக்கலநாதன் அளித்த பேட்டி



செல்வம் அடைக்கலநாதன்

புலிகளின் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளையும் புலிகளையும் கூட ஒழிக்கும் திசையில் பேயுடனாவது பிசாசுடனாவது கூட்டுச்சேர்வதற்கு பேரினவாதக்கட்சிகள் தயாரான நிலையில், அடுத்த ஆட்சியை அமைக்கும் தரப்பை நிர்ணயிக்கும் தரப்பாக தமிழர் தரப்பே இருக்கும் என்று திடமாக நம்புகின்றார் ரெலோ அமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளரும் , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. செல்வம் அடைக்கலநாதன். அவர் 'தமிழ் உலகம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி இங்கே தரப்படுகின்றது.

கேள்வி : அடுத்த அரசை அமைக்கும் தரப்பை தீர்மானிக்கும் சக்தியாக தமிழர் கூட்டமைப்பு (வுயே) விளங்கக்கூடிய சாத்தியங்கள் தெரிகின்றனவா? மிகக்கூடிய எண்ணிக்கையாக எத்தனை எம்.பி.க்களைப்பெற முடியும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

பதில்: மிகவும் பிரகாசமாக உள்ளன. தமிழ் மக்கள் உணர்வின் அடிப்படையில் வாக்களிப்பர். எழுச்சியின் அடிப்படையில் வாக்களிப்பர். நாம் கடந்த தேர்தலில் பெற்றதை விட கூடுதலான எண்ணிக்கையான ஆசனங்களைப் பெறவிருக்கின்றோம். ஆட்சியமைக்கப்போகும் கட்சியை நாம் முடிவு செய்பவர்களாக நிச்சயம் இருப்போம்.

கேள்வி : சுதந்திர முன்னணி ஆட்சியை கைப்பற்றுமாயின் ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைவிடப்பட்ட ஒன்றாகி விடலாமா? அவ்வாறான ஒன்றைத் தொடர்ந்து மீண்டும் ஒரு போர் சூழலை எதிர்பார்க்கலாமா? அவ்வாறு ஏற்படக்கூடிய ஒரு போரின் விளைவுகள் எவையாக இருக்கலாம்?

பதில்: சுதந்திரக்கூட்டமைப்பு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை புலிகள் இயக்கம் கையளித்த போது அதை நிராகரித்தது. மூன்று அமைச்சுக்களை பறித்தெடுத்து அதற்கு முட்டுக்கட்டையாக செயற்பட்டது. இடைக்கால நிர்வாகமானது ஈழ அரசொன்றிற்கு முன்னோடியானது என்று விமர்சித்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்று ஜே.வி.பி தலைவர் வீரவன்ஸ கூறியிருந்தார். புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமென்று இப்போது வலியுறுத்தி வருகின்றார்.

இந்நிலையில் சுதந்திரக்கூட்டணி ஆட்சிக்கு வருமாயின் போர் வெடிக்கக்கூடிய சாத்தியங்கள் உண்டு. தமிழ்மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தென்னிலங்கை மக்கள் இந்தத்தேர்தலில் எடுக்காவிட்டால் நாடு பிரிவதை தவிர்க்க முடியாது போகலாம்.

கேள்வி : 2001 டிசெம்பர் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து வந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் மக்கள் சமாதானத்திற்கு அபரிமிதமாக வாக்களித்திருந்தனர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள சுதந்திரக்கூட்டணி கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளின் விகிதத்தின் அடிப்படையில் (PA= 37.19% JVP=9.10%) தமக்கு வெற்றி வாய்ப்பு நிச்சயம் என்று நம்புகின்றது. அத்துடன் தேசிய இன உணர்வகள் இன்று மேலோங்கியுள்ளதாகவும் கூறுகின்றது. தேர்தல் பெறுபேறுகள் தமிழர் தரப்பின் அடுத்த நடவடிக்கையை தீர்மானிக்கவுள்ளன என்பது பற்றி.....?

பதில்: சுதந்திரக்கூட்டமைப்பினர் இன உணர்வுகளை தீவிரமாக விதைத்து வருகின்றனர். இருப்பினும் சாதாரண மக்கள் இந்த கோஷங்களுக்கு துணை போக மாட்டார்கள் என்று நம்ப முடியும். வறுமைக்கோட்டில் வாழ்க்கை நடத்தும் சிங்கள மக்களின் பிள்ளைகளே படைகளில் சேர்க்கப்பட்டு போர்முனைக்கு அனுப்பப்பட்டார்கள். போர் முனையிலிருந்து அவர்களின் வீடுகளுக்கு இறந்த உடல்களே அனுப்பப்பட்டன. இன்று இந்த நிலை இல்லை. இதனால் சிங்கள மக்கள் இன்னுமொரு போரை விரும்ப மாட்டார்கள் சமாதானம் வேண்டுமென்றே அவர்கள் தேர்தலில் வலியுறுத்துவார்கள் என்று நம்புகின்றோம்.

கேள்வி: புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கான அடித்தள வேலைகள் செய்யப்பட்டு விட்டன. அவர்களை பிரதான அரசியல் நீரோட்டத்தினுள் கொண்டுவருவதே எமது நோக்கம் என்று ஜனாதிபதி குமாரதுங்க தனது கட்சியினருக்கு கூறி வருவது பற்றி..........?

பதில்: தமிழர் தரப்பு எடுப்பார் கைப்பிள்ளையாக இன்று இல்லை. அவர் இவற்றை உளப்பூர்வமாக கூறவில்லை. சமாதானப்புறா என்று சில காலம் கூறித்திரிந்தார். இன்று போல ஒரு அமைதி நிலையை தனது காலத்தில் ஏற்படுத்த முடியாது போயிற்றே என்று நினைத்து புலம்புகின்றார். தமது உரிமைகளை கேட்டு வாங்கும் நிலையில் தென்னிலங்கைத்தலைமைகளுக்கு பின்னால் செல்லும் நிலையில் தமிழர் தரப்பு இன்று இல்லை.

கேள்வி : பிரதி இராஜாங்க செயலர் ரிச்சாட் ஆர்மிரேஜ் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கேற்ற கள நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அறிவுறுத்தியிருக்கின்றார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இது சமாதானத்திற்கு விரோதமான போக்கைக் கடைப்பிடிக்கக்கூடாது என்று தெரிவிக்கும் மறைமுகமான போக்கென்று கருத முடியும். இந்நிலையில் ஜனாதி பதி தேர்தல் பிரசாரங்களில் இனவாதபோக்கை கைவிடுவாரென்று கருதலாமா?

பதில்: இல்லை. இதுவும் கூட செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கும். இதற்கு முன்னரும் சர்வதேச சமூகம் பல ஆலோசனைகளை முன் வைத்தது. டோக்கியோ நிதியுதவி, சமாதான வேலைத்திட்டம் என்பவற்றை சிதைக்க வேண்டாம் என்று அறிவுரைகள் விடுக்கப்பட்டன. ஆனால் அத்தனையையும் அசட்டை செய்து விட்டு ஜனாதிபதி பாராளுமன்றத் தேர்தலை நடத்துகின்றார். இனவாதத்திற்கு தலை சாய்த்து சிங்கள மக்கள் வாக்களிப்பர் என்று நம்புகின்றார். அப்பாவி மக்களின் உயிர்கள் மீது குளிர் காய விரும்புகின்றார். ஆனால், சிங்கள மக்கள் எதிர்வரும் தேர்தலில் இதற்கு நல்ல பாடம் புகட்டுவர் என்று நம்புகின்றோம்.

கேள்வி : புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இந்தத்தேர்தலில் எத்தகைய பங்களிப்பைச் செய்யலாம் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? அவர்களது அபிலாஷைகளை பாராளுமன்றத்தில் பிரதிபலிப்பதற்கு ஏற்ற முறைமை ஒன்று இல்லாத குறை பற்றிய உங்கள் கருத்து?

பதில்: புலம் பெயர்ந்து வாழும் தமழர்கள் எமது போராட்டத்தின் வெற்றிக்கு சம பங்களிப்புகள் செய்தவர்கள். அவர்கள் தொடர்பான விவகாரங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே உரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதே வேளை புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தத்தமது நண்பர்கள் உறவினர்களுடன் தொடர்பு கொண்டு, அடுத்த அரசை அமைக்கும் தரப்பை தீர்மானிக்கும் தரப்பாக எம்மை வலுப்படுத்துவதில் பங்களிக்க வேண்டும்

-பேட்டி - நீரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் மருந்தாக இசை



சாதாரண மக்களுடன் ஒப்பிடும்போது இசைக்கலைஞர்களின் மூளையின் சில பாகங்கள் குறிப்பிடத்தக்களவு மாறுதல்கள் உடைய வையாக இருப்பதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. சர்வதேச நரம்பு - உளவியல் சங்கத்தின் தலைவரான சிக்காக்கோ பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் மொய்சஸ் கவிறியா என்பவரே இவ் ஆய்வை மேற்கொண்டவர். இவரின் ஆய்வுப்படி இசைக்கலைஞர்களின் மூளையின் இயக்கப்பரப்புகள், மூளி இன்னும் சில பகுதிகள் அசாதாரணமானவையாகவும் மீள் தன்மை உடையவையாகவும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி பேராசிரியர் கவிறியா கீழ்க்கண்டவாறு தெரிவிக்கின்றார். இசையானது மனித மனங்களில் கிளர்ச்சிகளை உண்டு பண்ணி நரம்பு மண்டல ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்துவது என்பது ஆச்சரியமானது. இது பற்றி ஆராய்வதற்கு நரம்பியல், நரம்பு உளவியல் என்பன பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வது அவசியம்.இசைக்கலைஞர்களின் மூளையானது நரம்புத்தொகுதியின் மீள்தன்மைக்கு ஒரு உதாரணமாக காட்டப்படுகின்றது. தொடர்ச்சியாக இசைப்பயிற்சி செய்யும்போது மூளையின் பாகங்கள் வளர்ச்சியடைகின்றன. என கண்டறியப்பட்டுள்ளது.

சிறு வயதிலிருந்தே தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இசைப் பயிற்சி காரணமாக அவர்களின் மூளைக்குரிய நரம்பு மண்டலத்தில் மேற்பட்டைகள், இயக்கப்பரப்புகள், கேட்டல் நரம்புகள் என்பவற்றில் பல்வேறு பரிணாம வளர்ச்சிகள் ஏற்படுகின்றன.

மூளையில் குறிப்பிடத்தக்களவு கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுகின்றன. மூளையின் தொழிற்பாட்டில் மாறுதல்கள் ஏற்படுகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இம் மூளையை ஆராயும் ஒருவர் இசைத் திறன்களுக்கு பொறுப்பான மூளையின் குறித்த பாகங்களைப் பற்றியும் அவற்றின் வளர்ச்சி பற்றியும் புரிந்துகொள்ள முடியும்.

சங்கீதம் கற்கத் தொடங்கியபோது இருந்ததை விட பின்னர் நன்கு வளர்ச்சியடைந்திருக்கும் இவை யாவும் கட்டமைப்பு மாற்றங்கள். முக்கியமாக மூளைக்கனவளவு அதிகரிக்கின்றது. இயக்கப்பரப்புகளில் கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுகின்றன.

தனது குறித்த பாகத்தினூடாக மூளை எவ்வாறு இசையை இனங்கண்டு கொள்கின்றது. ஒலிக்சமிக்ஞைகளை எவ்வாறு பிரித்தறிந்து கொள்கின்றது என்பது பற்றி பல விளக்கக் குறிப்புகள் உள்ளன.

இசையானது மூளைக்கொள்ளளவை அதிகரித்து அதன் உணர்வுத் தன்மையை செறிவாக்கி மூளையின் வினைத் திறனை அதிகரிக்கின்றது. மொத்தத் தில் இசையானது நோய் நீக்கும் மருந்தாக செயற்படுகின்றது. மனத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் ஆறுதலளிக்கின்றது.

இடது மூளியும் வலது மூளைய மேற்பட்டையும் இசையின் நுட்ப வேறுபாடுகளைப்பிரித்தறிவதற்கும் மொழியை விளங்கிக் கொள்ளவும் செய்கின்றன. இசையின் சுருதி பண்பு, கால இடைவெளி உரப்பு, திரும்பத்திரும்ப நிகழும் தன்மை (Rhythum) என்பன மூளையின் பல பாகங்களுடாக பிரித்துணரப்படுகின்றது.

நவீன மனிதனின் மூளையின் பரிணாம வளர்ச்சியானது இசையுடன் அதற்குமுள்ள தொடர்பு, மனித அபிவிருத்திக்கு உதவக்கூடிய உயிரியல், சமூக பரிமாணங்களை உருவாக்குதல் என்பவற்றின் மூலமாகவே அளவிடப் படுகின்றது.

கவிறியாவின் ஆய்வின்படி இசையானது நரம்பு மண்டலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி அகஞ்சுரப்பு தொகுதி, நிணநீர்த்தொகுதி என்பனவற்றின் சுரப்பையும் தூண்டுகின்றது என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மூளையில் இசை ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய இவரின் ஆய்வு மூளை பற்றிய மேலும் ஆய்வுகளுக்கு வழி கோலியுள்ளது.

-ஆரணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக அரசியலின் பலவீனத்தால் சீரழியும் மலையக பொருளாதாரமும் அதன் சமூகமும்!

மலையகத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதன் மூலமே மலையக சமூகத்தின் வாழ்க்கை நிலையை உயர்த்த் முடியும். எனவே திடமான பொருளாதார நிலையை மலையகத்துள் ஏற் படுத்த மலையக சமூகத்தின் அரசி யல் ரீதியான பலத்தை முதலில் உறுதி செய்ய வேண்டும். ஏனெ னில் இலங்கையில் தமிழ் சமூகத் தின் மீதான இனவாத போக்கு ஒரு புறம் இருக்க, தமிழ் சமூகம் அதன் உரிமைகளை பெறுவது குதிரைக் கொம்பாக உள்ளது.எனவே மலையக தமிழ் சமூகம் அதன் உரி மைகளைப்பெறவும் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் பேரின அர சோடு அரசியல் ரீதியான பலத்தோடு போராடவேண்டியுள்ளது. இவ்வாறு அரசியல் ரீதியான பலத்தைப் பெறு வதன் மூலமே மலையக பொருளா தாரத்தைத் திடப்படுத்தலாம்.



இலங்கையின் அரசியல் பேரின வர்க்கத்தின் சர்வாதிகார போக்கி லேயே நடைபெறுகின்றது. இந்த பேரின கட்சிகள் மலையக தமிழ் சமூ கத்தின் வாக்குப் பலத்தை கபடத் தனமாக தனதாக்கிக்கொள்வதோடு மலையக தமிழ் சமூகத்துக்கு எந்த விதமான உதவிகளும் செய்யாமல், திரை மறைவில் மலையக தமிழ் சமூ கத்தின் இன அழிப்பை செம்மையாக நிறைவேற்றுகின்றன. அது மட்டுமல் லாது மலையக தமிழ் சமூகத்தின் அரசியல் நிலையை உறுதி அடைய விடாமல் மலையக அரசியலை சித றடிக்கும் செயல்திட்டத்தை சிறப்பா கவே பேரின அரசு காலங்காலமாகவே செயல்படுத்துகின்றது.

இந்த நிலை மாற வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்? என்ற வினா ஒவ்வொரு மட்டத்திலும் எழுப்பப்படு கின்றது. இதற்கு மலையகத்தின் சகல மட்டத்திலும் உள்ள தமிழ் சமூ கத்தின் ஒன்றிணைப்பு காலத்தின் தேவை யுமாக பரிணமித்துள்ளது. அதாவது மலையகத்துள் நிலை கொண்டிருக்கும் தமிழ் மக்கள் சரியான அரசியல் கட்சி கள், தொழிற்சங்கங்கள், இடது சாரி அமைப்புகள் என்பன கூட்டுச்சேர வேண் டியது அத்தியாவசியமான நிலையாக உள் ளது.

சந்தர்ப்பவாத அரசியலை விட்டு மலை யகத்தின் இரு பெரும் அரசியல் கட்சி களும் தன்னினத்தின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு ஒரே பாதையில் பய ணிக்க வேண்டும். மலையகத்தின் பெரும் அரசியல் சக்திகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி இரண்டும் முதலில் பொது இணக்கப்பாட்டுக்கு வருவது மிக வும் அவசியமானதொன்றாகும்.

ஏற்கனவே மலையகத்தில் பதின் மூன்று தொழிற்சங்கங்கள் கூட்டுச்சேர்ந் துள்ளன. ஆறுமுகம் தொண்டமான், செல்லச்சாமி தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பெ.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, டி.வி. சென்னன், சதாசிவம் தலைமையிலான தொழிற்சங்கம், புத்திரசிகாமணி, கந்தையா ஆகியோரின் தொழிற்சங்கங்கள், பதின் மூன்று தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, மனோ கணேசன் தலைமையிலான மேல் மாகாண மக்கள் முன்னணி, தம்பையா தலைமையிலான இடது சாரி அமைப்பு போன்ற சகல மலையக சக்திகளும் ஒரே குடையின் கீழ் இணைய வேண்டும்.

இந்த மலையக தமிழ் கூட்டமைப்பு உருவாக்கத்தின்போது கடந்த காலத் துள் ஒவ்வொன்றுக்கும் இடையே ஏற் பட்ட கசப்பான விடயங்களை மறந்து விட்டு விட்டுக்கொடுப்புகளுடன் இதய சுத்தியுடன் கை கோர்க்க வேண்டும். மலையக தமிழ் கூட்டமைப்புக்கான கொள்கை மலையக தமிழ் சமூகத்தின் நலன்கருதி வடிவமைக்கப்படவேண்டும். இதன்போது வெறுமனே இந்திய வம்சாவளி தமிழர் களின் நிலையை மட்டும் கருத் தில் கொள்ளாது மலையகப் பகுதியில் வாழும் இலங்கைத்தமிழர் களின் நிலையைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அத்துடன் கொழும்பு வாழ் தமிழர்களின் நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் இன்று கொழும்பில் மலையக தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். எனவே இந்த எல்லா விடயத்தையும்

**"மலையகத்தின் இரு பெரும் அரசியல் கட்சிகளும் தம்மினத்தின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு ஒரே பாதையில் பயணிக்க வேண்டும்."**

கருத்தில் கொண்டு அனைத்துத் தமிழர் களின் உறுதிப்பாட்டிற்கான கொள்கை வகுக்கப்படவேண்டும்.

மலையக தமிழ்க் கூட்டமைப்பு ஓர ணியாக திரள்வதோடு தனித்து ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடும் நிலை வேண்டும். இதனால் பாராளுமன்றத்திற்கு செல்லும் பிரதிநிதித்துவம் அதிகரிப்ப தோடு தேசியப்பட்டியல் ரீதியாகவும் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கலாம். இலங்கையின் தமிழ்க்கட்சிகள் அனைத் தும் ஓரணியாக போட்டியிடுவதற்கு வழிவகுப்பதாகவும் இருத்தல் நல்லது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மாவட்டங்களில் மலையக தமிழர்களின் சனத்தொகைப்பரம்பல்

| மாவட்டம் | சிங்களவர் | இலங்கைத்தமிழர் | இந்தியதமிழர் | முஸ்லிம் | மொத்தத்தமிழர்கள் |
|---|---|---|---|---|---|
| **மத்திய மாகாணம்** | | | | | |
| நுவரெலியா | 286 535 | 88 008 | 308 259 | 14 688 | 396 267 |
| கண்டி | 910 037 | 43 340 | 115 130 | 114 310 | 158 470 |
| மாத்தளை | 348 131 | 9 901 | 36 973 | 44 909 | 46 874 |
| **ஊவா மாகாணம்** | | | | | |
| பதுளை | 574 450 | 28 104 | 120 365 | 31 916 | 148 469 |
| மொனறாகலை | 187 185 | 3 177 | 12 163 | 4 090 | 15 340 |
| **சப்ரகமுவமாகாணம்** | | | | | |
| இரத்தினபுரி | 642 900 | 19 237 | 77 014 | 18 444 | 96 251 |
| கேகாலை | 535 807 | 19 498 | 35 112 | 13 529 | 54 610 |
| **மேல்மாகாணம்** | | | | | |
| களுத்துறை | 88 580 | 9 215 | 32 471 | 13 070 | 41 686 |

மேலுள்ள தரவுகளின்படி மலையக தமிழக்கூட்டமைப்பு உருவாக்கப்படின் நுவரெலியா மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை மலையக தமிழக்கூட்டமைப்பு பெற முடியும், அது மட்டுமல்லாது கண்டி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து பதினான்காயிரம் முஸ்லிம் வாக்காளர்கள் தங்களது இரு பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்ப முடியுமாயின் ஒரு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் தமிழ் வாக்காளர்கள் தங்களது ஒரு பிரதிநிதியையாவது பாராளுமன்றம் அனுப்பலாம். (தற்போது கண்டி மாவட்டம் சார்பாக தமிழ் பிரதிநிதித்துவம் தொடர்ந்து இழக்கப்பட்டு வருகின்றது) இவ்வாறு கூட்டமைப்பு அமையுமாயின் மாத்தளை மாவட்டத்திலுள்ள தமிழ் வாக்குகள் தேசிய பட்டியலை பலப்படுத்தும்.

பதுளை மாவட்டத்தை பொறுத்தளவில் கூட்டமைப்பு அமையுமாயின் நிச்சயம் இரண்டு பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்பலாம்.(தற்போது ஒரு பிரதிநிதித்துவமே காணப்படுகின்றது) இரத்தினபுரி மாவட்டத்தைப் பொறுத்தளவில் தொண்ணூறாயிரம் தமிழ் வாக்குகள் இருந்தும் தமிழ் பிரதிநிதித்துவம் தொடர்ந்து இழக்கப்பட்டு வருகின்றது. எனவே மலையக தமிழ்க்கூட்டமைப்பு உருவாகுமாயின் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்தும் ஒரு தமிழ்ப்பிரதிநிதி பாராளுமன்றம் செல்வார். களுத்துறை மாவட்டத்தில் பதின் மூன்றாயிரம் முஸ்லிம் வாக்காளர்களால் தங்களது ஒரு பிரதிநிதியை பாராளுமன்றம் அனுப்ப முடியுமாயின் நாற்பதாயிரம் தமிழ் வாக்காளர்களால் ஏன் தங்களது ஒரு பிரதிநிதியை பாராளுமன்றம் அனுப்பமுடியாது.

எனவே மலையக தமிழ் கட்சிகள் மலையக சமூகத்தின் நலன்கருதி இந்த மலையக தமிழ்கூட்டமைப்பை உருவாக்க முன் வரவேண்டும்.

இதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி (ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்) என்பன முன் னிலை வகித்து ஏனைய மலையக சக்திகளையும் இணைக்க வேண்டும்.

மலையக தமிழ்க்கூட்டமைப்பு உருவாகுமாயின் அதிக மலையக தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்வதோடு மலையக அரசியலை உறுதியாக்குவதன் மூலம் மலையக பொருளாதாரத்தை திடமாக்கலாம்.

அதே போல மலையக தோட்டங்களை பேரினவாத கம்பனிகளுக்கு பலியிடாது சர்வதேச தமிழ் கம்பனிகளுக்கு நிர்வகிக்கக் கொடுப்பதன் மூலம் மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கையைச்செம்மைப்படுத்த சர்வதேச கம்பனிகளுக்கு சந்தர்ப்பம் வழங்க மலையக தமிழ் கூட்டமைப்பு உருவாக வேண்டும்.

**எஸ்.பி.பாலமுருகன்**

ஜனாதிபதி 02-04-2004 அன்று பொதுத்தேர்தலை அறிவித்துள்ளார். இவ்வாறான பொதுத்தேர்தலுக்கு பேரினகட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் தயாராகவே உள்ளன. ஆனால் மலையக தமிழ்க்கட்சிகள் உறுதியாக இல்லை. இந்த பொதுத்தேர்தலுக்கு மலையக தமிழ்க்கட்சிகள் கூட்டுச்சேர முடியாவிடினும் எதிர்வரும் தேர்தல்களுக்காவது முகங்கொடுக்க இந்த மலையக கூட்டமைப்பு உருவாக வேண்டியது காலத்தின் கட்டாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னால் முடியும்!



'முடியாது' என்ற வார்த்தைப் பிரயோகம் இன்று பொதுவாக எல்லோர் மத்தியிலும் பயன்படுத்தப்படுகின்றது. 'என்னால் முடியாது' என்ற நிலை மனதில் ஆழமாகப் பதிந்து விட்டால் சிறிய வேலைகளைக் கூட செய்ய முடியாமல் போகும்.

எந்த ஒரு செயலையும் 'முடியாது' என்று ஒதுக்கி விட முடியாது. 'வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லைப் பூமியில்......' என்பதைப்போல 'என்னால் முடியும்' என்று நினைத்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகி விடும்.

பலர் தமது வாழ்க்கையில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டு விட்டால் ஒரேயடியாகச் சோர்ந்து விடுகின்றனர். பிரச்சினைகள் ஏற்பட்டால் அந்தப் பிரச்சினைக்கான காரணம் என்ன? எவ்வாறான சூழ்நிலையில் பிரச்சினை ஏற்பட்டது என்பது குறித்து ஆராய்ந்து பாருங்கள். பல பிரச்சினைகள் சூழ்நிலை காரணமாக ஏற்படலாம். சூழ்நிலை மாறும்போது பிரச்சினைகளும் மாறி விடும். சிலர் தமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை தமது நண்பர்கள் எதிர் கொண்ட பிரச்சினையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். இந்த ஒப்பீடு தவறானது. எந்த ஒரு செயலும் இடத்துக்கிடமும், ஆளுக்கு ஆளும் வேறுபடும்.

எபபோதும் உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை 'இது எனது பிரச்சினை, இதனை நான் தான் தீர்க்க வேண்டும்' என்று நினைத்தீர்களானால் உங்களால் உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்க முடியும். இதனால் தன்னம்பிக்கை வளர்வதோடு எதிர்காலத்தில் எந்தப் பிரச்சினைகளுக்கும் உங்களால் முகம் கொடுக்க முடியும்.

எனவே என்னால் முடியாது என்பதற்கு ஆயிரம் காரணங்கள் சொல்வதை விட என்னால் முடியும் என்பதற்கு ஒரு காரணம் சொல்லுங்கள். உங்கள் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு கிடைப்பது உறுதி!



# சுகமான குளியல்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நடக்க வேண்டிய அற்புதமான அனுபவம் குளியல். இது உங்களுக்குள் முடங்கிக்கிடக்கும் சோம்பேறித்தனத்தை விரட்டுகின்றது. எல்லையற்ற புத்துணர்ச்சியைத் தருவதோடு சருமத்தைச் சுத்த மாக்கி புதிய பொலிவைத் தருகின்றது. சுட வைத்த நீரில் குளிக்கும் பழக்கமுள்ளவர்கள் கடைசியாக சாதாரண நீரில் குளித்தால் சருமம் ஒளி வீசும் தன்மை யைப்பெறும்.

# பயன் தரும் பழங்கள்



**விளாம்பழம்**

உடலுக்கு சுகமும், நல்ல பசியும் உண்டாகும். பித்தம், தாகம் நீங்கும். இதனை உணவுக்கு முன்னும், பின்னும் உண்ணலாம்.

**மாதுளம்பழம்**

சரீரம் குளிர்ச்சியடையும், இரத்த விருத்தி உண்டாகும்.

**எலுமிச்சம்பழம்**

மயக்கம், வாய் குமட்டல், நீர் வேட்கை கண்ணோய், காது வலி ஆகியவற்றைப் போக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறி ஜூஸ் (Vegetable juice)



**தேவையான பொருட்கள்**


* நீற்றுப்பூசணி - 400 கிராம்
* கரட் - 250 கிராம்
* பீற்றூட் - 50 கிராம்
* பெரிய வெள்ளரிக்காய் - 300 கிராம்
* தக்காளி - 100 கிராம்
* புதினா இலை - ஒரு கைப்பிடி
* இஞ்சி - 1/2 அங்குலத்துண்டு (தோல் நீக்கியது)
* தூளாக்கிய சீனி அல்லது தேன் - சுவைக்கேற்ப
* உப்பு - 2 சிட்டிகை
* எலுமிச்சைச்சாறு - 1 தேக்கரண்டி

**செய்முறை**

வெதுவெதுப்பான நீரில் மரக்கறி களைக் கழுவிக்கொள்ளுங்கள். நீற்றுப்பூசணி, பீற்றூட், கரட் ஆகியவற்றின் மேல் தோலை அகற்றவும். வெள்ளரியை பெரிய துண்டுகளாக (கசப்பில்லாமல் இருக்கவேண்டும்) வெட்டவும். ஜூஸரில் முதலில் இஞ்சி அடுத்த கரட்,பீற்றூட் என்ற வரிசையில் ஏனையவற்றைப் போடவும். பின்னர் இந்தச்சாறுடன் உப்பு, எலுமிச்சைச் சாறு,சீனி அல்லது தேன் கலந்து பரிமாறவும்.

# இனிய இல்லறம்

ஆண், பெண் என்ற இரு மனங்கள் ஒரு மனதாக சங்கமிக்கும் இடம் இல்லறம். இதனால் தான்' இல்லறம் என்பது ஆண், பெண் இருவரும் ஒரு மனப்பட்டுப்பயிலும் பாடசாலை. திருமண வாழ்க்கையை விட உயர்ந்த கல்வி உலகில் மானிட குலத்துக்கு இல்லை' என்றார் பெர்னாட் ஷா. தூய்மையான காதலின் அடிப்படையில் தான் இனிய இல்லறம் பிறக்கின்றது. கணவன், மனைவி இருவரும் ஒருவருக்கொருவர்



அன்பு செலுத்தும்போது தான் இல்லறம் இனிமையாகின்றது, அர்த்தமுடையதாகின்றது.

இன்றைய இளம் சமுதாயத்தின் மத்தியில் காதல் என்பது பொழுது போக்காக மாறி விட்டது. அவர்கள் நாகரிகத்தால் கவரப்பட்டு திருமணத்துக்கு முன்னரே குழந்தைகளைப்பெற்று அந்தக் குழந்தைகளை அநாதைகளாக்கி விடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் எதிர்காலத்தில் குடும்பம் என்கிற அமைப்பு இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் எல்லோரையும் ஆட் கொண்டுள்ளது.

ஆண், பெண் இணைப்பு என்பது கொச்சையானதல்ல, அதனை உடலின் தேவை என ஒதுக்கி விட முடியாது. கணவன், மனைவியின் இணைப்பில்தான் நல்ல பிள்ளைகள் உருவாகின்றார்கள்.

இன்று பெற்றோர்கள் தமது ஆண் பிள்ளைகளை அதிகமான ஆண்மையோடும், பெண்களை அதிகமான பெண்மையோடும் வளர்த்து விடுகின்றார்கள். இத தவறு. பெண் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியறிவைக் கொடுத்து அவர்களைத் தன்னம்பிக்கை உள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

அதன் மூலம் அவர்கள் சுதந்திரமான முடிவு களை எடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதே போன்று ஆண்பிள்ளைகளை குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவர்களிடம் உள்ளது என்பதை புரிய வைத்து வளர்க்க வேண்டும்.

இதனால் அவர்களது எதிர்கால வாழ்க்கை இன்பமயமானதாக இருக்கும். அதாவது சுதந்திரமாக சிந்திக்கும் ஆணும், பெண்ணும் இணைந்து நடத்தும் இல்லறம் என்றும் சிறப்பானதாக இருக்கும்.

அறிவுடமை, நற்குணம், கல்வி, புலனடக்கம், வல்லமை, குறைவான பேச்சு, தகுதிக்கேற்றபடி தானம் செய்தல், நன்றி அறிதல் ஆகிய குணங்களை கணவனும், மனைவியும் கடைப்பிடித்து வாழும் இல்லறமே சிறந்த நல்லறமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத பலன்கள்

பிரம்மஸ்ரீ சோ.சிவகடாட்ச சர்மா

01.03.2004 - 31.03.2004

### மேடம்

**அஸ்வினி-பரணி-கார்த்திகை-1ம் பாதம்**

கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். 10 ஆம் திகதிக்குப்பின் வெளிநாட்டுப்பயணம், தூரப்பயணம் உண்டு. திருமணம் முதலிய சுப காரியங்கள் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத்துணைக்கு நோய் ஏற்படலாம். பிள்ளைகளுக்கு நன்மை உண்டு. பிள்ளைகளாலும் நன்மையுண்டு. சகோதர உதவியுண்டு. 14 ஆம் திகதிக்குப்பின் சில பிள்ளைகள் வெளிநாடு செல்வர். வாயு சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம். பத்ரகாளியை வழிபடவும். கூடாத நாட்கள் : 8,9,12,13

### இடபம்

**கார்த்திகை 2,3,4ம் பாதம் ரோகிணி மிருகசீரிடம் 1,2ம் பாதம்**

ஏழரைச்சனி கடைக்கூறு நடக்கிறது.கல்வியில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். தொழில் மத்திமம். வியாபாரம் 4 ஆம் திகதிக்குப்பின்னர் முன்னேற்றமடையும். சிலருக்கு வெளிநாட்டுப்பயணம், பொருட் செலவு, இடமாற்றம் அல்லது தூரப்பயணம் உண்டு. குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்படும். வீடு, நிலம், வாகனம் வாங்க அல்லது விற்க இடமுண்டு. திருமண முயற்சிகள் தாமதப்படும். சளி சம்பந்தமான நோய்கள் ஏற்படும். சனீஸ்வரனை வழிபடவும். கூடாத நாட்கள் : 10,11,14,15

### மிதுனம்

**மிருகசீரிடம் 3,4ம் பாதம்-திருவாதிரை-புனர்பூசம் 1,2,3ம் பாதம்**

ஏழரைச்சனி நடுக்கூறு நடக்கின்றது. க்ல்வியில் மந்த நிலை இருக்கும். தொழிலில் தடை, தாமதங்கள், பிரச்சினைகள் ஏற்படலாம். வியாபாரத்தில் நட்டமடைய நேரிடலாம். 10 ஆம் திகதி வரை ஓரளவு நன்மையுண்டு. 29 ஆம் திகதிக்குப்பின் சில பிள்ளை கள் வெளிநாடு செல்வர். தகப்பன் வழிச் சொத்துக்கள் சேரலாம். திருமண முயற்சிகள் தாமதப்படும். உஷ்ண ரோகங்கள் ஏற்படலாம். சனீஸ்வரனை வழிபடவும்.

கூடாத நாட்கள்: 12,13,16,17,18

### கடகம்

**புனர்பூசம் 4ம் பாதம்-பூசம்-ஆயில்யம்**

ஏழரைச்சனி முற்கூறு நடக்கின்றது. கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காணப்படும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. வியாபாரம் மத்திமம். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்படும். வாழ்க்கைத்துணை தூரப்பயணம் அல்லது வெளிநாடு செல்ல இடமுண்டு. உடல் நலக்குறைவு உண்டு. 10 ஆம் திகதிக்குப்பின் பொருள் லாபம் கிடைக்கும். வீடு, நிலம், வாகனம், வாங்க விற்க முடியும். திருமண முயற்சிகள் தாமதப்படும். சனீஸ்வரனை வழிபடவும்.

கூடாத நாட்கள் : 14, 15,18,19,20

### சிம்மம்

**மகம்-பூரம்-உத்திரம் 1ம் பாதம்**

கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரம் செழிப்புறும். வெளிநாடு சென்றோர் விடுமுறையில் தாய்நாடு செல்வர். திருமண முயற்சிகள் வெற்றி தரும். தடைப்பட்ட திருமணங்கள் நடக்கும். 10 ஆம் திகதிக் குப்பின் வீடு, நிலம், வாகனம் வாங்கலாம் அல்லது விற்கலாம். 14 ஆம் திகதிக்குப்பின் உடல் நலக்குறைவு ஏற்படும். தத்துக்கள், விபத்துக்கள் ஏற்படலாம். தட்சணா மூர்த்தி வழிபாடு நன்று.

கூடாத நாட்கள் : 16,17,18,20,21,22

### கன்னி

**உத்திரம் 2,3,4ம் பாதம்-அத்தம்-சித்திரை 1,2ம் பாதம்**

கல்வியில் மந்த நிலையிருக்கும். தொழில் மத்திமம், வெளிநாடு தொடர்பான வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். வெளிநாட்டுப்பயணம், பொருட்செலவு தூரப்பயணங்கள் உண்டு. 14 ஆம் திகதிக் குப்பின் திருமண முயற்சிகள் வெற்றியளிக்கும். 29 ஆம் திகதிக்குப்பின் அதிஷ்டம் பணவரவு உண்டு. உஷ்ண ரோகங்கள் ஏற்படலாம். தட்சணாமூர்த்தி வழிபாடு நன்று.

கூடாத நாட்கள் : 18,19,20,23,24

### துலாம்

**சித்திரை 3,4ம் பாதம் சுவாதி - விசாகம் -1,2,3ம் பாதம்**

கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் உண்டு. 14 ஆம்திகதி வரை வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். அதன் பின் சற்றுக்குறையும். வெளிநாட்டுப் பயணங்கள் சாத்தியமாகும். திருமண முயற்சிகள் வெற்றியளிக்கும். குடும்ப மகிழ்ச்சி உண்டு. 10 ஆம் திகதிக்குப் பின்னர் வாழ்க்கைத்துணைக்கு கஷ்ட நிலை, பிள்ளைகளுக்கு நன்மையுண்டு. உஷ்ண ரோகங்கள் ஏற்படலாம்.

கூடாத நாட்கள் : 20,21,22,25,26,27

### விருச்சிகம்

**விசாகம் 4ம் பாதம்-அனுஷம்-கேட்டை**

சனி அட்டமத்தில். கல்வியில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். தொழில் மத்திமம். வியாபாரத்தில் நட்டம் காட்டும். இடமாற்றங்கள்,தூரப்பயணங்கள் ஏற்படும். நோய், விபத்து காயப்படுதல், சத்திர சிகிச்சைக்கு இடமுண்டு. வீடு,நிலம், வாகனம் வாங்கவோ விற்கவோ வேண்டாம். கூடாத நாட்களில் பயணம் மேற்கொள்ள வேண்டாம். திருமண முயற்சிகள் தடைப்பட்டாலும் 29 ஆம் திகதிக்குப்பின் கைகூடும். வயிறு, குடல் சம்பந்தமான ரோகங்கள் வர இடமுண்டு. சனீஸ்வரனை வழிபடவும்.கூடாத நாட்கள் : 1,2,23,24,28,29

### தனுசு

**மூலம்-பூராடம்-உத்திராடம் 1ம் பாதம்**

கல்வியில் முன்னேற்றம் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. அதிக லாபம் கிடைக்கும். வெளிநாட்டுப் பயணம் சாத்தியமாகும். வீடு, நிலம், வாகனம் வாங்கலாம் விற்கலாம். திருமண முயற்சிகள் வெற்றியளிக்கும். 10 ஆம் திகதிக்குப்பின்னர் பிள்ளைகளுக்கு கஷ்ட பலன். பெற்றோருக்கு நன்மையுண்டு. சளி சம்பந்தமான நோய்கள் இடைக்கிடை தொல்லை கொடுக்கும். மகாலக்ஷுமியை வழிபடவும்

கூடாத நாட்கள் : 3,4,5,25,26,27

### மகரம்

**உத்திராடம் 2,3,4ம் பாதம்-திருவோணம்-அவிட்டம் 1,2ம் பாதம்**

வியாழன் அட்டமத்தில். கல்வியில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். தொழிலில் பிரச்சினைகள் தோன்றும். வியாபாரத்தில் நட்டம் ஏற்படலாம். வெளிநாட்டுப்பயணம் தடைப்பட்டு பின் சாத்தியமாகும். வீடு, நிலம், வாகனம் சேரும். திருமணம் தாமதப்படும். பிள்ளைகளுக்கு நன்மையுண்டு. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வாத சம்பந்தமான நோய்கள் வரலாம். வியாழ பகவானையும் தட்சணா மூர்த்தியையும் வழிபடவும்

கூடாத நாட்கள் : 1,2,5,6,7,28,29

### கும்பம்

**அவிட்டம் 3,4ம் பாதம்-சதயம்-பூரட்டாதி 1,2,3ம் பாதம்**

கல்வி முன்னேற்றம் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. 10 அம் திகதிக்குப் பின் வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். தூரப்பயணங்கள் செல்ல வேண்டியிருக்கும். திருமண முயற்சிகள் வெற்றியளிக்கும். 4 ஆம் திகதிக்குப்பின் பிள்ளைகளுக்கு கஷ்ட பலன். 10 ஆம் திகதிக்குப்பின் வீடு, நிலம், வாகனம் சேரும். குடும்ப மகிழ்ச்சி உண்டு. காய்ச்சல், சளி சம்பந்தப்பட்ட நோய்கள் வரலாம்.அம்மன் வழிபாடு நன்று.

கூடாத நாட்கள் : 3,4,5,8,9

### மீனம்

**பூரட்டாதி 4ம் பாதம்-உத்திரட்டாதி-ரேவதி**

கல்வியில் சிறப்பான முன்னேற்றம் உண்டு. தொழிலில் கஷ்டம், பின்னடைவு உண்டு. வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். 10 ஆம் திகதிக்கு பின் வீடு, நிலம், வாகனம், வாங்கலாம், விற்கலாம். 29 ஆம் திகதிக்குப்பின் வியா பாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். வெளிநாட்டுப்பயணம் தடைப்படும். பிரயாணத்தால் அதிக செலவுண்டாகும். திருமண முயற்சிகள் தடை, தாமதம் ஆகும். வாழ்க்கைத்துணைக்கு இடமாற்றம், பிரயாணம் உண்டு. வியாழ பகவானையும் தட்சிணா மூர்த்தியையும் வழிபடலாம். கூடாத நாட்கள் : 5, 6,7,10,11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக தமிழ் சஞ்சிகை






அன்புள்ள வாசகர்களே!

'தமிழ் உலகம்' பதினேழு நாடுகளிலுள்ள பல்லாயிரக்கணக்கான அன்பர்களின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. உங்கள் உள்ளங்கள் உவகையால் துள்ளுவதைக் காட்டும் பல கடிதங்கள் எமக்குக்கிடைத்துள்ளன. அடுத்தடுத்து வரவிருக்கும் இதழ்கள் மேலும் பல சுவையான அம்சங்களை தாங்கி வரவிருக்கின்றன. தொடர் ஆக்கங்களும் இடம்பெறவிருக்கின்றன. கலை, பண்பாடு, கலாசாரம், பொருளாதாரம், அரசியல் நிலை உள்ளிட்ட பல அம்சங்களை வழங்கி எழில் மிக்க சமுதாய மயமாக்கலை குறிக்கோளாகக் கொண்டு வெளிவரும் இச்சஞ்சிகையின் வளர்ச்சி உங்கள் கைகளில் உள்ளது. தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளிலெல்லாம் இதனைக் கிடைக்கச்செய்வதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளோம்.'தமிழ் உலகம்' உங்கள் வீடுகளை வந்தடைவதற்கு சந்தா அட்டையைப் பூர்த்தி செய்து அனுப்பி வையுங்கள். உங்களின் வரவேற்பு எம்மைப் பிரமிக்க வைக்கின்றது.

இலங்கைப் பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் ஏற்பாடுகள் தடல்புடலாக ஆரம்பித்திருக்கின்றன. நான்கு ஆண்டுகளுக்குள் நடைபெறும் மூன்றாவது பொதுத்தேர்தல் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஏப்ரல் மாத 'தமிழ் உலகம்' சஞ்சிகை தேர்தல் தொடர்பான சிறப்புப் பேட்டிகள், கட்டுரைகள் என்பவற்றை தாங்கி வெளிவரவிருக்கின்றது. இலங்கை வாசகர்கள் மட்டுமன்றி புலம் பெயர்ந்து வாழும் தமிழ் பேசும் மக்களும் தேர்தல் தொடர்பான தமது கருத்துக்களை மின்னஞ்சல் மூலமாகவோ, தொலைநகல் மூலமாகவோ கூட அனுப்பி வைக்கலாம். அவற்றின் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.



அண்மையில் பேர்லின் மக்களின் அழைப்பிற்கிணங்கி அந்நகருக்கு திரு.ரவிசங்கர் அவர்கள் ஆன்மீக ரீதியான விஜயமொன்றை மேற்கொண்டார். அவர் ஈழத்தமிழர்களின் அன்பான அழைப்பையேற்று ஸ்ரீ மயூரபதி முருகன் ஆலயத்திற்கு வருகை தந்த போது எடுக்கப்பட்ட படம் இது.

1977 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற பொதுத்தேர்தல்களிலெல்லாம் தமிழ் மக்கள் தமது ஏகோபித்த முடிபுகளை முழு உலகுக்கும் தெரிவித்துக்கொண்டு வந்துள்ளனர்.

இம்முறை தமிழர் தொடர்பான முடிபு களை தென்னிலங்கை முழுஉலகுக்கும் தெரிவிக்கவிருக்கின்றது.

-ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜோதிகா - சிம்பு
படம் - 'மன்மதன்'

*சிம்புவுக்கும் ஹீரோயின்களுக்கும் ஆகாது போல் இருக்கின்றது. 'மன்மதன்' போலவே 'குத்து' நாயகியுடனும் மல்லுக்கட்ட ஆரம்பித்து விட்டார்.

# திரைவல


வசீகரன்

தியா

*மா...
'ஆயுத எழுத்து', 'ப...
கவனம் செலுத்தி ...

## இதைக்கேளுங்க.....!

*ரஜினி நடித்த 'அண்ணாமலை' கதையை கன்னடத்தில் 'கோகர்ணா' என்ற பெயரில் எடுத்துள்ளனர். கதாநாயகன் உபேந்திரா, நாயகி ரக்ஷிதா, டைரக்ஷன் - நாகண்ணா. இப்படத்தினை உபேந்திராவின் சகோதரர் சுதீந்திரகுமார் தயாரித்துள்ளார்.

*திருமணத்துக்குப் பின்னர் தெலுங்கில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார் சிம்ரன். இதற்குக்காரணம் இப்போதும் அவரது கால்ஷீட்டுக்கு 60 லகரம் வரை அள்ளிக்கொடுக்க தயாரிப்பாளர்கள் தயாராக இருப்பது தானாம். இவ்வாறு சம்பளம் தருபவர்களுக்கு கால்ஷீட் கொடுக்க தயார் என்று தனது கணவர் மூலமாகவே அறிவிப்பு செய்து வருகின்றார்.

*சின்னத்திரை ஜோடி சேத்தன் - தேவதர்ஷினிக்கு பெண்குழந்தை பிறந்துள்ளது.நியத்தி என்று பெயரிட்டுள்ளனர்.

*ஷங்கரின் 'அந்நியன்' படத்தின் நாயகி ஐஸ்வர்யா ராய்.

*'அருள்'படத்திலும் சாயா சிங் மன்மதராசா பாடல் பாணியில் ஒரு பாடலுக்கு நடனம் ஆடியுள்ளார்.

*பாரதிராஜாவின் 'கண்களால் கைது செய்'படத்தின் நாயகன் வசீ...
மூவிமேக்கர்ஸின் அடுத்த படத்திலும் நடிக்க விருக்கின்றார்.

* 'குறும்பு'படத்தில் நடித்த தியா எங்கே என்று தேடுபவர்களுக்கு...
செய்தி அம்மணி நல்ல கதை கொண்ட(?) படங்களில் தான் நடி...
அடம்பிடித்து வருகின்றார்.'இயற்கை','ஈரநிலம்' படவாய்ப்புகளும் திய...
அவர் மறுத்ததால்தான் குட்டி ராதிகா, நந்திதா ஆகியோருக்குக்கிடை...

* 'ஜெயம்' ரவியின் புதிய படத்தில் அழகிய அம்மாவாக நதியா நடி...

* கமலின் அடுத்த படமான 'கிருஷ்ண லீலா'வில் கௌதமி முக்கிய பாத்திரத்தில் நடிக்கின்றார்.

*நடிகர் வினித் ஓகஸ்ட் மாதம் திருமணம்செய்து கொள்ளப் போகின்றார்.நிச்சயதார்த்தம் சமீபத்தில் நடைபெற்றது. இவரது கரம் பற்றும் பிரசிலா தலச்சேரியைச் சேர்ந்தவர்.


திரிஷா


'கஜேந்திரா' படபூஜையில்

## விஜயகாந்தின் 'கஜேந்திரா'

'என்னம்மா கண்ணு', 'லூட்டி', 'விவரமான ஆளு', 'பிதாமகன்' ஆகிய படங்களைத் தயாரித்த வீ.ஏ.துரை மிகப்பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம்-'கஜேந்திரா'. இப்படத்தின் தொடக்க விழா சமீபத்தில் மகாபலிபுரம் அருகே நடைபெற்றது. லயா, ரமேஷ்கண்ணா, சீதா,ராதாரவி, ஹேமா பாஸ்கர் ஆகியோரும் நடிக்கின்றனர். படத்திற்கு இசை - தேவா, ஒளிப்பதிவு - வி.பிரதாப்,வசனம் - லியாகத் அலிகான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவலம்




*மாதவன் 'எதிரி', 'ஆயுத எழுத்து', 'படங்களில் கவனம் செலுத்தி வருகின்றார்.

ப்'படத்தின் நாயகன் வசீகரன் லக்ஷ்மி
விருக்கின்றார்.

என்று தேடுபவர்களுக்கு ஒரு சொசுறு
படங்களில் தான் நடிப்பேன் என்று
ம்' படவாய்ப்புகளும் தியாவிடம் போய்
தா ஆகியோருக்குக்கிடைத்தனவாம்.

ய அம்மாவாக நதியா நடிக்கின்றார்.



த்ரிஷா

## திறமைக்கூட்டணி

'காதல் கொண்டேன்' நாயகி சோனியா அகர்வால் டைரக்டர் செல்வ ராகவனின் புதிய 2 படங்களிலும் நாயகியாக நடித்துக்கொண்டிருக்கின்றார்.

அவரின் ஆஸ்தான நாயகியாகி விட்டாரா என்று கேட்டு பத்திரிகையாளர்கள் டைரக்டரை ஒரு வழி பண்ணி விட்டனர்.

சாமர்த்தியமாகத் தப்பித்த டைரக்டர், "திறமையான கூட்டணி தொடர்ந்து ஜெயிக்கும் அந்த வகையில்தான் சோனியாவும் எனது படத்தில் தொடர்ந்து ஒப்பந்தமாவது" என்று கூறி பத்திரிகையாளர்களைத் திணறடித்து விட்டாராம். கூடவே,என்னை விடுங்க ஸார் அந்தப் பொண்ணு இன்னொரு வீட்டுக்கு மருமகளாகப்போய் வாழப்போற பொண்ணு. தேவையில்லாம எதையாவது பேசி ஒரு பெண்ணுடைய வாழ்க்கையில் விளையாடாதீங்க என்றும் கூறி அனுப்பி வைத்தாராம் செல்வராகவன்..



சோனியா அகர்வால்

## சாயாசிங் புகழாராம்

"மன்மதராசா" பாடல் புகழ் சாயாசிங்கின் பூர்வீகம் கன்னடாவாக இருந்த போதும் தமிழ்த் திரையுலகம் தான் தனக்குப் பிடித்தது என்று கூறுகின்றார். காரணம் கேட்டால், "தமிழ்த் திரையுலகம் திறமையானவர்களை இனங்கண்டு ஊக்குவிக்கின்றது.இங்கு திறமை தான முதலீடு" என்று கூறுகின்றார். ஆனால் இதைக்கேட்ட திரையுலக குறும்பர் ஒருவர், "படத்தில் அம்மணியின் திறமையை எங்கே காணமுடிகின்றது?" என்று அங்கலாய்ப்புடன் கேட்டது அம்மணிக்குத் தெரியவாய்ப்பில்லை.ஆனால் எது எப்படியோ சாயாசிங் கவிதை உட்பட பல புதிய படங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார்.



லைலா,சாயாசிங், அர்ஜுன் படம் - 'கவிதை'

## ராடன் தயாரிப்பில் 'ஜித்தன்'

இந்தித் திரையுலகின் புகழ்பெற்ற தயாரிப்பாளர் ராம்கோபால் வர்மாவை தமிழுக்கு அழைத்து வருகின்றார் ராதிகா சரத்குமார். பல சின்னத்திரை வெற்றித்தொடர்களைத் தயாரித்த ராதிகாவின் ராடன் மீடியா வேர்க்ஸ் நிறுவனத்தின் சார்பில் உருவாகவிருக்கும் இப்படத்தின் கதாநாயகன் சௌதரியின் மகன் ரமேஷ். இவருக்கு ஜோடி 'ஜேஜே'பட நாயகி பூஜா. ராம்கோபால் வர்மாவின் கதை ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தியில் படமாகின்றது. திரைக்கதையை ராதிகா சரத்குமார் எழுதுகின்றார். இசை-ஸ்ரீகாந்த் தேவா. காதலுக்காக ஜெகத்தினையே எரிப்பானாம் இந்த 'ஜித்தன்'.

*கடந்த ஆண்டின் வெற்றிப்பட நாயகி வரிசையில் நின்று கொண்டிருக்கும் திரிஷா மீண்டும் விக்ரமுடன் இணையவிருக்கின்றார்.

## ஃப்ரீக்கி ஃபிரைடே (ஆங்கிலம்)

காதலர் தினக்கொண்டாட்டத்திற்காக டிஸ்னி நிறுவனம் தயாரித்த படம் இது. ஒரு மஜிக் (மாய)பிஸ்கட்டை வைத்து படத்தின் கதையைக் கலகலப்பாக ஓட்டியிருக்கின்றார்கள். ரெஸ்ரூரண்ட் ஒன்றில் சாப்பிட்ட அம்மா மகளாகவும், மகள் அம்மாவாகவும் மாறிவிடுகின்றனர்.அதன்பின் நடக்கும் காதல், நகைச்சுவை குழப்பங்கள் தான் படத்தின் கதை. நாகரீகத்தில் திளைக்கும் மகள், அவளுக்கு நேரெதிரான குணம் கொண்ட அம்மா இருவரின் தோற்றங்களும் மாறினால் கேட்கவும் வேண்டுமா? படம் முழுவதும் கலகலப்பு, கலாட்டாதான்.



ஃப்ரீக்கி ஃபிரைடே படத்தில் ஒரு காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பார்ந்த வாசகர்களுக்கு!

இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'தமிழ்உலகம்' சஞ்சிகையின் 5 ஆவது இதழை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இவ்விதழ் உங்களுக்கு பல தரமான தகவல்களை தரும் என எதிர்பார்க்கின்றோம்.

உலகத்தமிழர்களை இணைக்கும் தொடர்வலையாக அமையும் இவ்விதழ் உங்கள் வாழ்நாளில் பலநாட்டு தொடர்புப் புதினங்களை இலகுவாக்கும் என்பதும் மகிழ்ச்சிக்குரியதே.

ஒவ்வொரு மாதமும் வெளியாகும் இவ்விதழ் உலகில் 17 நாடுகளுக்குச் சென்றடைய வழிவகை செய்துள்ளோம். உலகத்தமிழர் மத்தியில் சர்வதேச ரீதியில் வெளியாகும் ஒரே இதழ் என்ற பெருமையைப் பெறும் இவ்விதழ் தமிழர் பொருளாதாரத்தை மேன்மைப்படுத்தி, அரசியல், சலாசாரம், வரலாறு, தொடர்கதைகள், சிறுகதைகள், பிறந்த நாள் வாழத்து , அறிவிப்புகள்,திரையரங்கச் செய்திகள், மகளிர் பகுதி, நேர்முகம், மருத்துவம், காலமாற்றம், சிறுவர்பகுதி, உலகவிநோதங்கள், உட்பட பலதரப்பட்ட விளம்பரங்களுடன் வெளியாகின்றது. தமிழ்உகைம் அனைத்துலக சஞ்சிகை உங்கள் வீடுகளுக்கு வர வழி செய்யுங்கள்.

தமிழ் உலகம் தொடர்ந்து உங்கள் வாசல் வர பக்கம் 25 இல் உள்ள வருட சந்தா விபரங்களின்படி சந்தாப்படிவத்தைப் பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வைக்கவும்.

ஒரு வருடத்திற்கு அஞ்சல் கட்டணம் உட்பட 12 இதழ்களுக்கும் இங்கிலாந்திற்கான சந்தா 12£.

இச்சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே. உங்கள் சந்தாவை தாமதிக்காமல் அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

காசோலைகளை Global Investment Lanka Holdings Ltd. என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

**TAMILULAGAM**
**899 - 901 Finchley Road,**
**Golders green,**
**London NW11 7PE**
**The United kingdom**

மேலதிக தொடர்புகளுக்கு :-

தொலைபேசி : 0044 20 8455 9001
தொலைநகல் : 0044 20 8731 7870
E mail : tu@globallanka.co.uk

நன்றி, வணக்கம்

சு.கிருஷ்ணதாசன்
பொறுப்பாசிரியர்
லண்டன்

ஊடக உலகில் 'தமிழ் உலகம்' தொடர்ந்து முன்னோக்கிச்சென்று பல சாதனை விருதுகள் பெற எனது வாழ்த்துக்களையும் உள்ளன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தங்களின் தமிழ் உலகம் இலவச மாத இதழை தொடர்ந்தும் அனைவரும் எதிர்பார்க்கின்றோம். தாங்கள் எமக்காக செய்யும் இதே சேவையினை நாம் என்றும் மறவோம்.

சி.ஐ.இரகுபதி சர்மா, இந்து மதகுரு
தமிழ் அரசியல் கைதிகள் பிரிவு
களுத்துறை.

பேரின வாதிகளினது மனிதா பிமானமற்ற கெடுபிடிகளினால் அல்லலுற்று புலம் பெயர்ந்து, ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்து ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மவருக்கும் மற்றும் ஈழ மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழருக்கும் ஏற்புடையதாக நாட்டு நிலைமை, பொருளாதாரம், சோதிடம், தற்காலச்சினிமா, கணினித்துறை நிகழ்வுகள் ஆகியன எல்லாமே சிந்தனைக்கு விருந்தாகவும் சிந்திக்கத்தூண்டுபவையாகவும் மிளிர்கின்றன. தாரா எழுதிய கணினித்துறை ஆக்கம் பாராட்டுக்குரியது.'தமிழ் உலகம்' சஞ்சிகை மென்மேலும் வளர்ந்து தமிழ் சமுதாயத்தின் விடிவுக்காய் மிளிர என்நல்லாசிகள்

த. இராஜேந்திரன்,
கொழும்பு - 06.

'தமிழ் உலகம்' சஞ்சிகை ஆசிரியருக்கு, உங்கள் அணுகுமுறை நன்று! எனினும் சஞ்சிகையில் இன்னும் சில மாற்றங்களை செய்வதன் மூலம் அதன் தரத்தை உயர்த்தலாம். பழைய வழிபாடுகள், கடவுள்கள், அதில் ஐரோப்பிய, கிரேக்க, ஸ்பானிய மாற்றங்கள். தமிழர் மாறிய பின் ஆரியக் கோவில் சாமிகளை தமதாக எண்ணிக்கொண்டு மாறிவிட்ட வேறுபாடுகள் வரை யாவும் அலசப்பட வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

மா. செல்லத்தம்பி,(வளவை வளவன்)
ஆற்றல் மேம்பாட்டுக்கல்லூரி
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்உலகம்**
**இலண்டன்**
**அனைத்துலக தமிழ் சஞ்சிகை**
**வருட சந்தா**
**அனுப்பவேண்டிய முகவரி**

TAMILULAGAM
899-901 Finchley Road
Golders Green
London NW11 7PE
The United Kingdom

Tel: 0044 20 8455 9001
Fax: 0044 20 8731 7870

E.Mail: tu@globallanka.co.uk

**வருட சந்தா முற்பதிவு கட்டணங்கள்**
**(12 இதழ்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட)**

(Annual subscription including postage)

2004

**FOR 12 ISSUES**

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500 |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New zealand | :30NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |









# தமிழ்உலகம் London

## அனைத்துலக தமிழ் சஞ்சிகை.

மாத இதழ்

**INTERNATIONAL TAMIL MAGAZINE**
**Monthly Issue**

## வருட சந்தா முற்பதிவுப்பத்திரம்

**Annual subscription - Application form**

ஒரு வருடத்திற்கு
ONE YEAR.................£12.00.................☐

இரண்டு வருடத்திற்கு
TWO YEARS .................£24.00.................☐

மூன்று வருடத்திற்கு
THREE YEARS .............**£33.00**...............☐

Name : ______________________________

Address : ______________________________
______________________________
______________________________

Tel : ______________ Email : ______________

***Payment:*** Cash ☐ Cheque ☐ Postal Order ☐

Signature : ______________ Date : ______________

**சந்தாக்கட்டணம்:** காசோலைகளாகவோ அல்லது அஞ்சல் கட்டளைகளாகவோ அனுப்புவதாயின் **Global Investment Lanka Holdings Ltd** என்று குறிப்பிட்டு இலண்டன் முகவரிக்கோ அல்லது **Global Investment Lanka (Pvt) Ltd** என்று குறிப்பிட்டு இலங்கை முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.

உலகளாவிய தமிழ்உலகம் சஞ்சிகைக்கு வியாபார நிறுவனங்களோ அல்லது தனிப்படவோ பணஉதவி அன்பளிப்புகள் செய்ய விரும்பினால் தயவுடன் தமிழ்உலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

**Subscription payments** : cheques and postal orders made payable to :- **Global Investment Lanka Holdings Ltd London, OR Global Investment Lanka (Pvt) Ltd, Sri Lanka.**

**Tamilulagam would appreciate any donation from businesses or individuals. Please contact TAMILULAGAM Office.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவிய கோமாளிக்கு மந்திரிப்பதவி

அந்த அரண்மனை மந்திரிகள் அன்று மனப்புழுக்கத்துடன் காணப்பட்டனர். அவர்கள் எப்போதும் ராமன் என்ற அரசவைக் கோமாளியின் வேடிக்கைச் செயல்களால் ஏமாற்றப்பட்டுக் கொண்டேயிருந்தனர். இதுவே அவர்களின் மனப்புழுக்கத்திற்குக்காரணம். ராமன் அரசரின் மதிப்பைப் பெற்றுவிட்டதோடு விரைவில் அரசருக்கு மிகவும் விருப்பமுள்ளவனாகியும் விட்டான் என்பதில் அவர்களுக்குப் பொறாமை.

ஒரு நாள் மந்திரிகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து உபாயம் ஒன்றை வகுத்துக்கொண்டிருந்தனர். ராமனை விரைவில் அரசர் முன்னிலையில் தோற்கடித்து அவமானப்படுத்த வேண்டும். அத்துடன் தமது அறிவு பற்றி அரசருக்கு நிரூபிக்க வேண்டும் என அவர்கள் கர்வத்துடன் தீர்மானித்தனர். அந்த ராஜ்ஜியத்தில் தாங்களே பெரும் கல்விமான்கள் என்பதே அவர்களின் நினைப்பு. ராமனை அரசர் முன்னிலையில் மட்டந்தட்டி விட வேண்டும். ராமன் ஒரு முட்டாள் என அரசருக்குக்காட்ட வேண்டும். இவ்வாறு ஒரு ஆலோசனையை மந்திரி ஒருவர் முன் வைத்தார். இதற்கென மந்திரிகள் அனைவரும் ஒரு திட்டம் தீட்டினர்.

'அதாவது தாம் எல்லோரும் நாளை தமது பையினுள் ஒவ்வொரு முட்டையை மறைத்த வைத்துக்கொண்டு பூங்காவிலுள்ள தடாகத்திற்குச் செல்ல வேண்டும். பின்னர் ராமனை நோக்கி நீ கெட்டிக்காரன் என்றால் நீருக்குள் இறங்கி அங்கிருந்து ஒரு முட்டையை வெளியே கொண்டு வரவேண்டும் என சவால் விட்டு கூறவேண்டும்' - இப்படி மந்திரி கூறினார்.

இதுவே பொருத்தமான உபாயம் என அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.மறுநாள் காலை வழமை போன்று அரண்மனைப் பூங்காவில் அரசர் உலாவச் சென்றார். கூடவே இம்மந்திரிகளும் சென்றனர். ராமனையும் தம்முடன் வருமாறு அழைத்தனர். அதற்கு ராமனும் சம்மதித்தான். ரம்மியமான காலைப்பொழுது அவர்கள் அனைவரும் பூங்காவின் அழகை ரசித்தபடியே நடந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அரசர் தடாகத்தை நோக்கிச் சென்றார். இதற்கென காத்திருந்த மந்திரிகளும் தடாகத்தை சுற்றி நின்று கொண்டனர். திடீரென பிரதம மந்திரி, நாம் எல்லோரும் நீருக்குள் குதித்து பின்னர் அங்கிருந்து கையில் ஒரு முட்டையுடன் வெளி வரவேண்டும். இதனைச் செய்பவர்களே இனிமேல் புத்திசாலிகளாக அரண்மனையில் இருக்க முடியும் என உரத்த சத்தத்துடன் கூறினார். பின்னர் அவர், உடனே நீருக்குள் குதித்து சிறிது நேரம் நீருள் மறைந்து. பின்னர் தான் மறைத்து



வைத்திருந்த முட்டையை கையில் கொண்டு வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து ஏனைய மந்திரிகளும் அவ்விதமே செய்தனர். இதனால் ஆச்சரியமடைந்த அரசர் ராமனைப் பார்த்தார். நடந்தவற்றை ஊகித்துக்கொண்ட ராமன் தன்னை ஏமாற்ற மந்திரிகள் வீட்டிலிருந்தே முட்டையை எடுத்து வந்து மறைத்து வைத்திருந்தனர் என்பதை புரிந்து கொண்டான். மிக விரைவாக யோசித்தான். உடனே அவனும் நீருக்குள் குதித்தான்.சிறிது நேரத்தின் பின் நீருக்குள் இருந்து எழுந்த அவன் கரையில் வந்து நின்றபடியே தனது கைகளை இறக்கைகள் போல் விரித்து தட்டிக் கொண்டே "கொக்கரக்கோ" என அட்டகாசமாகக் கூவினான். அரசனும் மந்திரிகளும் ராமனையே பார்த்தபடி நின்றனர். அப்போது அவன், இந்த மந்திரிகள் மட்டத்தில் ஒரேயொரு சேவல் தானே உள்ளது. முட்டையிடுவதெல்லாம் பெட்டைக் கோழிகளின் வேலையல்லவா? என பெருமையாகக்கூறி மீண்டுமொரு முறை "கொக்கரக்கோ" என கூவிக்காட்டினான். மந்திரிகள் அனைவரும் வெட்கத்தினால் தலை குனிந்தனர். அரசர் ராமனுக்கு பெறுமதி மிக்க பரிசுப்பொருட்களை வழங்கியதோடு மதியூகம் மிக்க மந்திரி எனக் கூறி அவனையும் அமைச்சரவையில் ஒருவராகச் சேர்த்துக்கொண்டார். -தாரா

## 'கொகா கோலா' (Coca - Cola) பானத்தின் தோற்றம்

19ஆம் நூற்றாண்டில் ஆபிரிக்காவில் பிரதேச ஆராய்ச்சிகள் நடந்தன. அவ்வேளை பிரதேச ஆராய்ச்சியாளர்களின் பொருட்களை சுதேசிகள் காவிச்சென்றனர். அப்போது காடுகளிடையே நீண்ட தூரம் நடந்த களைப்புத் தெரியாமல் இருக்க அவர்கள் சில 'கோலா' விதைகளை சப்பி உண்டனர்.

இதனை அவதானித்த சிலர் அந்த விதைகளை ஆராய்ந்த போது 'கோலா' மரத்திலுள்ள விதைகளில் உற்சாகம் தரும் 'காபீன்'(Caffina) என்ற பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. அதன்பின் கோலா மர விதைகளுக்கு பெரும் வரவேற்பு ஏற்பட்டது. அதிலிருந்து 'கொகா கோலா'(Coc - Cola) பானம் தோன்றியது.

## தமிழ் உலகம் மழலைகள் மன்றம்

தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்துவர்களாக சேர்வதன் மூலம் சிறார்கள் பல நன்மைகளை அனுபவிக்கலாம். அங்கத்தவர்களாக இருக்கும் சிறார்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்கள் மட்டுமே இந்தப்பக்கத்தில் பிரசுரிக்கப்படும். அது மட்டும்ல்லாது அடிக்கடி அங்கத்தவ சிறுவர்களுக்கிடையில் பலவிதமான போட்டிகளை நடாத்துவதன் மூலம் பரிசுகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

உலகத்தில் தமிழர் வசிக்கும் பல நாடுகளுக்கு இந்தச்சஞ்சிகை செல்ல விருப்பதனால் வெவ்வேறு நாடுகளிலிருக்கும் சிறார்கள் இந்த சஞ்சிகையின் மூலம் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம். அது மட்டுமன்றி சிறார்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் பற்றி அறிந்து கொள்ளலாம். எனவே விரையுங்கள் செல்வங்களே! தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்துவர்களாகச்சேர நீங்கள் செய்யவேண்டியது இதுதான் . உங்கள் பெயர்,முழுமையான விலாசம், தொலைபேசி இலக்கம் மற்றும் உங்கள் பொழுது போக்குகள் எல்லாவற்றையும் எழுதி அண்மையில் எடுத்த உங்கள் புகைப்படத்துடன் அனுப்பி வையுங்கள் உலகிலுள்ள சிறுவர்கள் எல்லோரையும் உணர்வு ரீதியாக ஒன்றிணைக்கும் திட்டம் தமிழ்உலகம் மழலைகள் மன்றம்.

முழுப்பெயர்.......................................

வயது :.......................................

முகவரி:.......................................

.......................................

தொலைபேசி:.......................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை முயல்



துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா


பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா

பளிங்குக் கண்ணைக் கூர்ந்து நானும்
பார்க்க அசை அம்மா - அது
ஒளிந்த கொள்ளப் புதரை நோக்கி
ஓடப் பார்க்குதம்மா

புல்லைத் தினமும் பிடுங்கிப் பிடுங்கிப்
போடுவேனே அம்மா - அது
மெல்ல மெல்லக் கடித்துக் கடித்து
உள்ளே தள்ளும் அம்மா

-குழந்தைக்கவிஞர்
அழ.வள்ளியப்பா.

**சரியான வழியில் சென்றால் பழம் கிடைக்கும்**




# உறுப்பு மாற்று சத்திர சிகிச்சை

**23.12.1954** இல் பொஸ்டன் நகரிலுள்ள ஒரு வைத்தியசாலையில் முதன் முறையாக உடலுறுப்பு ஒன்று மாற்றிப் பொருத்தப்பட்டது.

ரிச்சார்ட் ஹெரிக் என்பவர் சிறு நீரக நோய் ஒன்றினால் தாக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் இருந்தபோது அவருக்கு இன்னொருவரின் சிறுநீரகம் பொருத்தப்பட்டதால் அவர் உயிர் தப்பினார்.

அதற்குப்பின்னர் இவ்வாறான சத்திர சிகிச்சைகள் சர்வ சாதாரணமாகி விட்டன. முதன் முறையாக மனித இதயத்தை பெயர்த்துப் பொருத்தி பெருஞ்சாதனையை ஈட்டிய பெருமை தென்ஆபிரிக்காவைச்சேர்ந்த கிறிஸ்டியன் பேர் நாட் என்ற மருத்துவரையே சாரும்.

## சந்தோஷமான தகவல்

தமிழ் உலகம் சஞ்சிகை உலக நாடுகள் பலவற்றுக்குக் கிடைக்கக்கூடியதாக வழிசெய்துள்ளோம் தமிழ்உலகம் சிறுவர் மன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ்மொழியில் எழுத முடியாத சிறார்கள் ஆங்கிலம்,டொட்ச்,நொஷ்க்,பிரெஞ் இன்னும் பல மொழிகளில் கூட உங்களுடைய ஆக்கங்களை எழுதி;அந்த ஆக்கத்தின் தமிழ்மொழிஆக்கத்தையும் இணைத்து அனுப்பி வைத்தால் அவை எங்களுடைய மாதமலரில் தொடர்ந்து வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே தமிழ்மொழியை எழுதத் தெரியாத சிறுவர்கள் கூட தமிழ்உலகம் சஞ்சிகையின் சிறுவர்மன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதுடன் உங்களுடைய எண்ணங்களையும் மற்றைய சிறார்களுடன் எழுத்து மூலம் பகிர்ந்து கொள்ளலாம்.

# கொன்றை வேந்தன்

6) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

(ஊராருடன் இணைந்து வாழாது பகைத்துக் கொள்வான் ஆயின் அவன் அடியோடு கெட்டழிவான்)

7) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

(கணிதமும், இலக்கணமும் மாந்தர்க்கு இரண்டு கண்கள் என்று சொல்லத்தகும்)

8) ஏவா மக்கள் மூவா மருந்து

(பெற்றோர்கள் கட்டளை இட்ட பின்னர் செய்யாது தாமாகவே குறிப் பறிந்து முன்னதாகச் செய்யக்கூடிய மக்கள் அப்பெற்றோருக்கு என்றும் முதுமையைத் தராத அமிழ்தமாவர்)

9) ஐயம் புகினும் செய்வன செய்

(பிச்சை எடுத்தாலும் செய்ய வேண்டிய நல்ல செயல்களை விடாது செய்)

10) ஒருவனைப் பற்றி ஓர் அகத்து இரு

( நல்ல குணமுள்ள ஒருவனைத்துணையாகப் பற்றிக்கொண்டு ஒரு வீட்டிலேயே நிலையாக வாழ்ந்திரு)

தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிவலம்

# காண்டாவன மழை


இன்று தான் சித்திரை 15
நேற்றுத்தான் காண்டாவனம்
ஆரம்பம்.
அதற்குள் எப்படி
மின்னல்
இடி
மழை எல்லாம்!
ஆம்
கண்ணைக் காச்சும் மின்னலது
காதை செவிடுபட வைக்கும்
தொடர் இடி அது.
மழையில் மட்டும் சிறு வித்தியாசம்.
மார்கழி மழையில்
மழைத்துளி நீராகத்தான்
நிலம் நோக்கும்.
இந்தத்துளி விழுந்து
மண்ணைத் தோண்டி
நீரை உண்டாக்கும்.
இதற்கு
தோண்ட மட்டுமல்ல
வெட்டவும்
கீறவும்
தகர்த்தெறியவும்
தெரியும்
மண்ணை மட்டுமல்ல
மனிதர்களையும் தான்.
மார்கழி மழை வரும் சத்தத்தின்
இனிமை இதற்கில்லை.
இது விசிலடித்துக்கொண்டுதான்
வரும்
சிவப்பு நீர்த்துளிகளை
சிந்துவதற்கென்றே
இறைவனால் மனி
தர்களுக்கு
ஆசீர்வதிக்கப்பட்ட
மழை இது.

மார்கழி மழைக்கு
குளிரால்
உடல்தான் நடுங்கும்
இதற்கு உள்ளம்
உயிர்
இரண்டுமே
பயத்தால் நடுங்கும்
மழைக்கு வீட்டுக்குள்
போர்வைக்குள் தான்
ஒளித்தோம்.
இதற்கு நிலக்குழிகளுக்குள்ளும்
ஊர்களுக்கு அப்பாலும்
ஒளிக்கின்றோம்
நிலக்குழிகளுக்குள்ளேயும்
சில வேளை
காண்டாவன கால மழையின்
பிரவேசம் நிகழும்
அதன் பிரசவத்தைக்கூற முடியாமல்
மொழி கூட ஒளித்து விடுகின்றது.
மார்கழித்திங்கள் மழை கூட
ஓய்வெடுத்துத்தான் பெய்யும்.
இது ஓய்வெடுக்காது
ஓட ஓட
துரத்தித்துரத்திக்கூடப்பெய்யும்.
இது வானுயர வளர்ந்த
வளம் தரும் தென்னை, பனைகளை
தொட்டுத்தடவி வரும்/விழும்
மழைத்துளி அல்ல.
வட்டோடும்
அடியோடும்
வெட்டி வீழ்த்தும் மழை.
உயிரைக்குளிரோடு
தடவிச்செல்லாது.
உடலை விட்டு உயிரைப்
பிரித்துச் செல்லும்.
மழை சற்று ஓய்கின்றது
பாருங்கள்!
பாய்ந்து ஓடும் நீர்,
பறவைகளின் குளிப்பு,
தவளைகளின் சத்தம்,
நத்துக்களின் நளின பாஷை
எதுவும் இல்லை.
மனித அவலங்களும்,
மரணப்படுக்கைகளும்,
மணற்சரிவுகளும்,
மண்மேடான வீடுகளும்,
மறைந்து போன ஊர்களும்,
மாண்டுபோன
மனிதர்களும் தான்
அதன் அறுவடை.
காண்டாவன வெப்பம் கூட
கருணை உள்ளது
காண்டாவன மழை
கொடிது.
விழுந்து,
மனிதனை
மாளச்செய்து,
குழியும் தோண்டி
புதைக்கும்
மழைத்துளி எமக்கு வேண்டாம்.
மனிதத்தின்
மாண்பை உயரச்செய்யும்
மழைத்துளியின் வரவில் நனைந்து
மானுடத்தை
அறுவடை செய்யக்
காத்திருக்கின்றோம்
காண்டாவன மழையில்
நனைந்தபடியே.

அ.த.அன்பாளன்
நிறைவாண்டு
தமிழ்த்துறை மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி இல. 5



பெயர்:.....................................................

முகவரி:...................................................

..............................................................

ஒரு வருட தமிழ்உலகம் இலவச பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப்பெறுங்கள்.



### இடமிருந்து வலம்

1) இனம், மதம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டை தனித்தனியாகப் பிரிக்கும் போக்கு (7)
4) அமைதி நிலையை இப்படியும் சொல்லலாம் (3)
6) அறிவுடையவனை இப்படியும் அழைப்பர் (5) (குழம்பியுள்ளது)
7) தலைவனின் பிரிவால் பெண்ணின் உடலில் தோன்றும் பொன்நிறத் தேமல் (3)
8) எண்களைப் பத்தின் மடங்குகளாக கணக்கிடும்முறை (3)
11) இதன் வாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியாது என்பது பழமொழி (2)
15) நதி உற்பத்தியாகும் இடத்தை இப்படிக்கூறுவர் (5)
16) மோதிரம் (4)
18) ஒரு செயலை எப்படியாவது நிறைவேற்றி விடவேண்டும் என்கின்ற முறையில் மேற்கொள்ளும் கடும் முயற்சி (7) (குழம்பியுள்ளது)
21) போட்டிக்கு வருமாறு விடுக்கப்படும் துணிவுமிகுந்த அழைப்பு (3)
22) சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி மாறுபவனை இப்படிக்கூறுவர்.(5) (குழம்பியுள்ளது)
23) கால் நடைகளின் உணவு (3) (குழம்பியுள்ளது)
25) வன்முறைக்கு உள்ளாகும்படி செய்யும் முரட்டுத்தனமான நடவடிக்கை (6)
26) பழமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றி ஓர் இடத்தில் காலம் காலமாக வாழும் சமூகம் (5) (குழம்பியுள்ளது)

### வலமிருந்து இடம்

5) முற்காலத்தில் கடும் குற்றம் புரிந்த ஒருவரின் உயிரைப்போக்க பயன்படுத்திய கூர்மையான முனையையுடைய மரக்கம்பம் (5) (குழம்பியுள்ளது)
9) கண்களில் தீட்டிக்கொள்ளும் மையை இப்படியும் சொல்லலாம் (5) (குழம்பியுள்ளது)
10) காலம் காலமாக இருந்து வரும் கருத்து (4)
13) இறந்து போனவரைக்குறித்து பாட்டு வடிவில் அழுது புலம்புவதை இப்படிக்கூறுவர் (4)
17) இலக்கியத்தின் உட்பிரிவை இப்படிக்கூறுவர் (2)
20) போரில் பெருவெற்றி அடைந்த அரசனை தலைவனாகக்கொண்டு பாடப்படும் ஒரு சிற்றிலக்கிய வகை (3)
24) நாசம் செய்வதைக்குறிக்கும் (5)
27) பாரம் (2)
29) உடையால்,பேச்சால் அங்க அசைவுகளால் மற்றவர்களைச் சிரிக்க வைப்பவன் (3)

### மேலிருந்து கீழ்

1) தான் பிறந்த நாட்டில் ஒருவருக்கு இயற்கையாகவே உள்ள உரிமை (6) (குழம்பியுள்ளது)
2) பா வகைகளில் ஒன்று (5)
3) பல வகையான பூக்களையும், இலைகளையும் ஒன்றாகச் சேர்த்து தொடுக்கப்பட்ட சரம் (5) (குழம்பியுள்ளது)
4) மனதை வசீகரிக்கும் ரம்யமான தன்மை(5)
9) இது ஓய்வதில்லை (2)
12) திரவ நிலையில் இருக்கும் உலோகம் (5)
13) உலர வைத்த பனங்கிழங்கு(4)
16) நுண்ணிய முக அசைவுகளையுடைய ஒரு நடன வகை (4)
17) மறு அரசை தேர்ந்தெடுக்கும் வரை உள்ள காலத்தில் நாட்டை நிர்வகிக்கும் அரசை இப்படி அழைப்பர் (4)
19) அழகி (2)
23) ஒளி தருவது (3)

### கீழிருந்து மேல்

14) மும்மலங்களில் ஒன்று (4)(குழம்பியுள்ளது)
28) மங்கலப்பொருள் (4) (குழம்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப்போட்டி - இல : 3 இற்கான விடைகள்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | வி | 2 தை | | னி | 3 க | | த | ன் | 4 கோ | ர | 5 ச |
| ண் | | ரி | 6 தி | | 7 ச | கா | தே | வ | ன் | | ன |
| ணை | | 8 ய | து | ர் | | 9 து | | | | ஷி | 10 கு |
| 11 கி | ரா | ம் | | 12 நீ | | | னி | சி | கா 13 | | ம் |
| சி | | | 14 தீ | | தி | ந் | ன | ரு | ர் | 15 வி | |
| லை | வ | க 16 | | 17 த | ம் | பு | ரா | | | ல் | க 18 |
| | | ந் | | | ர | | | 19 வா | | | |
| பு 20 | ம் | 21 க | | தி | ந் | 22 ப | | | லை | தி | மீ 23 |
| ன் | | ண் | | | 24 த | ந் | தி 25 | | த | | கு |
| ன | | டு | | | | | வ | | கு | க் | 26 தி |
| கை | 27 தி | | 28 அ | ல் | லி | | ச | | ந் | | |
| | வி | ல் | 29 லி | | 30 வ | ம் | ம் | ப | ச 31 | | |

போட்டி இலக்கம் - 3 இற்கான சரியான விடையை அனுப்பி ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளையும்,10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப் பெறும் அதிஷ்டசாலி:

திருமதி சி.ஞானேஸ்வரி,
**Silberstem str 137 A, 12051 Berlin,Germany**

## குறிப்பு

குறுக்கெழுத்துப்போட்டியில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையும், ஆர்வமும் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு பரிசுத்திட்டத்தை விரிவாக்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சரியான விடையை எழுதி அனுப்புவோரில் அதிஷ்டசாலி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் 10 ஸ்ரேலிங் பவுண்களும் பரிசாக வழங்கப்படும்.

குறுக்கெழுத்துப்போட்டி இல - 05 இலிருந்து சரியான விடைகளை எழுதி அனுப்புவோரில் இரண்டாவது அதிஷ்டசாலிக்கு ஒரு வருடத்துக்கான தமிழ் உலகம் இலவசபிரதிகளும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு ஆறு மாதங்களுக்கான தமிழ்உலகம் இலவசபிரதிகளும் பரிசாக வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட குறுக்கெழுத்துப்போட்டிக்கான அட்டவணையுடன் உங்கள் விபரங்களையும் கீழ உள்ள முகவரிக்கு 31/03/2004 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.. பரிசு பெறுபவரின் விபரங்கள் மே மாத இதழில் பிரசுரிக்கப்படும்.

அனைத்து நாட்டுத்தொடர்புகளுக்கு:

**Tamilulagam**
**899-901 Finchley Road,**
**London NW11 7PE,UK**
**Tele : 0044 20 8455 9001**
**Fax : 004 20 8731 7870**
**E mail : tu@globallanka.co.uk**

இலங்கைத்தொடர்புகளுக்கு:

**Tamilulagam**
**Meewella Building,7th Floor,**
**329,Galle Road, Colombo-04**
**Tele : 0094 112 59 1000**
**Fax : 0094 112 59 1003**
**E mail : globallanka@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைவுகள்

- ச.முருகானந்தன்

அந்தச்சோதனைச்சாவடியைத்தாண்டி அரை கிலோ மீற்றர் சென்றால் தான் அவளது வீடு. தினமும் பாடசாலைக்கும், தனியார் கல்வி நிலையத்திற்கும் இதைத்தாண்டித்தான்போய் வரவேண்டும்.

கீதாவுக்கு அந்தச்சாவடிக்கு கிட்ட வரும்போதே கால்கள் பின்னும். அதைத் தாண்டுவதில் ஏற்படப் போகின்ற சிரமம், நரகவேதனை என்ப வற்றை வார்த்தைகளில் அடக்க முடியாது.

சோதனைச்சாவடியில் நிற்கும் அரும்பு மீசைச்சிப்பாய்கள் மாத்திர மென்றில்லை, நடுத்தர வயதுச்சிப்பாய்கள் கூட சுத்த மோசம். அடிக்கடி மனிதத்தன்மை இவர் களிடமிருந்து விலகிப்போய் விடும். அப்படி யான நேரங்களில் அவர்கள் மனதில் ஒளிந் திருக்கும் காட்டுமிராண்டித்தனங்கள் சன்னதம் கொள்ளும்.

பொம்பிளை என்றால் போதும் பத்து வயதுப்பாலகர்கள் முதல் பாட்டிகள் வரை சல்லடை போட்டு உடற் சோதனை செய்வார்கள். கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள் என்று கூட வேறுபடுத்திப்பார்க்க மாட்டார்கள். தலைமுதல் கால்வரை அணுஅணுவாகச்சோதிப்பார்கள். சோதனை என்ற பெயரில் இவர்கள் செய்யும் சில்மிசங்கள் நாக்கைப்பிடுங்கிக் கொண்டு சாகலாம் என்று எண்ண வைக்கும் இவர்களது சொறிச்சேட்டைகளுக்குப்பயந்து தான் கீதா வெறுப் படைந்தாள்.

இந்தச்சிப்பாய்களின் சொறிச் சேட்டைகளை அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை. பெண்களைப் பெண்கள் தான் சோதிக்க வேண்டும் என்கின்ற நடைமுறை பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இப்படி யான நாட்களில் பெண்கள் பாடு திண் டாட்டம் தான். கூடவே அரைகுறைத தமிழில் இரட்டை அர்த்தத்துடன் அவர் கள் கதைக்கும்போது அருவருப்பாக இருக்கும்.

அன்றும் சாவடியில் பெண் சிப் பாய்கள் இருக்கவில்லை. ஒரு அரும்பு மீசை இளசுதான் சோதனை நடத்திக் கொண்டிருக்கின்றது. திரும்பிப் போகலாமா என்று கீதாவுக்குத் தோன்றியது. எனினும் படிப்பில் அவளுக்கிருந்த ஆர்வம் அவ்எண்ணத்தை மாற்றியது.கீதா மெல்ல நகர்கின்றாள். அவளது முறை வந்தபோது அவன் விரசமாகச்சிரித்தபடி "நங்கி ஹரி லஸ்ஸனாய்..."(தங்கச்சி நீங்க நல்ல வடிவு). என்கின்றான். அவனது கரங்கள் தலையிலிருந்து கால் வரை தேடுகின் றன."வேற குண்டு இல்லைத்தானே நங்கி" தங்கை என்று அழைத்தபடி இவனால் எப்படி கீழ்த்தரமாக நடக்க முடிகின்றது.? கீதா மனதில் சாடினாள். அவர்களது சமூகத்தில் காதலர்கள் கூட ஐயே, நங்கி என்று தான் பேசிக் கொள் வார்களாம் என்று சித்தப்பா சொன்னது அவளது ஞாபகத்திற்கு வந்தது.

கீதா ஒருவாறு பொயின்ரைத் தாண் டியபின்னர்தான் அவளுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. அவள் வீட்டிற்கு விரைந்தாள். பரீட்சை நெருங்கி விட்டது. படிக்கவேண்டும். சாதாரண தரப்பரீட்சை யில் அவள் சாதனை புரிந்தவள்தான். இப்போது வருவது உயர் தரப்பரீட்சை. இப்போட்டிப் பரீட்சையில் பல தடை களை அவள் தாண்ட வேண்டும். தரப் படுத்தலினால் தரைப்படுத்தப்பட்ட பல கெட்டிக்காரரை அவளுக் குத் தெரியும்.

இரவில் படிப்பது சிரமம். மின்னொ ளியில் வாழ்ந்தவர்களுக்கு மண்ணெண் ணெயும் மறுக்கப்பட்டு விட்டதால் மங்கிய குப்பி விளக்கொளியில் தான் படிக்க வேண்டும். உயிருக்குப்போராடி மூச்சு இழுத்துக் கொண்டிருக்கும் நோயாளி போல் உயிர்மூச்சு இழுத்துக் கொண்டு எரியும் இந்த சிக்கன விளக் கில்தான் சுற்றவர அமர்ந்திருந்து அவ ளும், அவளது தம்பி, தங்கையரும் படிக்க வேண்டும்.

ஒரு ஜாம் வெற்றுப்போத்தலில் குறுக் காக ஒரு தகடு போட்டு இரு கம்பிகளில் தொங்க விட்டு ஒரு சிறு துவாரத்தினூடே மெல்லிய திரியைச் செலுத்தி போத் தலின் அடியில் தேங்காய் எண்ணெயை விட்டு ஏற்றி வைத்த சிறு விளக்கு. வாழ்க்கையை மட்டுமா இந்த யுத்தம் இருளாக்கியுள்ளது. இருட்டிலேயே வாழ வைத்து விட்டதல்லவா?

ஓ... இந்த யுத்த காலத்தில் தான் எத்தனை கண்டு பிடிப்புகள். மண்ணெண் ணெயில் ஓடும் மோட்டார்சைக்கிள்கள். அதை ஸ்ராட் செய்வதற்கு சிங்கர் ஒயில் சூப்பிப்போத்தலில் ரின்னர்! கீதா மட் டுமல்ல இங்கு எல்லோருமே பயத்து டனும் சலிப்புடனும் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியே போனால் எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது என்ற திகைப்புத்தான் அனைவர் மனதையும் ஆக்கிரமித் திருக்கின்றது. இத்தனைக்கும் மத்தி யிலும், எதிர்காலத்தில் சுபீட்சமான ஒரு நல்வாழ்வை எமது அமைப்பு ஏற்படுத்தித்தான் தரப்போகின்றது என்ற நம்பிக்கையின் ஒளிக்கீற்றும் இல்லாமலில்லை.

எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு தானும் போராடப்போகலாமா என்று கீதா யோசிப்பாள். எனினும் அப்பா சொல்லும் வார்த்தைகள் அவளைக்கட்டிப்போடும். "பிள்ளை படிக்கிற வயசில படிக்க வேணும். படிச்சு முடிஞ்சவுடன் நீ விரும்பினால் நானே உன்னைக்கூட்டிக்கொண்டு போய் ஒப்படைப்பன். ... கவலைப் படாமல் படி"

அத்துடன் வீட்டின் வறுமை நிலையும் நோய்வாய்ப்பட்ட அம்மா வும் அவளது சுடர் விட்டெரியும் எண்ணத்தை அணைக்கும் கார ணிகளாக அமைந்தன.

சிறுவயதில் இருந்தே கீதா படிப்பில் சுட்டி. இரண்டாவதாக வந் தால் கூடத்தாங்க மாட்டாள். இசை, விளையாட்டு ஆங்கிலம் எதிலுமே அவள் சோடை போகவில்லை. அவள் வாங்கிக் குவித்த பரிசுகள் ஏராளம். 'சத்ஜெய' இராணுவ நட வடிக்கை விரட்டிய போது எல்லா வற்றையும் விட்டு விட்டு வரவேண்டிய தாயிற்று. வடமராட்சிக்கு வந்த பின்னர் அவர்களது வாழ்வு நிலை யில் பெருமாற்றம்.

வலிகாமத்தில் வீடு, கிணறு தோட்டம், துரவு என்று வாழ்ந்த வாழ்க்கைக்கு எதிராய் இப்போதைய வாழ்க்கை அமைந்து விட்டது. மாணிக்க வாத்தியார் கை கொடுத் ததில் அவரது காணியில் ஒரு குடிசை அமைத்து ஏதோ வாழ்க் கையைக் கொண்டுபோக முடி கின்றது. எவ்வளவு தான் கஷ்டமிருந் தாலும் வடமராட்சிக்கல்விப் பாரம்பரியம் கீதாவுக்குப்பிடித்திருக் கின்றது. இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் கல்வியில் அவர்கள் காட்டுகின்ற அக்கறை அவளுக்கும் உந்து சக்தியாக இருந்து வருகின் றது.

அப்பாவின் ஊக்க மாத்திரையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது சோர்வு பறக்கும் " பிள்ளை ... நானும் படிக்கவில்லை. அம்மாவும் கனக்கப் படிக்கவில்லை. அதால தான் இண்டைக்கு முன்னுக்கு வர முடியவில்லை. நீ நல்லாகப்படிக்க வேண்டும். உன்னைப்பார்த்து சின் னவையும் படிக்கவேண்டும். மற்றப் பெற்றார் மாதிரி டொக்டராக வா.. இஞ்சினியராக வா.... அப்புக்காத்தாக வா... என்று நான் சொல்லயில்லை. ஆனால் படிச்சு முன்னுக்கு வர வேணும். நாலு பேருக்கு முன்னால படிச்ச மனிசர் என்று பெயரெ டுக்கவேணும்..."

பாடசாலையில் பிரசாரம் செய்ய வரும் அக்காமாரும், அண்ணாமாரும் அவளை வரும்படி கேட்கும் போதெல்லாம் " நான் வருவன். படிப்பு முடிச்சிட்டுத்தான் வருவன்.." என்பாள்.

" நீர் படிச்சு முடிச்சிட்டு வாறதுக் கிடையில் நாடு பறிபோயிடும். அவங் கள் எல்லாத்தையும் அழிச்சு முடிச்சுப் போடுவாங்கள்"

கீதாவும் விடமாட்டாள்."பிடிச்சால் திருப்பி அடிச்சுப்பறிப்பம்." என்று கூறுவாள்.

" நல்லாக்கதைக்கப்பழகிட்டீர்"

" நாலு சொல்லுப்படிச்சதாலதான் கதைக்க முடியுது"

" நாங்க படிக்கத்தெரியாமலே வெளிக்கிட்டு வந்தனாங்கள்? நாடு பறிபோகுதாம். கண்டறியாத படிப்பு....."

அவர்கள் என்ன சொன்னாலும் கீதா மசிய மாட்டாள். ஒரே பதில்," நான் படிச்சு முடிச்சிட்டு வாறன்"

"நீர் படிச்சு முடிச்சிட்டு வாறதுக் கிடையில் உம்மையே முடிச்சுப் போடுவங்கள்"

அவளோடு படித்துக்கொண்டி ருந்தவர்களில் எத்தனையோ பேர் கடிதம் எழுதி வைத்து விட்டுப்போய் விட்டார்கள். அவளோடு போட்டி போட்டு படித்த ஜெகனும் போன கிழமை போய் விட்டான். அவளது மனதிலும் போராட்டம்.

படிப்பா? போராட்டமா? விடை காண முடியாத தவிப்பில் படிக்க முடி யாமல் குழம்பினாள். சில நாட்களில் பசி கூட எடுப்பதில்லை. " என்ன பிள்ளை யோசனை? போற யோசனை யென்றால் சொல்லு.. பிறகு நான் உயி ரோட இருப்பன் என்று மட்டும் நினை யாதை.." அம்மா பயமுறுத்தினாள்.

இராணுவ கெடுபிடிகளும் அதிகரித்தன. சோதனைச்சாவடியில் பிடி பட்ட சீதாவின் சித்தப்பா காணாமல் போனார். எந்த முகாமிலும் சிறைச்சாலை யிலும் இல்லை என்று பதில் வந்தது.

கீதா கலங்கத் தொடங்கினாள். மனம் நிறையச்சிரிக் கின்ற அவளது சிரிப்பு மறையத் தொடங்கியது. கண் களிலே இனம் தெரி யாத சோகமும் கலக்கமும் குடி கொண்டது.



அடிக்கடி தலைக்கு மேலால் புக்கா ராக்களும் ஹெலி களும் பறந்து கிலி கொள்ள வைத்தன. அடிக்கடி குண் டுகள் விழுந்து பெருஞ்சத்தத்துடன் வெடித்து மிரள வைத்தன. அது தொலைவிலே விழுந் தாலும் யார் யாரையோ சிதற வைத்தது. வீடுகள் சிதைவடைந்தன.

பாடசாலையும் ஒழுங்காக நடப்ப தில்லை. பரீட்சை வருவதால் உயர்தர வகுப்பு ஒன்றுதான் ஒழுங்காக இயங்கிக் கொண்டிருந்தது. பாதிப்பேர் கூட வரு வதில்லை. சிலர் ஆயுதமேந்தப் போய் விட்டார்கள். இன்னும் சிலர் வீடுகளில் பயத்தில்முடங்கிப் போயி ருந்தனர்.

கீதா மட்டும் ஒழுங்காகப் பாட சாலைக்கு வந்து போய்க் கொண்டிருந் தாள். ஆர்வமாகப்படிப்பித்த ஆசிரியர்கள் கூட சலித்துப்போயிருந்தனர். சிலர் ஒழுங்காக வருவதில்லை.

கீதா முழுமூச்சுடன் படித்தாள். பரீட் சையும் வந்தது. அவளது இலட்சியக் கனவை நிறைவேற்றப்போகும் பரீட்சை அல்லவா? அவள் மருத்துவத்துறையை நோக்கி உயிரியல் பாடங்களில் தோற்றி னாள். ஒவ்வொரு பாடம் முடிந்ததும் அவள் பூரித்தாள். எதிர்பார்த்த மாதிரியே நன்றாகச்செய்திருந்தாள். எல்லாப்பாடமும் 'ஏ' வரும் என்று தோன்றியது.

அவளது நம்பிக்கையான பதிலில் அப்பா நிறைவு கொண்டார். பரீட்சை முடிந்ததும் மீண்டும் அழைப்புக்கள். அவள் நிராகரித் தாள்.

"பரீட்சை முடிவு வரட்டும் பார்ப்பம்" என்றாள். நாட்கள் நகர்ந்தன.

மறு நாள் பரீட்சை முடிவுகள் வெளி வருகின்றன என அறிந்த கீதா மகிழ்வோடு காத்திருந் தாள். விடிந்ததும் சைக்கிளை எடுத்துக் கொண்டு பாடசாலைக்கு விரைந்தாள். வழியில் சென்றி. ஆயு தங்களைச் சுமந்து கொண்டு வீதி யில் பச்சைத் தொப்பிகள் என்றைக் குமில்லாதவாறு குதூகலமாக இருந்தனர்.

கீதா பயந்ததுபோல் எதுவும் நிகழவில்லை. சிரமம் எதுவுமின்றி செக் பொயின்ரைத்தாண்ட முடிந் தது. அவள் பாடசாலையை நோக்கி விரைந்தாள். சைக்கிள் மோட்டார் சைக்கிள் போல் ஓடியது.

பாடசாலையில் நுழையும்போதே பாராட்டுதல்கள் 'எல்லாம் ஏ' அவள் வானத்தில் மிதந்தாள். நான் இனி ஒரு டொக்டர் என்ற இனிய சேதியை வீட்டில் கூற விரைந்தாள்.

சோதனைச்சாவடியில் அரும்பு மீசை 'ஐ சீ' கேட்டது. அடையாள அட்டையை அவசரத்தில் விட்டு விட்டு வந்தது கீதாவுக்கு நினைவு வந்தது.

அவன் அவளை முகாமுக்கு அழைத்துச்சென்றான். இன்று வரை அவள் திரும்பவேயில்லை.

(யாவும் கற்பனை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விநோதங்கள்

-ஷாம்

இயந்திரமயமாகியுள்ள நவீன உலகில் பரபரப்பும் நேரமின்மையும் எமக்கு நண்பர்களாகி விட்டதுடன் எப்போதும் கூடவே எம்முடன் காணப்படுகின்றன. இவைகளின் அன்புத்தொல்லையால் எந்நேரமும் அவதிப்படும் உங்களுக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தில் படிப்பதற்கேற்ற சுவாரஸ்யமான சின்னத்தகவல்கள் சில இங்கே தரப்படுகின்றன.




உலகில் எத்தனையோ விதமான அழகுராணிப்போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சமீபத்தில் முதன்முறையாக ரஷ்யாவில் பெண் பொலிஸாருக்காக 'மிஸ் செக்கியூரிட்டி' (பாதுகாப்பு) போட்டி நடைபெற்றது. இதில் சிறந்த அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பொலிஸ் ஓல்கா சோலோவ்யோவாவைப் படத்தில் காணலாம்.



மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் வளாகத்தில் செயல்படும் திருவள்ளுவர் கழகத்துக்கு சிகாகோவில் உள்ள உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை சார்பில் பரிசாக வழங்கப்பட்ட தமிழ் எண்களால் வடிவமைக்கப்பட்ட கடிகாரம் இது.



பறவைக்காய்ச்சல் அபாயத்தினால் மனிதர்கள் தமது இறைச்சித் தேவைக்காக வாத்து, புறாக்களை நாடத்தொடங்கி விட்டனர். சீனாவிலுள்ள உணவகம் ஒன்றில் வறுவலுக்குத் தயாராகும் புறா.



பெப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தினம். உலகெங்கும் பலவிதமான கொண்டாட்டங்கள் களைகட்டி ஓய்ந்து விட்டன. அந்தக் கொண்டாடடத்திற்காக ஹொங்கொங்கில் தயாரிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய சொக்லேட் இதயம் இது. நிறை- 992 கிலோ.



சிவனும் பார்வதியும் இணைந்தது அர்த்தநாரீஸ்வரர் திருக்கோலம். அதே போல் கண்ணனும் காதலி ருக்மணியும் இணைந்து ஸ்ரீவித்யா ராஜகோபாலனாக விளங்கும் இந்த அருட்கோலம், மதுரை தெற்கு- மாசி வீதி, தெற்கு கிருஷ்ணன் கோவில் தெருவில் அமைந்திருக்கும் ஸ்ரீபரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலில் காணப்படுகின்றது.

ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற மார்க்கெட்டிங் பிஸினெஸ் காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட 'சிக்மா புக்' எனப்படும் வாடிக்கையாளர் கையேட்டை முதலாவது படத்திலும், சீனாவில் விற்பனைக்கு வரவிருக்கும் கிரெடிட் கார்ட் அளவிலான கமெரா வசதி உள்ள மொபைல் போனை இரண்டாவது படத்திலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுக்கருவியின் உதவியுடன் வண்ண வண்ணக்கனவுகள்

நித்திரைப்பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி. தூங்குபவர்களின் முழுமையான விருப்பப்படி தாம் விரும்பும் வகையான கனவுகளை தாமே உருவாக்கி கண்டு மகிழ்வதற்கு வசதியாக புதிய இயந்திரம் ஒன்று புத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது ஒரு பகற் கனவு அல்ல. நிஜக்கனவுதான். உதா ரணமாக தனக்குப்பிடித்த திரைநட்சத் திரத்துடன் ஒரு உல்லாச சந்திப்பு, ஒலிம்பிக்ஸ் விளையாட்டில் தங்கப்பதக் கம் வெல்லுதல் போன்ற ஒரு நிகழ்வு போன்ற கனவுகளை ஒரு கருவியின் துணையுடன் உருவாக்கிக் காண்பதற்கு தொழில் நுட்பம் துணை செய்கின்றது.

35 அங்குல உயரம் கொண்ட இக் கருவியை யப்பானைச் சேர்ந்த விளையாட்டுப்பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் வடிவமைத்துள்ளது. யப்பானிய மொழியில் 'யுமெமி கோபோ' என்னும் பெயர் இந்த இலத்திரனியல் கருவிக்கு சூட்டப்பட்டள்ளது. இதற்கு கனவுகளின் தொழிற்சாலை என்று பொருள். இப் புதிய கருவியில் ஒருவரின் குரலைப் பதிவு செய்யும் வசதி, மின்னொளிர் விளக்குகள், படம் பார்க்கக்கூடிய திரை, நறுமணம், பின்னிசை, ஒலி பெருக்கிகள், ஒரு கடிகாரம் என்பன உண்டு. இவற்றைக்கொண்டே நித்திரை செய்ய விரும்புபவர் தனக்குப் பிடித்தமான கனவுகளை இசையுடனும், நறுமணத்துடனும், அனைத்து உணர்வுகளுடனும் காண முடிகின்றது.

படுக்கைக்குச் செல்ல முன்னர் நீங்கள் ஒரு சில நிமிடங்களை இக் கருவியுடன் செலவு செய்வீர்கள். பின்னர் உறக்கத்திற்குச் செல்லும் நீங்கள் இந்திரலோகம் வரை அழைத்துச்செல்லப்படுவீர்கள். முதலில் எமக்குப் பிடித்தமான கனவின் முக்கிய கட்டமொன்றின் படத்தை இக்கருவியில் இணைத்து விடல் வேண்டும். பின்னர் இப்படத்திலேயே கவனம் முழுவதையும் செலுத்தி தமது கனவினை விபரிக்கக்கூடிய முக்கியமான சொற்களை கூறுவதோடு அவற்றை அக் கருவியில் பதிவு செய்தலும் வேண்டும். அந்தக்கனவு நிகழ்வது போல உணர்வுகளை வைத்துக்கொள்ளுதலும் வேண்டும்.அடுத்ததாக விரும்பிய நறுமணத்தை தெரிவுசெய்தல் வேண்டும். தொடர்ந்து விருப் பமான இசையினையும் நாமே தெரிவு செய்து விடல் வேண்டும். நறுமணமும் இசையும் எவ்வாறு மனிதர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஆராய்ந்த நிபுணர்களின் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டே இத்தொழில் நுட்பங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.



ஏனெனில் இவற்றின் பின்னணியில் தர்க்கரீதியான காரணங்கள் உள்ளன என்று இதன் தயாரிப்பாளர்கள் தெரிவிக் கின்றனர்.நித்திரை செய்ய ஆயத்தமாகு பவர்கள் இந்தக்கருவியை இயக்கியவு டன் அது மெல்லிசையையும், இலேசான ஒளியையும் வெளிவிட்டு அவர்களை தூங்க வைத்து விடுகின்றது. நபர் நித் திரை செய்ய ஆரம்பித்து வேகமாக மூச்சு விடவும் இக்கருவி இயங்கத் தொடங்கி அடுத்த எட்டு மணி வரை யான நேரத்தில் அவரின் உறக்கத்திற்கு பொருத்தமானதாக செயற்படுகின்றது. அந்நபர் விரும்பிய கனவுகள் மனத்திரையில் தோன்றிக கொண்டிருக்கும் வேளையில் அவர்களின் கட் கோளங்கள் துரிதமாக அசைந்து கொள்ளும். உறக்கத்தின் கனவு தோன்றும் பகுதி சுமார் ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் வரையாக இருக்கும். இதுவே கனவுக்கட்டுப் பாட்டுக்கருவி சுறுசுறுப் பாக இயங்கும் நேரமாகும். இவ்வேளை குறிப்பிட்ட இசையை ஒலிப்பதுடன் குறிப்பிட்ட நறுமணத்தையும் தேவைக் கேற்றபடி இக்கருவி வெளி விடுகின் றது.அத்துடன் பதிவு செய்யப்பட் டிருந்த வார்த்தைகளையும் திரும் பத்திரும்ப ஒலித் துக் காட்டுகின்றது. இதுவே கனவுக்கான உகந்த சூழ்நிலை யாகும். இதை விட ஒவ்வொரு மணித்தி யாலயமும் கடந்து செல்லும்போது அதனையும் இக்கருவி கணிப்பிட்டு வைத்துக் கொள்ளும். இதுவே இக் கருவியின் அதியுச்சப் பயன்பாடு.கனவு காண் பவர் இதனால் நிம்மதியான ஒரு உறக்கத்தை இழப்பதில்லை. இது கவனச்சிதைவை ஏற்படுத்துவதுமில்லை. இனிமையான கனவுகளே மிஞ்சுகின்றன.

-தாரா.

**'தமிழ்உலகம்' உங்கள் வாசல் வர வழி செய்யுங்கள்.**

**'தமிழ்உலகம்' மாத இதழ்கள் வீடுகளுக்குத் தொடர்ந்து வர நீங்கள் செய்ய வேண்டியது கீழ் உள்ள முகவரிகளுடன் தொடர்பு கொண்டு வருட சந்தாக்களை பதிவு செய்து கொள்வது தான். பக்கம் 25 இல் உள்ள சந்தா படிவத்தை நிரப்பி கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**Tamilulagam**
**International Tamil Magazine**
**899-901 Finchley Road,**
**Golders green,**
**London NW11 7PE, UK**
**Tele : 0044 20 8455 9001**
**Fax : 004 20 8731 7870**
**E mail : tu@globallanka.co.uk**

இலங்கை முகவரி
**Tamilulagam**
**Meewella Building, 7th Floor,**
**329,Galle Road, Colombo-04**
**Tele : 0094 112 59 1000**
**Fax : 0094 112 59 1003**
**E mail : globallanka@sltnet.lk**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிகளாலும் மதிக்கப்பட்ட தலைவர் ஸ்டீவ் வோ



ஸ்டீவ் வோ

உணர்ச்சி உள்ளடங்கிய விளையாட்டு கிரிக்கெட். இந்த விளையாட்டில் நீண்ட காலம் ஒருவர் நிலைத்து நிற்பது என்பது எல்லோராலும் இயலாத காரியம். சர்வதேச அரங்கில் 19 வருடங்களுக்கு மேல் நிலைத்து நின்றது மட்டுமல்ல இறுதிக்கட்டத்திலும் கூட தன் திறமையை முழுமையாக வெளிக்காட்டிய வீரர் ஸ்டீவ் வோ (Steve waugh).

ஸ்டீவ் வோ அவுஸ்திரேலிய அணிக்குக் கிடைத்த அளப்பரிய சொத்து என்றுதான் சொல்ல வேண்டும்.

1985 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணியில் இணைந்த ஸ்டீவ்வோ 2004 ஆம் ஆண்டு கிரிக்கெட் வாழ்விலிருந்து விடை பெற்றார்.

அவர் தனது 19 வருட கிரிக்கெட் வாழ்வில் சாதித்த சாதனைகள் பல. 168 டெஸ்ட்டுகளில் 10,927 ஓட்டங்களைக் குவித்த ஸ்டீவ் வோ 57 டெஸ்ட் ஆட்டங்களில் அணியின் தலைவராக செயல்பட்டிருக்கின்றார். 57 டெஸ்டுகளில் 41 டெஸ்ட் ஆட்டங்களில் வெற்றி வாய்ப்பை தேடித்தந்த பெருமை ஸ்டீவ் வோவுக்கே உண்டு.

உலகில் எந்த ஒரு அணித்தலைவருக்கும் கிடைக்காத பெருமை இது. ஸ்டீவ் சிறந்த பந்து வீச்சாளரும் கூட. 168 டெஸ்டுகள் ஆடிய வோ 92 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 112 கச்சு(Catches)க்களைக் கைப்பற்றியுள்ளார்.

இந்திய அணியுடன் ஸ்டீவ் ஆடிய இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் அடித்த இறுதிப்பந்தை தாங்கிப்பிடித்தவர் சச்சின் டெண்டுல்கர். இந்த இறுதி அடியில் தன் இதயம் உணர்ச்சி வசப்பட்டதை அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஏற்றுக் கொள்கின்றார்.

எதிரிகளாலும் மதிக்கப்பட்ட ஓர் அணியின் தலைவர் ஸ்டீவ் வோ என்றால் அது மிகையான கூற்றல்ல.

கிரிக்கெட் சம்பந்தப்படாத ஓர் உறவை இந்தியாவுடன் ஸ்டீவ் வோ வைத்திருந்தமை பலருக்குத் தெரிய நியாயமில்லை.

1988 ஆம் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தா நகரில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் ஆடிய டெஸ்ட் ஆட்டத்தின் போதே உதயன் என்ற தொழுநோயாளிகளை பராமரிக்கும் நிலையத்துடன் ஸ்டீவுக்கு உறவு ஏற்பட்டது.

“பத்து ஆட்டக்காரர்களின் தலைவனாக அவுஸ்திரேலிய அணியில் செயல்படுவதை விட உதயனுடன் வைத்திருக்கும் உறவும், பொறுப்பும் அதிமுக்கியமானது” என்று ஸ்டீவ் ஒரு சமயம் குறிப்பிட்டார்.

ஸ்டீவ் வோ அமெரிக்காவின் சுற்றுலா ஸ்தானிகராக கடந்த செப்டெம்பரில் நியமிக்கப்பட்டபோது சுற்றுலா அமைச்சரான ஜோ.றொக்கே பின்வருமாறு குறிப்பிட்டார்.

“கிரிக்கெட் இந்தியாவில் மிகச்சிறந்த விளையாட்டாக கருதப்படுகின்றது. ஸ்டீவ்வோ இந்த நாட்டின் சிறப்பிக்கப்படக்கூடிய அந்தஸ்தை அடைந்து விட்டார்.

உலகின் தலை சிறந்த ஆட்டக்காரரான டெண்டுல்கர் ஒரு சமயம் ஸ்டீவின் சொந்த ஊரான சிட்டினியில் உள்ள மைதானத்தில் வைத்து அவரை வெகுவாகப் பாராட்டும்போது “எங்களைப்போன்ற இளைஞர்களுக்கு நீங்கள் ஒரு தலை சிறந்த ஆதர்ஸ புருஷராக விளங்குகின்றீர்கள்”என்றார்.

‘ஸ்டீவ்வோ’ எல்லோருக்குமே ஒரு முன்னுதாரணம். தலைசிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர். எதிரிகளால் கூட மதிக்கப்படக்கூடியவர்.“ Wough was a role model and a fine cricketer an opponent all learnt to respect” என ஸ்டீவ் குறித்து டெண்டுல்கர் மேலும் குறிப்பிட்டார்.

ஸ்டீவ் வோவைப்பற்றி இன்னுமொரு நல்ல அபிப்பிராயம் கிரிக்கெட் ஆட்டக்காரர் மத்தியல் நிலவியது. அதுதான் தனக்குக் கீழ் ஆடும் ஆட்டக்காரர்களை நன்கு புரிந்து வைத்துள்ளார் என்பது.

19 வயதில் ஆடத்தொடங்கிய வோ தனது 38 ஆவது வயதில் கிரிக்கெட் உலகிற்கு விடை கொடுத்துள்ளார்.

**-நெய்தல் நம்பி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கப்படும் போராட்டம்




இலங்கையின் பெருந்தோட்டத்துறை சார்பில் பங்குபற்றிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தலைவர் திரு.பெ.முத்து லிங்கம், கி.யோகேஸ்வரி



முழு உலகத்திற்குமான ஒற்றைச்சந்தை முறையினை அடிப்படையாகக்கொண்டு, தேசிய ரீதியான வர்த்தக தடைகள் நீக்கப்பட்டு, தேசிய பொருளாதாரத்தை உலகச் சந்தையுடன் இணைக்கும் உலக மயமாக்கல் கொள்கை உலகளாவிய ரீதியில் விரிவு படுத்தப்படுகின்றது.




பெண்களுக் கெதிரான வன்முறைகளைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்டம்

2004 ஜனவரி 16-21 ஆம் திகதி வரை இந்தியாவின் பம்பாய் நகரின் நெஸ்கோ மைதானத்தில் இது தொடர் பான மாநாடு நடைபெற்றது. இங்கு பல அமைப்புக்கள் ஒன்று கூடி பெண்களுக் கெதிரான வன்முறை,பெண் களும் உலக மயமாக்கலும் போன்ற தலைப்புக்களில் செயலமர்வுகளை நடத்தின.உலகமய மாக்கலும் தேயிலைத் தோட்டத தொழிலாளர்கள் மீதான அதன் தாக்கமும் எனும் தலைப்பிலான செயலமர்வில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், கென்யா, தன்சானியா ஆகிய நாடு களின் பிரதி நிதிகள் பங்கு பற்றினர். இலங் கையின் மலை யகத் திலிருந்து சென்ற பிரதி நிதிகள் பல கருத்துக்களை முன் வைத்தி ருந்தனர்.'சர்வதேச தேயிலை தினம்' பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். செயல மர்வின் இறுதியில் சில தீர்மானங்களும் நிறைவேறின. பெண்களின் சமபங்களிப்பு,சம பிரதிநிதித்துவம், பாலியல் வன்முறை தொடர்பான துயரங்களை அணுகும் வரை யிலான பெண் உத்தியோகத்தர்களின் குழுக்கள் பற்றியவையாக அவை இருந்தன.



இறுதி நிகழ்வில் பாகிஸ்தானின் சுத் சவான் பக்கீர் குழுவின் இசை நிகழ்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமக்கள் தேடல்

## மணமகன் தேவை

ஜேர்மனியில் வசிக்கும் யாழ் நகரைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணுக்கு ஐரோப்பாவில் நிரந்தர விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம் - ஆயிலியம்
REF: GEF112

பிரித்தானியாக் குடியுரிமை பெற்ற கணக்காளராகப் பணிபுரியும் 34 வயதுடைய பெண்ணுக்கு, பல்கலைக்கழக பட்டதாரி (வைத்தியர், கணக்காளர், பொறியியலாளர்) மணமகன் தேவை. நட்சத்திரம் - திருவாதிரை

REF: UKF113

இலங்கை, 32 வயதுடைய உயர்தர கல்வி தராதரம் பெற்ற பெண்ணுக்கு ஐரோப்பாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை
REF: SL114

இலங்கை, 28 வயதுடைய கலைத்துறையில் உயர்தரம் படித்த பெண்ணுக்கு இங்கிலாந்தில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை.
REF: SLF115

இலங்கை: யாழ் அரசாங்க மருத்துவமனையில் தாதியாக பணிபுரியும் 28 வயதுடைய பெண்ணுக்கு, வெளிநாட்டில் விசாவுடன் கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம் - கேட்டை
REF: SLF116

## மணமகள் தேவை

ஜேர்மனியில் 12 வருடங்களாக இருக்கும் ஆணுக்கு, ஐரோப்பா அல்லது வட -அமெரிக்கா நாடுகளில் விசாவுடன் இருக்கும் மணமகள் தேவை. ராசி - கடகம்
REF: GEM117

பிரித்தானியக் குடியுரிமை பெற்ற 35 வயதுடைய இலத்திரனியல் பொறியியலாளருக்கு ஆங்கில மொழிப்பட்டதாரி மணமகள் தேவை. நட்சத்திரம் - ரேவதி
REF: UKM118

10 வருடங்களாக பிரித்தானியாவில் வசிக்கும் தென்மராட்சியைச் சேர்ந்த முகாமையாளராகப் பணிபுரியும் 34 வயதுடைய ஆணுக்கு பிரித்தானியாவில் வசிக்கும் 30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை
REF: UKM119

இலண்டனில் வசிக்கும் 32 வயதுடைய நிரந்தர விசா பெற்ற ஆணுக்கு இங்கிலாந்தில், ஐரோப்பாவில் அல்லது இலங்கையில் வசிக்கும் மணமகள் தேவை.

REF: UKM120

யாழ். மாவட்டத்தை சேர்ந்த பிரித்தானியாவில் குடியுரிமையுடன் இருக்கும் 27 வயதுடைய இயந்திரவியல் பொறியியலாளருக்கு 25 வயதுக்குட்பட்ட அழகிய மணமகள் தேவை. தமிழ், ஆங்கிலம் நன்றாகப் பேசத்தெரிந்த பெண் விரும்பத்தக்கது.
REF: UKM121



மேலதிக விபரங்களுக்கு தமிழ்உலகம் சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல.
**0044 20 8455 9001**

தமிழ்உலகத்தில் உங்கள் சிந்தனையில் உதிக்கும் ஆக்கங்களை நகர்த்த ஆவன செய்யுங்கள். கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, சிறுவர் சிந்தனைக்குரிய ஆக்கங்கள் போன்றவற்றை எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். தமிழ்உலக ஆசிரியர்பீடத்தின் [illegible] இணங்க தரமானவை பிரசுரிக்கப்படும்.

தமிழ்உலகம் விளம்பர அறிவித்தல்களுக்கும் தொடர்புகளுக்கும்

தலைமைக்காரியாலயம்
TAMIL ULAGAM INTERNATIONAL MAGAZINE
899 - 901 Finchley Road, Golders Green
London NW11 7PE, The United Kingdom

Tel: 0044 20 8455 9001 Fax: 0044 20 8731 7870 email: tu@globallanka.co.uk

இலங்கைக்கிளை
Meewella Building, 7th Floor
329, Galle Road, Colombo - 4, Sri Lanka

Tel : 0094 112 59 1000 Fax : 0094 112 59 1003 email: globallanka@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிஸ்மாநகரில் கீழத்தேயவாசனையில்
சைவ, அசைவ உணவுவகைகளை
அதிஉயர்தர சுவையுடன் வழங்கும்
ஒரே உணவகம் கிருஷ்ணா பலைஸ்




சுத்தம்
சுவை
தரம்



*PALAIS DE KRISHNAA*
*RESTAURANT INDIEN*
***Spécialités Indiennes***
***Curry & Grillades Tandoori***

**16, Rue du Père Guérin**
**75013 Paris**
**Tél. : 01 45 88 69 92**
***Métro : Place d'Italie***




K. T.
COLOMBO TASTE
Sri Lankan &
South Indian
Cuisine

100 இடியப்பம் சொதி, சம்பலுடன் £14 மட்டுமே.
அத்துடன் உடன் றொட்டிகளுக்கும் நாடுங்கள்
கொழும்பு சுவையகம்.



**Proprietor**
**C. Mohan**

**Telephone**
**020 8991 6834**

**Mobile**
**07958 938 939**

**5 Bilton Road, Perivela, Greenford, Middx**
**UB6 7AY, England**

KAMALAM'S
SALE CENTRE



இலங்கை, இந்தியா, தாய்லாந்து,
மற்றும் உலகின் பல
பாகங்களில் இருந்தும் இறக்குமதி
செய்யப்படும் உடன் மரக்கறி
வகைகள்!

கடலுணவுப் பொருட்கள்:-
மீன், இறால், நண்டு, கணவாய்!!

பத்திரிகைகள், வார-சஞ்சிகைகள்,
புதிய, பழைய, திரைப் படங்கள்
Audio, Video,CD,DVD

அனைத்தையும் பெற்றுக்கொள்ள
பேர்லின் மாநாரில் ஒரேஸ்தாபனம்
கமலம் வர்த்தக நிலையம்

*All international calling cards*
*available for retail & wholesale*

**KAMALAM'S**
**Sale Centre**
**Fulda Str - 12**
**12045 Berlin**
**Germany**
**Te: 030 623 9362**
**Fax: 030 623 7126**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Jeya Cakes



Weddings
Anniversaries
Birthdays
All other events

HAPPY NEW YEAR 2004

அழகான வர்ணவடிவமைப்பில் குறித்த நேரத்தில் தரமான கேக் வகைகளை பெற அழையுங்கள்

Mrs. Jeja David Tel: 07930 379 111 (London)



ENGLISH & CONTINENTAL FOOD

SPIRITS
WINE
BEER
CIDER




## TRUMPET FOOD & WINE

10 Queensbury Station Parade
Queensbury, Middlesex HA8 5NR
England.

Tel: 020 8952 9926
Fax: 020 8952 0201

## JR Universal Charity Organisation

### ஜே.ஆர்.உலக தர்ம நிறுவனம்

One of the most effective ways we can bring about positive, permanent change is by helping our Tamil People in Sri Lanka.

Together, we can supply our people with food, clean clothes and proper medical care. Together, we can fund projects that will help to raise living standards of those in need.

JR Universal Charity Organisation is able to save lives in emergencies and change lives through development. We couldn't do it without the generous donations of our patrons . . . all of you. By joining our charity you will have a direct influence over the lives of your people in Sri Lanka. Just a small donation makes a big difference if we do it together.

For more details about the work of JR Universal Charity Organisation, please call Jesu or Ramona on 020 7229 5169 (9:30am – 5:30pm). We would be very happy to hear from you

JR Universal Charity Organisation,
52 Queensway, London W2 3RY
Tel/Fax: 020 7229 5169



இலங்கையின் தமிழர்களுக்கு உதவுவதன் மூலமே ஒரு நிரந்தர மாற்றத்தைக் காணமுடியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORELAND
Land & Development

M

**Property Development**
**Building Work**
**Design & Planning**
**Construction**

**All types of Building work undertaken to include .....**

Loft Conversions
Home Extensions
Conservatories
House Renovation
Kitchens & Bathrooms
Patios & Gardens

Free Estimates

**Moreland land & Development**
**899 - 901 Finchley Road**
**London NW11 7PE**

**Tel: 020 8455 9001**
**Fax: 020 8731 7870**

**Email: info@globallanka.co.uk**
**www.globallanka.co.uk**

சகல கட்டட - வீட்டு வேலைகளையும் குறித்த நேரத்தில்

தகுந்த முறையில் முடித்துத்தர தரமான நிறுவனத்தை நாடுங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு:-
பாலா : 020 8455 9001




# CAAVERI PRODUCTS




80 Mark house Road
Walthamstow
London E17 8DG
England

Tel: 0044 20 8520 1923
Mobile: 0044 79 8445 6887

Fax: 0044 20 8509 7487

சர்வதேச ஏற்றுமதியாளர்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORELAND International

## Land and Development

### வீடுகள் காணிகள் விற்பனைக்கு (கொழும்பு)

| | | | |
|---|---|---|---|
| Colombo - 06<br>close to W.A.Silva MW<br>21.5 P- 10.P.P Nego | Colombo - 04<br>Devos Avenue<br>13.6 P.16 LKS P.P | Colombo - 03<br>Facing Galle Road<br>60 P - 20 LKS P.P | Colombo - 06<br>W.A.Silva MW<br>Land - 7.41 P. 15P.P |
| Dehiwala<br>5B/R House in 17 P<br>13.6 Mil | Colombo - 06<br>Land<br>41 P close to savoy cinema<br>Facing Galle Road<br>20 LKS P.P | Colombo - 6<br>Francis Road<br>Lands - 51 P.17.5 P.P | Colombo - 08<br>Kinsey Road<br>44 P. P-15 P.P(Nego) |
| Colombo - 06<br>Boswel Place<br>17 P-with 4B/R<br>House 17 P.P | Colombo - 06<br>(Vaverset Place)<br>4B/R House in<br>14 P - 21 Mil | Colombo - 06<br>Charlemont Road<br>Upstair House 950 SQ/FT<br>2 B/R - 4 Mil(Nego) | Colombo - 03<br>Land - in 17 th Lane<br>7.13 P.14 LKS P.P |
| Colombo - 04<br>Joseph Lane<br>5 B/R-Luxury House<br>with 3 car park<br>28 Mil | Colombo - 03<br>50 P Land in 10 th lane<br>with the Beach view<br>12.5 P.P | Colombo - 06<br>19 p Land in<br>Marine Drive<br>15 P.P | Colombo - 06<br>Manning Place<br>2 Storied house<br>3 B/R - With Roof<br>top Terrace<br>7.8 P - 15 Mil |

மேலதிக தொடர்புகளுக்கு
FOR MORE INFORMATION PLEASE CONTACT

**London Office**
T: 0044 20 8455 9001
F: 0044 20 8731 7870
E: global@moreland.uk.com

**Sri Lanka Office**
T: 0094 12 59 1000
F: 0094 12 59 1003
E: globallanka@sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Yaalini Europe Ltd

## New Fashion Tamil Trader

The UK's No.1 and Europe's leader in imports, exports and wholesale of quality Srilankan and Indian products including fresh vegetables

We supply many more leading brands

MD LARICH LION Elephant Soft Drinks

Our own products include:
Yaalini products, Thiru products, Yaalsea products and Yaalini Frozen Foods

The No.1 Brand for Tamil Foods

## J&K Group

unit 10, Kimpton Business Centre, Minden Road
Sutton, Surrey SM3 9PF,UK

Tel : 020 8641 1161 (10 lines)  Fax : 020 8641 8668



Best Food 4 U

UK's No.1 SALE - SUVAI PRODUCTS



# SATHIY STORE

## Basel

உலகின் சகல நாடுகளுக்கும் துரித கதியில்
பணமாற்றுச் சேவை! அவசர தேவைகளை
முன்னிட்டு சில மணி நேர வேலை
நம்பகமான - பாதுகாப்பான – விரைவான
துரித சேவைக்கு நாடுங்கள் சக்தி தமிழ்க்கடை



**Fast cash – send today – collect within 1 hour**

Tel : 061 383 8686
Fax : 061 383 8688
H.P : 079 669 4207

K.SATHIY
SPALEN RING 17
4055 – BASEL
SWITZERLAND



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GLOBAL TOWERS


## APARTMENT HOTEL

COLOMBO - SRI LANKA

விடுமுறை நாட்களில் உல்லாச வசதியை
அதிஉயர் தரத்துடன் தருவது
குளோபல் தொடர்மாடி வீடுகள் மட்டுமே

**ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு £10இல் இருந்து***





- நீச்சல்தடாகம்
- உணவகம் (சிற்றுண்டிச்சாலை)
- 24 மணிநேர அறை பராமரிப்பு
- நீராவிக்குளியலறைகள்
- 24 மணிநேர பாதுகாப்பு
- உடற் பயிற்சி நிலையம்
- திருமண மண்டபம்

**வீடுகளின் தராதரங்கள்**

- முழுமையான சமையல் அறைகள்
- 3 இரட்டை படுக்கை அறைகள்
- 3 குளியல் அறைகள்
- முழுமையான சேவை வசதிகள்
- மத்திய குளிரூட்டி வசதிகள்
- முழுமையான தளபாட வசதிகள்
- பளிங்குக்கல் கொண்ட நிலம்

For all the facilities of a prestige hotel with the privacy and comfort of your own high specification apartment, rent an apartment at Global Towers for any period of time . . .

From a short overnight stay to a year-long lease, the apartments can cater for up to 8 people and also offers single occupancy rates.

Each fully furnished apartment consists of 3 double bedrooms and 3 bathrooms en-suite.

* வீட்டு வாடகைகள் ஒரு இரவுக்கு 8 பேர்கள் இருக்கக் கூடியதாக கணிக்கப்பட்டுள்ளது.

**திருமண வைபவங்களையும்
தங்கும் இருப்பிட வசதிகளையும்
ஒரே இடத்தில் அமைத்துக் தருவது
குளோபல் உல்லாச விடுதி வீடுகள்**

**முற்கூட்டிய பதிவுகளுக்கு அழையுங்கள்**

0094 12 59 1000 (Sri Lanka)
0044 20 8455 9001 (UK)

www.globallanka.co.uk
E mail : info@globallanka.co.uk

A project by Global Lanka

Global Investment Lanka Holdings Limited, 899-901 Finchley Road, London NW11 7PE, UK




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# One Source (inc) Ltd.

OSL

SPECIALISING IN

Home mortgage
Buy to let mortgage
Commercial mortgage
Commercial loan

உலகின் எந்தப்பாகத்தில் இருந்து வந்தும் பிரித்தானியாவில் வீடுகள் வாங்க
சகல வீட்டுக்கடன் வசதிகளும் செய்துதரக் காத்திருக்கிறார்கள்

தொடர்புகளுக்கு: மருதன் சபா
Tel: 020 8204 6968 (London)
Mobile: 079 1925 3925

# T K Siya Bhavan

SRI LANKAN & SOUTH INDIAN CUISINE

*We cater for all occasions*



திருமணம், பிறந்தநாள், மற்றும் அனைத்து விசேட
நிகழ்வுகளுக்கும், குறித்த நேரத்தில் தரமான பல்சுவை
உணவுவகைகளை வழங்கும் ஒரே நிறுவனம் T K Siya Bhavan

கலை கலாசார பண்பாட்டு நிகழ்வுகளுக்கான அழைப்புகளுக்கு
அதி விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்
சியுடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

7 THE PARADE, BUDBURY HEIGHTS AVENUE,
GREENFORD, MIDDLESEX, UB6 0LZ, ENGLAND

**Tel : 020 8902 8083**
Mobile: 07958 31 95 63

# Vahizan Disc World

Get up to 10% off !!! From our online shopping!!!



வாகீசன் டிஸ்க் வேள்ட்


எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டீவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக்குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.
இவற்றை விட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப்பாடல்கள், கர்னாடகவார்த்தியஇசைகள் யாவும் **MP3,AUDIO CD, CASSETTE** ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.

WE SELL TITLES FROM INRECO,GEETHANJALI,VEDU,
RPG,AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES!

Vahizan Disc World
528 Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com

Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com

# Rathy Jewellers



நாள்தோறும் புத்தம் புது வடிவங்களுடன்
எப்போதும் மலிவு விலை

28 Ealing Road, Wembley
Middlesex HA0 4TN, Englan
Tel: 020 8903 3063 Fax: 020 8903 9711




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு - வெள்ளவத்தை
கடலோரத்தில் உயர்தர
உல்லாச வீடுகள்




56 வீடுகளில் 3 வீடுகள் மட்டுமே
விற்பனைக்கு உண்டு Global
Tower வழங்கும் இறுதிச்சலுகை.

50% வீட்டுக்கடன்(Mortgage) வசதிகளுடன்
3 வருடத்திற்கு 10% வாடகை வருமான உத்தரவாதத்தையும்
வழங்குகின்றார்கள் குளோபல் முதலீட்டு நிறுவனத்தினர்.

Global Investment Lanka Holdings Limited.
899 - 901 Finchley Road, Golders Green
London NW11 7PE, The United Kingdon

T: 0044 20 8455 9001
F: 0044 20 8731 7870

E-mail: info@globallanka.co.uk
www.globallanka.co.uk

GLOBAL TOWERS

APARTMENT HOTEL · COLOMBO SRI LANK

Global Towers is an ideal choice to combine your holiday in
Sri Lanka together with an investment opportunity

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Competitive Rates to All Countries A-Z

**Fantastic rates - call Sri Lanka from 10p**

සිගිරි
சிகிரி
SIGIRI ™

enjoy
# home comforts
with a Sigiri*Home* account

from Sri Lanka Telecom

மலிவான விலை - தெளிவான ஒலி - விரைவான இணைப்பு



*best prices - best connections - best quality*

**visit www.sigiri.net or call our hotlines on 0800 485 1110 (24 hours) or 020 7094 9494**

Sri Lanka Telecom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org